


# மாவீரன் பண்டாரவன்னியன்

தென்மோடி நாட்டுக்கூத்து

# கண்ணகி

தென்மோடி நாட்டுக்கூத்து

அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ்

KALAIKURUSIL.COM

# மாவீரன் பண்டாரவன்னியன்

தென்மோடி நாட்டுக்கூத்து

# கண்ணகி

தென்மோடி நாட்டுக்கூத்து

# மாவீரன் பண்டாரவன்னியன்

தென்மோடி நாட்டுக்கூத்து

# கண்ணகி

தென்மோடி நாட்டுக்கூத்து

எழுத்துருவாக்கம்

**அண்ணாவியார்**

**சவிரிமுத்து மிக்கேல்தாஸ்**

உயிர்மெய்

**மாவீரன் பண்டாரவன்னியன்**
**கண்ணகி**
(தென்மோடி நாட்டுக்கூத்து)
நூலாசிரியர்: அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ்
பதிப்புரிமை: ஆசிரியர் கலைக்குரிசில் கலாமன்றம்
இணைய தளம்: www.kalaikurusil.com

முதற்பதிப்பு: 2014
வெளியீடு: உயிர்மெய்
அட்டைப்படம்: மி. மில்டன்
தட்டச்சு: சூ. றெபின்சன்
நூல் வடிவமைப்பு: ஜீவமணி
அச்சாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை 600 005

**விலை: ரூ 150**

**Maveeran paNdaravanniyan**
**KaNNaki**
(thenmodi nattukoothu)
Author: Annaviyar savirimuthu mickeldas
Copyright: aasiriyar Kalaikurisil kalamanram
Website: www.kalaikurusil.com

First Published: 2014
by uyirmei
Kaptein Linges vei 9A, 6006 Aalesund, Norway.
E-mail: banu.nor@gmail.com
Cover Design: M. Milton
Typeset: S. Robinson
Layout: Jeevamani
Printed by: Jothy Enterprises, Chennai 600 005

**Price: Rs. 150**

தமிழகத்தில் விநியோகம்:
**கருப்புப் பிரதிகள்**
பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை
சென்னை 600 005 பேச: 9444272500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com

# பதிப்புரை

மெலிஞ்சிமுனை அண்ணாவியார்
அமரர் கலைக்குரிசில் நீ.வ. அந்தோனி அவர்களின் பேரனார் அண்ணாவி ச. மிக்கேல்தாஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட "மாவீரன் பண்டாரவன்னியன்" "கண்ணகி" ஆகிய இரண்டு தென்மோடிக் கூத்துக்களை அச்சுப் பிரதியாக வெளிக்கொணர்வதில் பெருமையும், பெரு மகிழ்வும் அடைகின்றோம். யாழ்.தீவகத்தின் கூத்து பூமியான மெலிஞ்சிமுனைக் கிராமத்தினதும், மக்களினதும் பாரம்பரியச் முதிசமான "மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் கலாமன்றம்" ஈழத்தின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றான தென்மோடிக்கூத்தினை இன்றுவரை கட்டிக் காத்தும், இடையறாது அரங்காற்றிக்கொண்டும் வருகின்றது. யுத்தகாலங்களிலும் ஏதிலிகளாக ஓடுமிடமெல்லாம் இந்த மக்கள் கூத்துக் கலையையும் தம்மோடு காவிச்சென்று அரங்காற்றிய வரலாறுகள் மறக்க முடியாதவை. 1988ம் ஆண்டிலிருந்து மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் கலாமன்றம் தற்போதுவரை பல கூத்துக்களை அரங்காற்றி வருவது மட்டுமல்லாமல் "கலைக்குரிசில் கலாமன்றம் சர்வதேச ஒன்றியம்" என ஸ்தாபித்து கூத்துப்பணி ஆற்றுவதையிட்டு நம்பிக்கையோடு பெருமை கொள்கிறோம். அண்ணாவியார் ச. மிக்கேல்தாஸ் அவர்கள் கனடாவில் வசித்தபோதும் கூத்துக் கலைக்காக தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்து இயங்குவதை இவ்வேளையில் மகிழ்ந்து நினைவு கொள்வதோடு, அவரது கூத்துக்களை பிரதியாக வெளியிடும் பணியினை எமக்களித்ததையிட்டு நன்றி சொல்லிக் கொள்கிறோம்.

**பானுபாரதி**
**உயிர்மெய் பதிப்பகம்.**



## அன்னைக்கு அர்ப்பணம்

**அ**கிலத்தின் அகராக - குறள்
**ஆ**ரிதம் நெறி அடைக்கலமா அவதரித்தாய்
**இ**லங்கிடும் இல்லறத்தில் - இணைந்து
**ஈ**ர் தமிழ் ஒன்பதை ஈன்றெடுத்தாய்
**உ**லகிசை பகலோனின் - ஒளியாக
**ஊ**ர் போற்ற வாழ்ந்தாய்
**எ**ண் மானம் ஊட்டி - எம்மை
**ஏ**ணியாய் ஏற்றுவித்தாய்

அன்னை தமிழின், அழகிய சுடர்களால்
அகல் விளக்கேற்றி அர்ப்பணம் செய்கின்றோம்



# முன்னுரை

## உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன்

**த**மிழினத்தின் பெருமைகளை பறைசாற்றுவது கலை கலாச்சாரம், பண்பாடு ஆகியவையாகும்.

இயல் இசை நாடகமாய் தமிழுக்கு முத்தமிழ் சிறப்புண்டு, தமிழீழத்தின் கலைகளில் நாட்டுக்கூத்து எம் மிகப்பழைமையான சொத்தாகும்.

தமிழீழமண் இசைக்கூத்து என்பதை பாரம்பரிய மரபுக்கலையாக போற்றி பாதுகாத்து வருகின்றது. இசையில் மிகச்சிறந்து விளங்கிய காரணத்தால்தான் இசை வடிவமான யாழைப்பெயராகக் கொண்டு யாழ்ப்பாணம் என்ற ஊர் அமைந்ததும் - யாழ்பாடி வாழ்ந்தான் என்றும் வரலாறு கூறுகின்றன.

தமிழிற்கு முதலில், இசைத்தமிழ் ஆவணநூலை தந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் மட்டக்கிளப்பின் தென்கோடியில் பிறந்து, இசை கலையை வளர்த்தும் தமிழ் பண்பாட்டிற்கு பெருமையும் சேர்த்தார்.

மட்டக்கிளப்பில் அண்ணாவி மரபில் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் எப்படி சிறப்புற்று விளங்குகின்றதோ அப்படியே மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கூத்துக்கள் பெருமை பெற்று விளங்குகின்றது.

இன்று உலகெங்கும் போற்றப்படுகின்ற பரதநாட்டியத்தின் ஆரம்ப விதையாக நாட்டுக்கூத்துக்கள் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் இக்கலை பல வடிவங்களாகவும், தெருக்கூத்தாகவும் ஆடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணம் மெலிஞ்சிமுனை மண்ணில் வாழ்ந்த கலாமேதை கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அவர்கள், அக்காலத்தில் நம் கூத்துக்கலை பாரம்பரியத்தை தொடக்கி முடுக்கிவைத்து உயிரூட்டி புத்துயிர் அளித்தார்.

கலைக்குரிசில் அவர்களின் கலைப்பணியின் பயனாக அவரால் உருவாக்கப்பட்ட கலைக்குழுமம் வழிவழியாக பரம்பரை தொடராகவும், இன்றுவரை கூத்துக்கலையை பேணிப்பாதுகாத்து வருவதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

கலைக்குரிசிலுக்குப்பின், கலாவருணன் சவிரிமுத்து அவர்களும், தந்தை வழியில் மிகச் சிறப்பான முறையில் கூத்துக்கலையை வளர்த்து வந்துள்ளார்.

இன்று அவர்களின் வழியில், கலாவருணன் சவிரிமுத்து அவர்களின் மகன் அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள் யாழ்ப்பாணம் போற்றிப் பாதுகாக்கும் தமிழீழத்தின் அரும்பெரும் சொத்தான தென்மோடி நாட்டுக்கூத்தை புலம்பெயர் நாடுகளில் மேடையேற்றி வளர்த்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

காக்கையின் கூட்டில் முட்டை இடுகின்ற குயிலின் நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, நோர்வே, அவுஸ்ரேலியா என உலகெங்கும் பரவி வாழ்கின்றோம் - காக்கையின் கூட்டிலிருந்து நமது முட்டை குயிலின் குஞ்சாக இன அடையாளத்துடன் வரவேண்டும்.

புலத்தில் இவ்வாறாக, அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள் கனடாவில் 6வது உலகத் தமிழர் பண்பாட்டு மகாநாட்டில் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான ‘கண்ணகி’ வரலாற்றை நாட்டுக் கூத்தாக எழுதி மேடையேற்றியமையும்,

நோர்வே நாட்டில் ‘வீரசுதந்திரம்‘ என்னும் கூத்தை எழுதி இனிய இசையுடன், மனதைக் கவரும் வீர காவியமாக பாரம்பரிய பழமைக் கலை மூலம் பதிவு செய்துள்ளார்.

காக்கையின் கூட்டில் குயிலின் குஞ்சாக, இன அடையாளத்தை வெளிப்படுத்தும் பணி பாங்கானது.


நான் சின்னஞ்சிறு அகவையில் அந்தக் காலத்தில், மின்விளக்குகளே இல்லாத அந்த நாட்களில் மட்டக்கிளப்பில் தீப்பந்த ஒளியில் அந்த பிஞ்சு வயதிலிருந்து நாட்டுக் கூத்துக்களைப் பார்த்து சுவைத்து மகிழ்ந்தவன் என்ற உணர்வோடு இக்கலையை எவ்வளவு சிறப்பாக திரு. மிக்கேல்தாஸ் அவர்கள் வளர்த்து வருகின்றார் என்பதை என்னால் உணர முடிகின்றது.

கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அவர்களின் மரபில் வந்த மிக்கேல்தாஸ் அவர்கள் இம்மலரில் தமிழீழ மண்ணின் வீரம் விளையாடும் வன்னி நாட்டின் சுதந்திர மாவீரன் பண்டாரவன்னியன் வரலாற்று வடிவத்தை நாட்டுக்கூத்தாக படைத்திருக்கின்றார்.

பண்டாரவன்னி வேந்தன் படை கண்டால்
உடலில் ஆவி உண்டா போயிற்றா என்றே
ஓடுவார் ஒளிவார் மாற்றார்
விண்டாலும் சொல்லை மிஞ்சும்
வீரத்தான் தமிழீழத்தான்- துண்டாடிப்
போட்ட வெள்ளைத்துரைமார்கள் தலையும் உண்டோ

வீறு கொண்ட வேங்கையாய் மும்முனைத் தாக்குதலுக்கு ஈடு கொடுத்து மூர்க்கமாய் தாயக விடுதலைக்காய் போரிட்ட பண்டாரவன்னியனின் இதயங்கவர்ந்த காதலியாக வீரமங்கை குருவிநாச்சியாரும், பாசமிகு தங்கை நல்லநாச்சியாரும், ஆருயிர் நண்பனாக கண்டியரசன் கண்ணுச்சாமியும், ஆங்கில ஆதிக்கத்திற்கு இடந்தரக்கூடாது உறுதிபூண்டு போராடுவதை இலக்கிய நடையில் சுதந்திர வேட்கையூட்டி நாட்டுப்பற்று இன உணர்வை வெளிப்படுத்தும் விதமாக அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள் பாடல்களை உயிரோட்டமாக வடித்திருக்கின்றார். அவரின் இக்கலைப் பணியை நான் மீண்டும் மீண்டும் வாழ்த்துகின்றேன், போற்றுகின்றேன் - வளர்க அவர் கலைப்பணி.

◉



## கட்டியம்:

# எம். அரியநாயகம்

(தலைவர், பிரான்ஸ் கலாச்சார ஒன்றியம், ஆசிரியர் ‘உடல்’ பத்திரிகை)

---

**வ**ரையறுக்கப்படாத காலத்திலிருந்தே கூத்துக்கள் எமது கலைச் சொத்துக்களாகவும், தமிழர்களின் பண்பாகவும் திகழ்ந்து வருகிறது.

அன்றைய மக்கள் இரவு முழுவதும் விழித்திருந்து கூத்துக்களை ஆர்வத்துடன் கண்டுகளித்து வந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்கள் பழமையான எமது இலக்கியங்களில் தொகையும், பாட்டாகவும் நிறையவே உண்டு. கால ஓட்டத்தில் கூத்துக் கலையானது மனித மனங்களைக் தொட்டுத் தூக்கி வாழ்தலுக்கான வலிமையையும், நம்பிக்கையையும் ஊட்டும் சக்திவாய்ந்த ஊடகமாகவும் உருவாக்கம் பெற்று வந்துள்ளது என்றால் மிகை ஆகாது.

இசை வடிவினில் சொல்லப்படும் விடயங்கள் மக்கள் மனங்களில் மிகவும் இலகுவாக அதே நேரம் ஆணித்தரமாக பதியம் பெற்றுவிடும் என்பதால் எமது முன்னோர்கள் இக்கலையை மகிழ்வூட்டும் பொழுதுபோக்கு வடிவம் என்பதையும் தாண்டி காண்போருக்கு விழிப்புணர்வைத் தந்து

அவர்கள் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் வடிகலாகவும் அமைத்துக்கொள்ள ஆற்றுகைப்படுத்தி வந்துள்ளனர்.

இன்றைய விஞ்ஞான ஒலிப்பதிவு சாதனங்கள் கண்டுபிடிக்காத வரை காலம் காலமாக எமது மூத்தோர் கூத்திசையை தமது நினைவுகளிலேயே பதிவாக்கி, பாம்பரியமாகவும் - பரம்பரை பரம்பரையாகவும் அடுத்த தலைமுறையினருக்கு கடத்தி வந்துள்ளார்கள் என்பது எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இவ்வரிய கலையின் தொன்மையையும், வலிமையையும் உள்ளடக்கத்தினையும் நன்றே உணர்ந்து கொண்டதனால்தான் 1500களில் எமது மண்ணில் கால்பதித்த போர்த்துக்கேயர் இக்கலையையும் தமதாயுதமாக்கிக் கொண்டனர். தமது குறிக்கோள்களை வென்றடையவும், தமது எண்ணங்களை உயிரோட்டப்படுத்தவும் உகந்த கருவியாக இதனைக் கையிலெடுத்து தமது கள அரங்காக உருவாக்கி அதில் வெற்றியும் கண்டனர்.

இதனால் எமது பாரம்பரியக் கலையானது சில மாற்றங்களை உள்வாங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளானது. தென்மோடிக் கூத்துக்கள் சில ஆட்ட அசைவுகளை நாளடைவில் இழந்து போனது, ஆயினும் அரங்க அமைப்பு, ஒப்பனை, காட்சிப்படுத்தல் இவற்றில் புதிய மாற்றங்கள் கண்டு புதிய வரவுகளோடு எமது கூத்துக்கலை உத்வேகம் கொண்டு வளர்ச்சிபெற்றது என்பதும் மறுக்கவோ மறைக்கவோ முடியாததே.

இருப்பினும் இன்று வரை எமது தாயகத்தின் கரையோரப் பகுதிகளில் இக் கூத்துக் கலையானது தனது சுயவடிவமும், தொன்மைத்தனமும் குன்றாமல் வாழும் கலையாக, தேசிய வடிவம் பெற்றிருப்பதற்கு அதனைப் பாடிவந்த கலைஞர்களினதும், அண்ணாவிமார்களினதும் ஆத்மார்த்தமான கலைத் தாகமும், அளப்பரிய அர்ப்பணிப்புக்களுமே காரணமாகும்.

ஒவ்வொரு தேசிய இனமும் தனது பாரம்பரியங்களைத்தேடிக் கண்டு பேணிப் பாதுகாக்க முயல்வது இயல்பு. அது போன்று எமது மரபு சார்ந்த கலைகளைப் பேணுவதாயின் அதனைப் பாரம்பரியமாகவும் பரம்பரை பரம்பரையாக ஆடிப் பாதுகாத்து வருவோரை தேடிக்கண்டு பாராட்டி அவர்களை ஊக்குவிப்பதும் அவசியமே.

இன்று எமது தாயகம் உலக மயமாக்கல், இராணுவ மயமாக்கல் போன்ற பல்வேறு மயமாக்கல்களினால் ஆபத்தின் உச்சநிலைக்குத் தள்ளப்பட்டு தனது அடையாளங்களையும் இருப்புக்களையும் இழந்து போகும் நிலையில், பாண்பாட்டுக் கலைகளும் சிதைந்து அழிந்து போகும் நிலை உருவாகி வருவது வேதனைதருகிறது.

எனவே புலம் பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், நமக்குண்டான பல்வேறு பணிகளிலும் சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக, ஆளுமைகொண்ட களமாக விளங்கும் அரங்கினை மேம்படுத்தும் பெரும் பணியினையும் பொறுப்புடன் ஏற்றுச் செயல்பட வேண்டியவர்களாய் உள்ளோம்.

இன்று கனடாவில் வாழ்ந்து வரும் அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாசன் தனது சொந்த ஊரான மெலிஞ்சிமுனையில் புகழ்பூத்த கலாமேதை கலைக்குரிசில் அண்ணாவியார் அந்தோனி, அண்ணாவியார் சவிரிமுத்து அவர்களின் வரிசையில் எமது கூத்திசையை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து வருவதால் ஈழத்துக் கலை உலகின் கவனத்திற்கும், மரியாதைக்கும் உரியவராகிறார்.

தொலைபேசி மூலமாக அண்ணாவியார் மிக்கேல்தாசனுடன் பேசும்போதெல்லாம் அவரின் தாயக உணர்வையும், கூத்துக் கலையின் மீது அவர் கொண்டிருக்கும் தணியாத தாகத்தையும் கண்டு வியந்திருக்கின்றேன்.

அதற்கான ஒரு சான்றாகவே அவரது இவ்வரிய படைப்பினை என்னால் பார்க்கமுடிகிறது.

கூத்திசைப் பாடல்களினூடாக நல்ல தமிழையும், அதன் இனிய சுவையையும் பெறமுடியும் என்ற ஒருமித்த கருத்து அனைத்து அறிவுசார்ந்தோரிடமும் உண்டு.

சொல்வீச்சும், பொருள்வீச்சும் கவிச்சுவையும் குன்றாமல் கூத்திசைக்கான தனித்துவத்துடன் ஓர் அரிய வரலாற்றுப் படைப்பாகவே அண்ணாவியாரும் இதனைத் தந்திருக்கிறார்.

ஒரு பருக்கையை பதமாகக் கொள்வதுபோல் சில பாடல்களை நான் குறிப்பிடுவதாயின் - பண்டாரவன்னியனின் வருகைத் தரு -

இலங்கு இந்துமா ஈழ மணியெழில்
பொழிந்த நானில வளமிகு வன்னிமை
அகரமெனும் அகராதி அதிரோதன்
அன்னிய ஆதிக்க அரணை அழிப்பவன்
ஆதி சிவனின் பதம் ஆரிதம் நெறிமிகு
ஆதித்தன் பண்டாரவன்னியன் நானே

என பண்டாரவன்னியனை அறிமுகம் செய்யும் ஆசிரியர், கண்டி அரசன் விக்கரமராசசிங்கன் மீது ஆங்கிலேயரின் படையெடுப்பை அறிந்து அவன் ஆத்திரம் கொள்வதை

தமிழின விடிவே தலையான தாரகமாகும்
தமிழன்னை துகிலுற - தலைமுறை குனிவதோ
தடம்பதி பகைவரை திடங்கொண்டளித்திடவே
தாய் முலைப்பாலில் தந்தாளே தமிழன வீரம்
தொப்பிள் கொடியுறவை தொடர்பிற விடுவேனோ
திகிலாய் ஊடறுத்தவர் திணற நிலை குலைப்பேன்

என அன்றய வன்னியனின் எழுச்சியை இன்றைய வன்னியின் மூச்சாக வெளிப்படுத்துகிறார்.

1811ம் ஆண்டு உடையாவூரில் ஆங்கிலேயரை எதிர்த்துக்களமாடிய போது மார்பில் விழுந்த படுகாயத்தினால் மாவீரனாக, ஈழத்தின் இறுதி மன்னனாக தனது 34 வது வயதில் வீர மரணமடைந்த பண்டாரவன்னியனும், குருவிநாச்சியாரும் மண்ணின் விடுதலைக்காக வியாகித்த காதலையும் ஆசிரியர் எம் கண்முன் கொண்டு வரத் தவறவில்லை.

பண்டாரவன்னியன்
நிலவைப் பிளந்தொரு நெற்றிப் பிறையணி
மலரிதழ் மகரந்த பேரெழிலாள்
நெரிகுழல் குருவியாள் வேல் வழி நாச்சியே
நீரலை அருவி ஒலி உன் சிரிப்பே

குருவிநாச்சி
புலியை நிகர்த்திடு புயவீர புரவலா
புலர்ந்தொரு காலம் என்றோ விடியும்
ஆசைக் கனவுகள் ஆயிரம் ஆனாலும்
அன்னிய ஆதிக்கத்தை முதலளிப்போம்

அதுவரை காத்திருப்போம் என்கிறார் குருவிநாச்சியார்

இவ்வாறாக தமது படைப்பினூடாக தமிழின் சுவையையும் தமிழன் வீரத்தையும் இணைத்தே விதைத்திருக்கிறார் ஆசிரியர்.

பல அறிஞர்களினதும், ஆய்வாளர்களினதும் நூல்களை தனது மீள்பார்வைக்குட்படுத்தி பண்டாரவன்னியனின் வரலாற்றுக் கருவைத் தேர்ந்தெடுத்து, அதைக் கூத்திசைக்காவியமாக ஆசிரியர் தந்திருப்பது அவரின் கடின உழைப்பையும், கலை வெளிப்பாட்டின் பொறுப்புணர்வையும், சமூக அக்கறையையும் கட்டியமாய் ஒங்கி ஒலிக்கவே செய்கிறது.

1800களில் வீரமும் - விடுதலை வேட்கையும் கொண்ட மாவீரன் பண்டாரவன்னியனையும், விடியல் இல்லாத நிலத்தில் எமக்குக் காதலும் வேண்டாம் என தன்னுயிர் ஈந்த குருவிநாச்சியாரையும் கடந்த 30 வருடங்களுக்குள் ஆயிரமாயிரமாய் கண்டது எங்கள் வன்னிமண்.

திரும்பவும் நில அபகரிப்பக்கள், அடிமை வாழ்வு, எனத் துன்புறும் எம் மண்ணின் மக்களோடு மீண்டும் காக்கை வன்னியன்களும், பெருச்சாளிகளும் வெளிச்சத்தில் மகிழ்ச்சிபொங்க உலாவர, புலம்பெயர்ந்து வாழும் எம்மவர் மனங்களும் சலிப்புற்று, சோர்வுற்று வெவ்வேறு திசைகளாய் முகம் கோணி நிற்கும் வேளையில் இந்த வரலாற்று நூலின் வரவு ஒர் அவசியத்திற்கான ஆறுதலைத் தருகிறது.

படிப்பவர்கள் இதனை உறுதியாக உணர்வார்கள். படிப்பதை விட நாடகம் அரங்கில் நிகழ்த்துக் கலையாக வெளிப்படும் போதுதான், அதன் முழுமையை அடைகிறது.

எனவே அண்ணாவியார் மிக்கேல்தாசனின் இக் கூத்திசைக் காவியம் பல அரங்குகளைக் காணவேண்டும், அதற்குத் துணையாக அவர் இதன் இசைவடிவத்தை இறுவெட்டாக இதனுடன் இணைக்கவேண்டும், அப்போதுதான் ஈழத்து இறுதிமன்னன் பண்டாரவன்னியனின் வீரவரலாறு இசையாக உலகெங்கும் ஒலிக்கும். குறிப்பாக எமது இளையோர்கள் காதுகளில் எழுச்சியூட்டும் இன்னிசையாக...

என்பதே எனது பேரவா.

என்றும் அன்புடன்
**எம். அரியநாயகம்**



## வாழ்த்துரை

# முனைவர் பார்வதி கந்தசாமி

கிராமியக்கலைகள் கிராமங்களின் வாழ்வியலுடன் ஒன்றிணைந்தவை. சமுதாயத்தின் தொடர்ச்சிக்கான பங்களிப்பைச் செய்து வந்துள்ளன. சமுதாயம் ஓர் உயிர்ப்பொருள்போல் இயங்குவதற்குக் கிராமியக் கலைகள் துணை நிற்கின்றன. கிராமியம் என்பதன் பொருள் கிராமத்தின் அழகியல் பண்பை வெளிப்படையாகக் கொண்டு அமைகின்றது. மானிடவியல் ஆய்வாளர்களுக்கும் கிராமியக் கலைகள் சவாலாகத்தான் இருந்துள்ளமையை அவர்களின் குறிப்புகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. காலனித்துவ அரசுகளால் கூத்துக்கள் ஆதரிக்கப்படாமல் சில அழிவுகளைச் சந்தித்தபோதும், கத்தோலிக்க சமய மாற்றத்தின்போது கூத்து சமயம் கற்பிப்பதற்கான ஆயுதமாகப் பயன்பட்டது. சமயக் கதைகளை கூத்து ஊடாக மக்களுக்கு எடுத்துச் சொல்வதால் மக்கள் இலகுவாக விளங்கிக்கொள்வர் என மதப்பீடமும் ஏற்று, கூத்து வளர்ச்சியில் பங்கு கொண்டது. ஆனால், புனிதர்களுக்கு ஏற்காது என்று மன்னார், வங்காலை, யாழ்ப்பாணக் கரையோரங்களில் துள்ளல் ஆட்டங்களை நிறுத்தச் செய்துவிட்டன. அத்துடன் கோவில்களில் ஏடு பாதுகாக்கப்பட்டு ஆயர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு கூத்து

தொடங்கும் மரபும் கத்தோலிக்க மரபில் இருந்தது. மழை இல்லாது நீண்டவறட்சி ஏற்பட்ட போதும், மீன் பிடிபடாது போனாலும் 'பெரிய நாடகம்' என மக்களால் அழைக்கப்படும் "மரியஸ்தால் வாசாப்பு" என்ற கூத்தைப் பாடுவது இன்றும் வங்காலை, வஞ்சியங்குளப் பாரம்பரியம். இது போத்துக்கல் அரசனுக்கு விசுவாசமான பாடல்களைக் கொண்டது. இது போத்துக்கேயர் கரையோரத்தை ஆண்ட காலம் முதல் இருந்து வரும் கூத்து.

கூத்துப் பாரம்பரியமானது அண்ணாவி மரபினாலும் கிராமியச் சூழலாலும் புடமிடப்பட்டு வந்தாலும், பெண் பாத்திரத்தைப் பெண்கள் ஏற்று நடிப்பதோ, ஆடுவதோ இல்லாமல் இருந்தது. வீடு வீடாகச் சென்று மாரியம்மன் வேடம் கொண்டு உடுக்குடன் மென்மையான ஆட்டம் ஆடும் பொழுதுகூட, ஆண் ஒருவரே பெண் வேடம் கொண்டு ஆடும் மரபு உண்டு. யாழ்ப்பாணப் பகுதிகளிலும் மட்டக்களப்பு, மன்னார் பிரதேசங்களிலும் பெண் பாத்திரமேற்று ஆடுபவர்கள் ஆண்களாகவே இருந்தனர். வைரமுத்துவின் அரிச்சந்திரா நாடகங்களில்தான் புரட்சி நிகழ்ந்தது. பெண்பாத்திரங்களும் அறிமுகமாகின. பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்று நடிக்க யாழ்ப்பாண, மட்டகளப்புப் பல்கலைக் கழகங்கள் தளங்களாக அமைந்தன. தமிழகத்திலும் சினிமாவின் தாக்கம் பெண்களை நாடகங்களில் ஈடுபடுத்தின. தமிழ் நவீன நாடக கிராமப் பட்டறைகளில் பாதல் சர்க்கார் ஆகியவற்றைத் தொடர்ந்து பல நாடகப் பயிற்சிப் பட்டறைகள், கூத்துப் பட்டறைகள் உருவாகின. சிங்கள நாடக மரபிலும் மாற்றங்கள் உண்டாகின. வடக்கிலும், கிழக்கிலும் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், மௌனகுரு, கலையரசு சொர்ணலிங்கம் போன்றோரின் முயற்சியால் கூத்துக்கள் பிரபல்யப்படுத்தப்பட்டன. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருளடங்கிய நாட்டுக்கூத்துக்களும் இடம்பெறத் தொடங்கின. பெண் பாத்திரங்களின் பங்கு படிப்படியாகக் கூடிக்கொண்டு வந்தது. புலம்பெயர்ந்த நாடுகளில் பெண்பாத்திரங்கள் பெண்களாலேயே நடிக்கப்படுகின்றன.

மெலிஞ்சிமுனைக் கிராமத்தின் கிராமிய அழகியலை முனைப்பாக வெளிப்படுத்திக் காட்டுவதில் கூத்து பெரும் பங்கை வகிப்பதைக் காணலாம். அண்ணாவி பாரம்பரியத்தைத்

தொடர்ச்சியாக வளர்த்து, புலம்பெயர்வின் பின்பும் அதைத்தொடரும் அருமையை கலைக்குரிசில் அந்தோனி அண்ணாவியாரின் பாரம்பரியமாகக் காண்கின்றோம். கூத்துக்கள் தீவுப் பாரம்பரியத்தின் முத்திரைகளாக விளங்கின. 1928ல் இருந்து அந்த மண்ணில் 'மத்தேசு மகிறம்மா' என்ற கூத்தில் தொடங்கி விடாமுயற்சியுடன் மும்முரமான முன்னெடுப்புக்களுடன் கூத்துக்கலையை வளர்த்து வந்தார் கலைக்குரிசில் அண்ணாவியார். அவர் தமிழன் வாணிகத்தை கப்பல் பாடல் மூலம் தோணி ஏற்றி, பாய் விரித்து, தண்டு வலித்து யாழ்ப்பாணம் கடந்து தமிழுலகிற்குக் காட்டிய 1960ம் ஆண்டு நிகழ்வை அக்காலத்தில் யாழ்ப்பாணம் வாழ் மக்களை நினைவு கொள்ள வைக்கின்றது.

குழந்தை சண்முகலிங்கமும் நாடகத்தில் கூத்து வடிவம் ஊடாக பெண் அடிமைத் தனத்திற்கு எதிரான நாடகங்களை இயக்கி செல்வி போன்ற மாணவிகளை இயக்குநராக்கியவர். இப்போது அண்ணாவி மரபில் பெண்கள் சேர்ந்து பாடி ஆடும் நிலை உருவாகியுள்ளது. மைக்கேல்தாசன் புலம்பெயர்ந்த தேசத்தில் பெண்களைப் பாத்திரமேற்று நடிக்க வைத்துள்ளார். அவர் எழுதிய கண்ணகி, பண்டார வன்னியன் வரலாற்று நாடக கூத்து வடிவத்தில் பெண் பாத்திரங்களுக்கு ஊடாக அவர்களுக்கு நிகழும் அநீதிகளை சாடி நியாயம் தேடுவதை காண முடிகின்றது. கண்ணகியை மைக்கேல்தாசன் நாட்டுக்கூத்தில் காட்டும்போது மன்னித்த வடிவமாக -

"முத்துப் பவளமும் மின்னு நகைகளும்
பாவையின் பெருமைக்கு அணியல்ல"
என்று பாடி-

"ஏனிந்த அபசகுன வார்த்தைகள், துயரங்களை எதிர்கொண்டு துணிவுடன் துரத்தியடிப்போம் நம் இலட்சியங்கள் வாழ்வதற்கே"

எனக்கூற வைப்பதால் இலட்சியப் பெண்ணாக, வாழ்க்கையை வீணாக்க விழைபவளாகக் காட்டாது ஒரு விடிவெள்ளியாகக் காட்ட முயல்வதைக் காணலாம்.

கூத்தரும், அண்ணாவியும், நாடகப்பிரதி எழுதுனருமான மிக்கேல்தாசன் மெலிஞ்சிமுனை மக்களின் நெய்தல் நில அனுபவங்கள் கொண்டவர். அந்த ஊர் வாழ்க்கைப்பாடுகளை

வாழ்ந்து உணர்ந்தவர். அந்த அந்தக் கிராம மக்களின் மொழிவழக்கு ஊடாகப் படைப்புக்கள் புனையப்படும்போதுதான் அந்தப் படைப்புக்களுடன் மக்கள் ஒன்றிவிடுவதை நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இதைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை முன்வைத்தவர். கோவலன் கண்ணகியைத் தஞ்சம் எனப் புகுந்து கூறும் வரிகளில் மைக்கல்தாசன் மொழிக்கு இருக்கும் ஆற்றலைப் பயன்படுத்தியதைக் காணமுடிகிறது.

''என் விருப்பப்படியே யாவற்றையும் அளித்தேன் இனி உன் மொழியை மீறமாட்டேன்''

எனக் கோவலனைக் கூற வைப்பதன் மூலம் மொழியின் வலிமையைப் புரிந்து கொள்வது உறுதியாக்கப்படுகின்றது. மெலிஞ்சிமுனை வாழ்க்கையுடன் படகும், கடல்சார் அனுபவங்களும் இரண்டறக்கலந்தவை.

''தென்றலும் புயலாகி திசை மாறிய படகானேன்''

''கலங்கரை விளக்கணைந்து பாறை மோதிய படகானேன்''

''துன்பப் பெருங் கடலில் ஓடமாய் நெஞ்சம் துடிப்பிழந்து துடிக்கிறதே''

போன்ற வரிகள் இளங்கோ அடிகள் அண்மிக்காதவை. இவை, அண்ணாவியார் மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிணையும் தன்மையைக் காட்டுகின்றன.

இளங்கோவடிகளின் கண்ணகியோ கணவனால் சில காலம் உதாசீனப்படுத்தப்பட்டு தனித்து வாழ்ந்தபோது யாசகம் வேண்டிய துறவிகளுக்குக்கூட பிச்சையிட முடியாது சமூகம் அவளை ஒதுக்கி வைத்திருந்தவளாகக் காட்டப்பட்டு, கோவலனின் கொலைக்கு அவனின் பூர்வ ஜென்ம பாவம் காரணம் என மதுராபதி என்ற மதுரையின் ஆதி தெய்வம் கூறியதே தவிர, கண்ணகியின் துன்பங்களுக்கு யார் காரணம் என்று அத் தெய்வத்துக்குக் கூறத்தோன்றவில்லை. விதியின் கணக்காகவே பெண்ணடிமைத்தனமும் காட்டப்பட்டது. ஆனால் மைக்கல்தாசன் கண்ணகியை வாழ்க்கைக்கான இலட்சியம் கொண்டவளாகக் காட்டுகின்றார்.

மாவீரன் பண்டாரவன்னியன் நாடகக்கூத்திலும், பண்டாரவன்னியன் காதலி குருவிநாச்சியையும், நாட்டுக்காகக் காதலைத் தியாகம் செய்த புரட்சித்தலைவியாக -

''புலர்ந்தொரு காலம் என்றோ விடியும்

ஆசைக் கனவுகள் ஆயிரம் ஆனாலும்
அன்னியராதிக்கத்தை முன்னழிப்போம்''

எனும் சமூகப் பார்வையையும் பெண்ணையும் இணைத்து வளமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் தூரப்பார்வையின் நிதர்சன வெளிப்பாட்டை மைக்கேல்தாசன் காட்டுவதுடன் இவைகளின் நவீன வெளிப்பாடாக சிறுமை, வீரசுதந்திரம், சுதந்திரமும் முரண்பாடுகளும் போன்ற ஈழத்தமிழரின் துயரங்கள் நிறைந்த வாழ்க்கையின் விடியலை நோக்கிய படைப்புக்களை நாட்டுக் கூத்துக்களாக, பெண் நடிகைகள் உள்ளிட்டு கூத்தாடி வருவதன்மூலம் மெலிஞ்சிமுனை மரபுக்கலை முத்திரையைப் புலம் பெயர் நாடுகளிலும் பதித்துவிடுகிறார். அண்மையிலும் பேர்கன் - நோர்வேயில் ''மனுக்குல மீட்பர்'' என்ற நாட்டுக் கூத்தைப் பழக்கி தமிழ்மாணவருக்கு உற்சாகம் அளித்ததையும் மரபு காக்கும் விடயங்களில் அதிக அக்கறையும் ஊக்கமும் எடுப்பது பாராட்டப்படவேண்டியது. இவர் கத்தோலிக்க மரபுக்குக் கட்டுப்பட்டுக் கூத்துக்கள் செய்தபோதும், நவீன சமூகத் தேவைகளை உணர்ந்து அவற்றை நாட்டுக் கூத்து வடிவில் நோர்வேயிலும், பிரான்ஸ், கனடாவிலும் நிகழ்த்தி வருவது, சமூக மாற்றத்தின் தேவையை உணர்ந்தமையைக் காட்டுகின்றது.

மெட்ராஸ் மெயில் அவர்கள் 1990ல், வாழ்ந்து கொண்டிருக்கும் இசை நாடகக் கூத்து, மூத்த கலைஞர்கள், அண்ணவிமார்களின் வரலாற்றை நூலுருவாக்கியுள்ளார். மெலிஞ்சிமுனை அண்ணாவியார் அலைக்ஸாண்டர் அவர்களையும் அந் நூலுக்காக நேர்முகம் கண்டுள்ளார். தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து கலப்படம் இல்லாது மரபுகாக்கும் முறையில் பாரம்பரியக் கலைகளை அழியவிடாது பாதுகாக்கும் அண்ணாவியார் சவிரிமுத்து மைக்கேல்தாசன் அவர்கள். திருமறைக் கலாமன்ற வணபிதா நீ.ம. சவிருமுத்து அடிகளார், இதற்காக உழைப்போர் பலரின் வரலாற்றையும் நாம் பதிந்து கொள்வதும், ஆய்வுக்கான ஆவணப்படுத்தல் முயற்சிகளும் முக்கியமானவை. பாரம்பரிய மரபுக்கலைகளைப் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அழியவிடாது தடுக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபடும் அண்ணாவியார் மைக்கல்தாசனின் கலைப்பணி மேலும் தொடர வாழ்த்துகின்றேன். அவருடைய பெயர் புலம் பெயர்ந்த நாட்டு வரலாற்றில் பதிவுபெற்றிருக்கும்.

◉



## அணிந்துரை

# செந்தமிழன் சீமான்

**அ**ன்பின் செல்வர் அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாசு அவர்கள் மாவீரன் பண்டாரவன்னியன் என்ற இக் கவிதை நாடகத்தை (தென்மோடி நாட்டுக் கூத்தை) படைத்திருக்கிறார். இதில் ஆங்காங்கே வசன நடையும் வந்து சிறக்கின்றது.

இலங்கையில் ஏகாதிபத்திய ஆங்கிலேயர்களை எதிர்த்துக் களமாடிய கடைசி மன்னன் குலசேகர வயிரமுத்துப் பண்டாரவன்னியன் என்றால் எவரும் மறுக்கமுடியாது.

அவனது வீரம் செறிந்த வரலாறே இவரது எழுத்தாக்கமாய் உருவாகி, வீழ்ந்துவிடாத வீரத்தையும், மண்டியிடாத மானத்தையும் பறைசாற்றித் தமிழரின் ஒப்பற்ற வரலாற்றுப் பதிவுக்குச் சான்றாகிறது.

'வரலாறு தெரியாதவனால் வரலாறு படைக்க முடியாது' எனும் புரட்சியாளர் அம்பேத்கரின் கூற்றுப்படி, நம் தமிழர்கள் அனைவரும் தவறாது வரலாறு படிக்க வேண்டும், அப்பொழுதுதான் வரலாற்றைப் படைக்க முடியும். அந்த வகையில் அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாசு அவர்கள்

பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தை உரிய காலத்தில் தந்திருக்கின்றார்.

பண்டாரவன்னியனின் கொள்கைக் காதலியாக வரும் குருவிநாச்சியாரும், அவனின் தங்கையாகத் திகழும் நல்லநாச்சியாரும் மண்விடுதலைக்காகப் பகைவரைச் சாய்க்கும், தன்னை மாய்க்கும் மான மறத்தியராக வீர வித்துகளாகிறார்கள், பொய்யான புனைகதையல்லாது உண்மை வரலாற்றுக்காவியத்தைப் படைத்த அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாசு அவர்களை வாழ்த்துகிறேன். இன எழுச்சிக்குத் தமிழ் மண் விடுதலைக்கு இப்படைப்பும் ஒரு பங்களிப்பாகும். தொடர்ந்து எழுத வேண்டும். விழுப்புண்பட்ட வீர வன்னியன் பகைவர் கண்ணில் படாது சாவைத்தழுவுவது சாகா சரித்திரமாய் இனிக்கிறது.

“விடுதலைப்போர் என்றும் தோற்பதில்லை!
வீரமறவர்கள் விலை போவதில்லை!

என்ற வரிகளுக்கு இலக்கணமான, மாவீரன் பண்டார வன்னியன் வரலாறு நமக்கு நாட்டுப்பற்றை ஊட்டும். நாம் தமிழர் என்ற ஒற்றுமையை நிலைநாட்டும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை.

வென்றாக வேண்டும் தமிழ்! ஒன்றாக வேண்டும் தமிழர்!!

◉



## மதிப்புரை

# பேராசிரியர் அ. சண்முகதாஸ்,

**Ph.D. (Edinburgh), D.Litt. (Hon. UJ)**

**தகைசார் வாழ்நாட் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

**ந**மது தாயகத்திலே நாட்டுக்கூத்து அண்ணாவிமார்களைப் பேணிப் புகழும் மரபொன்று இருந்துவந்தது. இந்த மரபினை உருவாக்கியவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆவார். இவர் மட்;டக்களப்பு நாட்டுக்கூத்தினைப் பேணிப்பாதுகாக்கும் முயற்சியிலேயே முதன்முதலில் ஈடுபட்டார். இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களைக்கொண்டு 1960இல் "கர்ணன் போர்" என்னும் வடமோடிக் கூத்தினை மட்டக்களப்பு அண்ணாவியார் செல்லையா அவர்களுடைய துணையுடன் மேடையேறினார். அக்கூத்திலே மௌனகுரு கர்ணனாகவும், நான் கிருஷ்ணராகவும் நடித்தோம். பிற்காலத்தில் பிரபலம்பெற்ற பலர் அக்கூத்திலே பங்கேற்றார்கள். பேராசிரியர் வித்தி பின்னர் "நொண்டி நாடகம்", "வாலி வதை" ஆகிய கூத்துகளை மேடையேற்றினார். இவ்வேளையில் அவர் மன்னார், வன்னி, யாழப்பாணம் ஆகிய பிரதேசத்துக் கூத்துகளையும் பேணும் முயற்சிகளிலே ஈடுபட்டார். கூத்துகளைப் பேணுவதற்கு அவற்றை நன்கு நெறிப்படுத்தும் அண்ணாவிமாருடைய

வாண்மை பேணப்படவேண்டுமென்பதை உணர்ந்து ஓர் அண்ணாவிமார் மாநாட்டினை முதன்முதல் மன்னாரிலே கூட்டினார். அன்று மன்னார் அரச அதிபராக இருந்த திரு. நேசையாவும் அமைச்சர் திருச்செல்வமும் பேராசிரியர் வித்திக்கு நல்ல பக்க பலமாயிருந்தனர். மாநாட்டிலே அண்ணாவிமார் கௌரவிக்கப்பட்டனர். அந்த அற்புதமான காட்சிகளைக் காணும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. மட்டக்களப்பிலும் இத்தகைய அண்ணாவிமார் மாநாடு நடைபெற்றது. பேராசிரியர் வித்திக்குப் பின்னர் திரு. மெற்றாஸ் மயில் அவர்களே அண்ணாவிமாரைக் கூட்டி அவர்களுக்கு முடிசூட்டிக் கௌரவிக்கும் நிகழ்வினை யாழ்ப்பாணத்திலே ஒழுங்கு செய்தார். பேராசிரியர் வித்தி தொடக்கிவைத்த அண்ணாவிமாரைப் பாராட்டும் நிகழ்வுகள் பல இடங்களிலே நடைபெற்றன. இந்த வகையில் மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் அந்தோனி அண்ணாவியாருக்கு அவருடைய தேகாந்த நிலையிலே மலர் வெளியிட்டுப் பாராட்டிய நிகழ்வு நினைவுகூரத்தக்கது. அந்தோனி அண்ணாவியாரின் பேரன் சவரிமுத்து மிக்கேல்தாஸ் தந்தை, தந்தைக்குத் தந்தை வழியாக நாட்டுக்கூத்துப் பணியிலே ஈடுபட்டு அண்ணாவியாராகத் திகழ்கிறார். அண்ணாவியார் சவரிமுத்து மிக்கேல்தாஸ் பேரனும் தந்தையும் மெலிஞ்சிமுனைக்கு வழங்கிய கலைப்பெருமையினை இப்பொழுது வழங்கிக்கொண்டிருக்கிறார். பல ஆண்டுகளாக நாட்டுக் கூத்துக் கலைக்குத் தொண்டாற்றி வரும் இவர் தாயகத்தில் மாத்திரமன்றி பிற நாடுகளிலும் தன் கலையால் மக்களை மகிழ்வித்து வருகிறார். நாட்டுக்கூத்துகள் பலவற்றை எழுத்து உருவாக்கஞ் செய்தும், தயாரித்து மேடையேற்றியும் தொண்டாற்றி வருகிறார். பேராசிரியர் வித்தி அவர்கள் நாட்டுக்கூத்தினைப் பேணுவதற்கு கூத்து எழுத்துருக்களை அச்சிட்டு வெளியிடுவதும் ஒரு வழி என எண்ணி சில நாட்டுக் கூத்துக்களை அச்சேற்றி வெளியிட்டார். மிக்கேல்தாஸ் அண்ணாவியாரும் தான் எழுதிய இரண்டு கூத்துகளை அச்சிட்டு வெளியிடவுள்ளார். இரண்டும் வீர காவியங்கள். ஒன்று மாவீரன் பண்டாரவன்னியன், மற்றையது கண்ணகி என்பனவாகும். இதில் கண்ணகி கூத்தை 6வது உலகத்தமிழர் பண்பாட்டு மாநாட்டில் மேடையேற்றியவர் அண்ணாவியார் சவரிமுத்து மிக்கேல்தாஸ். அவற்றை இப்பொழுது நூல்களாக வெளியிடவுள்ளார். ஈழநாட்டின் வன்னிப் பகுதியில் அடங்காப்பற்று என்னும்

பகுதியினை ஆண்டவன் குலசேகர வைரமுத்து எனப்பட்ட பண்டாரவன்னியன் ஆவான். ஆங்கில அரசுக்குச் சவாலாக நின்றவன் அவன். குருவிச்சி நாச்சி வன்னிநாட்டின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் மனைவி எனச் செவிவழிக் கதைகள் கூறுகின்றன. ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் காதலியார் சம்மங்குளம் என்னும் கிராமம் உண்டு. காதலியார் என்பது பண்டாரவன்னியனின் காதலி குருவிச்சி நாச்சியைக் குறிக்கும் எனக் கூறுவர். காதலியார் கிராமத்தின் ஊடாக பேராற்றின் கிளையான குருவிச்சை ஆறு செல்கிறது.

பண்டாரவன்னியன் போருக்குப்போகும்போது அவனது காதலி குருவிச்சை நாச்சி பொரிவிளாங்காய் என்னும் இனிய தின்பண்டம் கொடுத்தனுப்பினாள். பொரிவிளாங்காய் பலநாள் பழுதடையாமல் இருக்கக்கூடிய உணவு. போரிலே பண்டாரவன்னியன் வீரமரணம் அடைகின்றான். அச்செய்தியைக் கேளிவியுற்ற குருவிச்சி நாச்சி நச்சுத்தன்மையுடைய கார்த்திகைக் கிழங்கை அரைத்து உண்டு பன்னாங்கில் படுத்திருந்து உயிர்நீத்தாள். இக்கதையினை தென்மோடிக் கூத்தாக எழுத்துருவாக்கம் செய்துள்ளார் அண்ணாவியார் மிக்கேல்தாஸ். தமிழரின் வீர வரலாற்றிலே பண்டாரவன்னியனுக்கு ஒரு சிறப்பான இடமுண்டு. அவனுடைய வீரம் ஆங்கிலத் தளபதியினாலே புகழப்படுகின்றது. அதனால் பண்டாரவன்னியன் கூத்து முழுவதும் வீரச் சுவையுடனேயே அமைகின்றது. காலைக் கதிரொளி தோன்றவே - பூவில் காரிருள் பனித்துளி விலகலாய் பார்த்திபன் பண்டாரன் படை கண்டால் பகைகொண்ட பகைவரும் பதறுவர். என்னும் முதலாவது பாடலே பண்டாரவன்னியனின் படைகண்டால் பகைவர்கள் பதறி ஓடும் நிலையைக்காட்டி அவன் வீரத்தினைப் புலப்படுத்துகிறார். கண்டி மன்னன் தன்னுடைய அமைச்சர் முதலியோரின் சூழ்ச்சிக்குள் சிக்குண்ட நேரம் ஆங்கிலப்படை கண்டிக்கெதிராக வருகின்றது. இந்த வேளை கண்டியரசனின் தளபதி,

பகைவரஞ்ச பார்புகழும் வீரன் போர்ப் பட்டறையில் பழு காச்சிய தமிழன் காவலன் பண்டாரவன்னி தனையே போரில் காக்கும் கந்தனாய் அழைப்பீர் அரசே என்று தன் மன்னனிடம் கூறும் பாடல் பண்டாரவன்னியனின் வீரத்தையும் போர்த் தந்திரத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. கதையை

முறையாக நடத்திச் செல்லும் ஆசிரியர் உரையாடற் பாடல்களை நன்கு இயற்றியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் பல்வேறு வடிவங்களெடுத்துள்ளது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய அதனை உரைநடையிலே அமைத்துள்ளனர். 'சிலம்பு கூறல்' என்று வன்னியிலும், 'கண்ணகி வழக்குரை' என்று மட்டக்களப்பிலும், 'கோவலர் கதை' என்று யாழ்ப்பாணம், திருகோணமலையிலும் நாட்டார் வடிவமாக்கினர். 'பூம்புகார்' என்று திரைப்படம் ஆக்கினர். நாடக மேடைகளில் பல பெயர்களில் சிலப்பதிகாரக் கதை மேடையேற்றப்பட்டது. 'கோவலன் நாடகம்' என வன்னியிலே கூத்தாக ஆடினர். வன்னிக் கூத்து பல தனித்துவமான பண்புகளையுடையது. ஏனைய பிரதேசக் கூத்துகளிலே மேடையில் பல பாத்திரங்கள் தோன்றும்போது ஒரே மாதிரியாகவே ஆடுவர். கோவலன் நாடகத்தில் பாண்டியன், அரசி, மந்திரி, பொற்கொல்லன் ஆகிய ஐந்து பாத்திரங்கள் தோன்றும்போது அவர்கள் ஐவரும் ஐந்து விதமாக ஆடும் அற்புதக் காட்சியைக் காணலாம். இந்த வரிசையிலே அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ் சிலப்பதிகாரக் காவியத்தை 'கண்ணகி' என ஒரு தென்மோடிக் கூத்தாக அமைத்துள்ளார். 17 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்தக் கூத்து எழுத்துருவாக்கம் இப்பொழுது அச்சேறப்போகின்றது.

அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ் மேற்கொண்டுள்ள கலைப்பணி மேலும் தொடர என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன். அவருடைய 'பண்டார வன்னியன்', 'கண்ணகி' ஆகிய நூல்களை நம்முடைய இளையவர்கள் வருங்காலத்தில் படித்துத் தமிழரின் வீரத்தையும் வரலாற்றையும் அறிந்து இன்புறுவர் என நம்புகிறேன்.

◉



## ஆய்வுரை

# பேராசிரியர் இ. பாலசுந்தரம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா.

**அ**ண்ணாவியார் மரபைப் பேணிக் காக்கும் சவரிமுத்து மிக்கேல்தாஸ் அண்ணாவியார் ஒருவரின் திறமை, அவரது பங்களிப்பு, அவருக்கு சமூகத்திலுள்ள மதிப்பு மரியாதை என்பவற்றை மதிப்பிடுவதற்குப் பின்னணியாக நாட்டுக் கூத்துப் பற்றிய முழுமையான தகவல்களை ஒரளவிற்காவது வாசகர்கள் அறிந்துகொள்ளுதல் பயனுடையதாகும். கூத்தின் வடிவம், உள்ளடக்கம், பார்வையாளர் - பயன்பாடு - சமகால நிலைப்பாடு, சமூக - பண்பாட்டு வாழ்க்கை முறைகள் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய மரபுகள் என்பவற்றுடன் கூத்துக்கலையும் தொடர்புடையதாகும்.

ஆடலும் பாடலும் மனித குலத்தின் முதற்கலை வடிவங்களாகும். அக் கலை வடிவங்கள் தேவைக்கும் சூழலுக்கும் நம்பிக்கைகளுக்கும் ஏற்ப அவற்றின் வடிவங்களும் மாற்றம் பெற்றுவந்துள்ளன. சங்ககால இலக்கியங்கள், சிலப்பதிகாரம் என்பன நாட்டுக் கூத்தின் தொடக்க கால நிலைமையையும், அவை மரவு வழியாகக் கைமாறப்பட்டு வந்துள்ளன. பல்வேறு

வகையான கூத்துக்கள் காலம் காலமாக ஆடப்பட்டு வந்துள்ளன. தற்காலத்தில் அவை தமிழகத்தில் தெருக் கூத்துக்களாகவும் ஆடப்பட்டு வருகின்றமை கவனிக்கத்தக்கது. கூத்துக்கலையில் தேர்ச்சிபெற்ற ஆண்களும் பெண்களும் சேர்ந்து இக்கலையை அர்ப்பணிப்போடு வளர்த்து வந்தனர். இக்கலைஞர்களை அரசர்களும் வள்ளல்களும் ஆதரித்து வந்துள்ளனர். சங்க காலத்தில் பொம்மைக் கூத்து இருந்தமையைக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. கூத்தாடுமிடத்தைத் திருவள்ளுவர் "கூத்தாட்டு அவைக்களம்" எனக் குறிப்பிடுவர். பெரும்பாலான கூத்துக்கள்; தெய்வத்தைப் போற்றுதல் அடிப்படையில் இடம்பெற்றுள்ளன. வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை முதலான கூத்துக்கள் தெய்வங்களைப் போற்றுவன. இக்கூத்துக்களில் முழவு என்ற வாத்தியம் இசைக்காப்பட்டிருக்கிறது. அது பிற்காலத்தில் மத்தளம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இலங்கையில் நாட்டுக் கூத்தின் மிக முக்கிய இசைக்கருவி மத்தளமே. சிலப்பதிகார காலத்தில் மிகப் பெரிய அளவில் கூத்துக்கலை வளர்ச்சி பெற்றிருந்தமையை இளங்கோவடிகள் குறிப்பிடுவார். கூத்துகலையின் நுட்பங்களைச் சிலம்பில் பெரிதும் பதிவுசெய்துள்ளார். சோழர் காலத்தில் (கி.பி. 900-1200) கூத்துக்கலை நன்கு வளர்ச்சி அடைந்திருந்ததோடு, கூத்துக் கலைஞர்கள் நன்கு பேணிப் பராமரிக்கப்பட்டனர் என்பதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கி.பி. 1200-1800 காலப் பகுதியில் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம் என்ற கூத்துக்கள் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தன. புராணக் கதைகளையும் சமய தத்துவங்களையும் மக்கள் மயப்படுத்தும் கருவிகளாப் புலவர்கள் இவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். உதாரணமாக கோவலன் நாடகம், அரிச்சந்திரன் நாடகம் என்பவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம். 19ஆம் நூற்றாண்டு முதலாக நாட்டுக்கூத்து; சமூக - அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் சாதனமாகவும் பயன்படலாயின. நிலப் பிரபுத்துவ செல்வந்தர்கள் கூத்துக்கலை வளர்த்ததோடு, இக்கலையினூடாக நிலமானிய சமூகத்தின் சமூக - பொருளாதாரக் கட்டமைப்பையும் பேணிக்காத்தனர். கிராமிய மக்கள் மத்தியில் கூத்துக்கலை பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டுவந்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டோர் கூத்து இலக்கியங்களைப் பேணினர். ஆனால் அவற்றின் ஆட்ட

முறைகளைப் பதிவு செய்து வைக்கும் இன்றைய நவீன வசதிகள் அவர்களுக்குக் கிடைத்தில. இலங்கையில் இப்பணியில் முதன் முதலாக வி.சீ. கந்தையா, சு. வித்தியானந்தன் இருவரும் ஈடுபட்டனர். 1980 களுக்குப் பின்னரே காரை சுந்தரம்பிள்ளை, மௌனகுரு முதலியோர் இவைபற்றி ஆராயத் தலைப்பட்டனர் யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களில் கூத்துக்கலை வடிவம் இன்று வரையும் பேணப்பட்டு வருகின்றது. இதன் வடிவத்தையும் ஆடல் பாடல் நுட்பங்களையும் கூர்ந்து ஆராய்ந்து, ஈழத்தமிழரின் பாரம்பரிய தேசியக் கலைவடிவம் நாட்டுக் கூத்து அவ்வகையில் நாட்டுக் கூத்தின் மாண்பினை ஈழத்தமிழர் மதிப்பிட்டு அதனை நமது தேசிய கலைவடிவம் எனப் போற்றுவோம். கூத்தின் ஆடல், பாடல், கதைமுடிபு, உடை அலங்காரம், தாளக்கட்டு, கதாபாத்திரங்கள் பயன்படுத்தும் ஆயுதங்கள் என்பவற்றின் அடிப்படையில் கூத்துக்கலையை வடமோடி - தென்மோடி என வகுத்துள்ளனர். வடமோடி நாடகங்களில் போர்த்தன்மை மிகுந்தும், தென்மோடி நாடகங்களில் சிருங்காரம் மலிந்தும் காணப்படும். வடமோடி கூத்து வகைகளுக்கு உதாரணமாக பப்பிரவாகன், 14ஆம் போர் முதலான நாடகங்களையும், தென்மோடிக்கு உதாரணமாக அலங்காரரூபன், பூதத்தம்பி முதலான நாடகங்களையும் குறிப்பிடலாம். உலக நாடக அரங்கில் துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம் என்ற நாடகப் பிரிவுகளில் வடமோடி துன்பியலாகவும், தென்மோடி இன்பியலாகவும் அமைந்து, உலக நாடகப் பொதுத்தன்மையையும் கூத்துக்கள் பெற்றுள்ளன. கூத்துப் பயிற்றுவிக்கும் கலைஞர் "அண்ணாவியார்" என மிக்க மரியாதையுடன் அழைக்கப்படுவர். பரதக்கலை, இசைக்கலை என்பனவற்றைப் பயிற்றுவிக்கும் கலைஞர்களைப் போன்று அண்ணாவிமார்களும் கலாவித்தகர்களாவார். பரதநாட்டிய நிகழ்வில் நடன ஆசிரியர் நட்டுவாங்கம் செய்வது போன்று, கூத்து ஆடப்படும்போது அண்ணாவியார் தாளக்கட்டுக்களை தாளத்திற்கமைவாக இனிமையாகப் பாடுவர். நாட்டுக்கூத்தின் அணியிசைக் கலைஞர்கள் மத்தளம், சல்லரி, உடுக்கு, பிற்பாட்டு என்பனவற்றை வழங்குவர். இவர்கள் சபையோர் எனப்படுவர். இவர்கள் கூத்து நடைபெறும்போது அதனைச் செம்மைப் படுத்தும் பொறுப்புடையோராவர். ஈழத்திலே கூத்துக்கலையைப்

பல்கலைக்கழகத் தரத்தில் மகிமை சேர்த்தோர் வரிசையில் பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், இ. பாலசுந்தரம், சி. மௌனகுரு, கி. விசாகரூபன் ஆகியோரின் பெயர்கள் நிலைத்துள்ளன. இக்கலைவடிவம் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் மத்தியிலும் குறிப்பாக ஜேர்மனி, பிரான்சு, கனடா ஆகிய நாடுகளிலும் பேணப்பட்டுவருவதும், இதில் இளந்தலைமுறையினர் பங்குகொள்வதும் பாராட்டத்தக்கதே யாகும். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இக்கலைகள் தாயகத்தில் அழியாமல் பேணப்படுவதற்கு உதவலாம். வெளிநாடுகளில் இயங்கும் பாடசாலை மன்றங்கள் தமது தாயகப் பாடசாலைகளுக்கு நிதிவழியாக ஊக்கமளித்து, கூத்துக் கலையையும் வளர்க்க ஊக்கமளித்தால் நிச்சயமாக மீண்டும் கூத்துக் கலை புத்துயிர்பெற வாய்ப்புண்டு. கிழக்குப் பல்கலைக்கழகம் மட்டக்களப்புக் கலைப் பாரம்பரியத்துக்குப் புதுப்பரிமாணம் கொடுக்கும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டு ஈழத்தமிழரின் தேசியக் கலைவடிவத்தை உலகறியச் செய்யும் கலைத் திட்டங்களை வகுத்துச் செயற்படலாம். இதற்குப் பக்கபலமாகப் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் உதவிக்கரம் அவசியமானது. 1960களில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டக்களப்புக் கூத்தை மெருகூட்டி அதனை அரங்கக் கலையாக மாற்றினார். முழு இரவு ஆடப்பட்ட கூத்தை ஒன்றரை மணித்தியாலமாகவும், வட்டக்களரி மரபினை ஒருபக்க அரங்கக் கூத்தாகவும் மாற்றினார். நீண்ட வரவு ஆட்டங்கள் சுருக்கப்பட்டன. கூத்தாடுவோருக்கு உணர்ச்சி - பாவம் - நடிப்பு என்பவற்றை வெளிப்படுத்தும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பாடல்களின் சொற்பொருளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. பக்கப் பாட்டுப்பாடும் ஒழுங்கினை ஏற்படுத்தி, பாடல்களுக்கு இசை ஒழுங்கு அமைக்கப்பட்டது. ஒப்பனை, நவீன ஒளி - ஒலி அமைப்பு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன. கர்ணன்போர் (1962), நொண்டி நாடகம் (1963). இராவணேசன் (1964), வாலிவதை (1967) என்பன இந்த வரிசையில் அவரால் தயாரிக்கப்பட்டு பல்லோரது பாராட்டையும் பெற்றுக்கொண்டன. வித்தியானந்தனின் பணியைத் தொடர்ந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாட்டார் வழக்கியல் கழகத்தினதும், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினதும் முயற்சிகளால்

தாயகத்தில் கூத்து மரபு புத்துயிர் பெற்று வருகின்றது. இப்பின்னணியில் அண்ணாவியார் சவரிமுத்து மிக்கேல்தாஸ் அவர்களின் கலைப்பணி மதிப்பிடப்பட வேண்டியதாகும். ஈழத் தமிழரின் தேசியக் கலைவடிவமாம் கூத்துக்கலை வடமோடி, தென்மோடி என்றும், வடபாங்கு தென்பாங்கு என்றும், மன்னார்ப்பாணி யாழ்ப்பாணப்பாணி என்றும், தனித்துவமான ஆடல் - பாடல், தாளக்கட்டு, ஆடை அலங்காரங்கள் என்ற நுட்பங்களுடன் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. ஈழத்தில் போர்த்துக்கேயர் காலம் முதலாகக் கத்தோலிக்கம் தனது மதப் பிரசாரத்திற்கு கூத்தைப் பயன்படுத்திக் கொண்டது. கத்தோலிக்க மதகுருமார் தமிழ் அண்ணாவிமாரின் உதவியுடன் பைபிள் கதைகளைக் கூத்துக்களாக எழுதுவித்து, அவற்றைத் தேவாலயங்களில் மேடையேற்றி வரலாயினர். அத்தகைய கூத்துப் பாரம்பரியத்தில் வந்தவரே மெலிஞ்சிமுனை கலைக்குரிசில் நீ.வ. அந்தோனி அண்ணாவியார். இவர் 1928ம் வருடம் மத்தேசு மகிறம்மா என்னும் நாட்டுக் கூத்துமூலம் நாடக உலகில் அறிமுகமாகி பெரும் பாராட்டைப் பெற்று தனித்துவ முத்திரை பதித்தார், அடுத்து ஊசோன் பாலந்தை நாட்டுக்கூத்தை நெறிப்படுத்தியதுடன், பிரதம பாத்திரமான பெப்பேனிய அரசனாக இரண்டு இரவுகள் தொடராக நடித்தும், புதிய திருப்பத்தை ஏற்படுத்தியதுடன் நாடக உலகில் நவீனத்தை முன்நோக்கி நகர்த்தினார். தொடர்ந்து பல கூத்துக்களை எழுதியும், பயிற்சி அளித்தும் அவைகளை மேடையேற்றி நாட்டுக் கூத்தில் தனக்கென ஒர் தனியிடத்தை அமைத்துக் கொண்டார். அவருடைய பாடல்களில் கையாளப்படும் சொற்கட்டுக்கள் இலக்கிய வளஞ்செறிந்தவை. அவை கேட்போரை பிணிக்கும் தன்மை கொண்டவை, இவரால் மெலிஞ்சிமுனை கலைக்கிராமமாக மாற்றப்பட்டது. புனித கிறிஸ்து அரசர் தேவாலயம் - கூத்துக்கலை வளர்வதற்கு களமாயிற்று, யாழ் மாவட்டத்தின் நாட்டுக்கூத்து பாரம்பரியமுள்ள கிராமங்களான எழுவைதீவு, மண்டைதீவு, பருத்திதீவு, கரம்பொன், நாரந்தனை, ஊர்காவற்றுறை மற்றும் யாழ்ப்பாணம், மாதகல், பருத்தித்துறை, முல்லத்தீவு, மன்னார் என பல்வேறு பகுதி கிராம மக்களும் அந்தோனி அண்ணாவியாரை அழைத்தச்சென்று தமக்கு விருப்பமான நாடகங்களை எழுத வைத்து, பழக்கி அரங்கேற்றி கூத்துக் கலையை மேம்படுத்திய

வரலாறுகளும் உண்டு. இவர் புனித தொம்மையப்பர், புனித செபஸ்தியார், தாவீது கொலியாத், ஆனந்தசீலன், அலசு, ஞானானந்தன், சகோதரவிரோதி, மதிவீரன், பிரதாபன், பிரளயத்தில் கண்ட பாலன், இராஜகுமாரி, மந்திரிகுமாரன், திருஞானதீபன், தர்மசீலன், பிரபாகரன், புனித கிறிஸ்தோப்பர் முதலான நாடகங்களை எழுதி அரகேற்றிய பெருமைக்குரியவர். இவரது கலைப்பணியைப் பாராட்டி 1969இல் புனித கிறிஸ்த்தோப்பர் நாடக விழாவில் அண்ணாவியாருக்கு நாடகத்தந்தை கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்கள் கலைக்குருசில் என்னும் பட்டமளித்து கௌரவித்தார். மெலிஞ்சிமுனை மக்கள் இவர் நினைவாக 1989இல் ஓர் நினைவுமலர் வெளியிட்டு வைத்தனர், கலைஞன் என்பவன் தனக்குப் பின்னர் தனது கலை வாரிசாகப் பலரை உருவாக்க வேண்டும். அப்போதுதான் அவரால் உருவாக்கப்பட்ட கலைப்பாரம்பரியம் நிலைத்து நீடிக்கும். அவ்வகையில் அந்தோனி அண்ணாவியார் பல இளைஞர்களைக் கூத்தின்பால் ஈடுபடச் செய்தார். அவர் உருவாக்கிய பலர் இப்போது தாயகத்தில் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழும் பிரான்சு, சுவீஸ், ஜேர்மனி, கனடா முதலான நாடுகளில் கூத்துக் கலையை வளர்த்து வருகின்றனர். நோர்வேயில் வாழும் மெலிஞ்சிமுனை மக்கள் அங்கு கலைக்குரிசில் கலாமன்றம் அமைத்து கூத்துக்கலையை வளர்த்து வருகின்றனர். அந்தோனி அண்ணாவியார் மெலிஞ்சிமுனையில் தொடக்கி வைத்த கூத்துக்கலை தொடர்ச்சியாக அவரது மகன் அந்தோனி சவரிமுத்து அண்ணாவியாரால் முன்னெடுத்துச் செல்லப்படுவதாயிற்று. அவர் 1971 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை 25 நாட்டுக் கூத்துக்களைப் பழக்கி மேடை ஏற்றிப் புகழ் படைத்தவர் ஆவார். தந்தையைப் போன்றே தனயனும் மெலிஞ்சிமுனைக் கிராமத்திற்குக் கூத்துக் கலையால் புகழ் தேடிக் கொடுத்தவராவார். சவரிமுத்து அண்ணாவியாரைத் தொடர்ந்து மூன்றாவது தலைமுறையாக, அவரது மகன் சவரிமுத்து மிக்கேல்தாஸ் பல நாட்டுக் கூத்துக்களை எழுதியும் தயாரித்தும், தாயகத்திலும் மற்றும் கனடா, நோர்வே முதலான நாடுகளிலும் மேடையேற்றி ‘அண்ணாவியார்’ என்ற புகழாரத்தைப் பெற்றுள்ளார். கூத்துக்களின் மூலம் மைக்கேல்தாஸ் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டுகளுக்கு மேலான தொடர்புகளுண்டு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே

தமிழ்த்துறையில் நான் பணியாற்றிய காலத்தில் பட்டதாரி மாணவர்களின் துணையுடன் காத்தவராயன் இசை நாடகத்தை தயாரித்து இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றி வந்தேன். அந்நாடகத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த மைக்கல்தாஸும் அவரது நண்பர் மார்க் அவர்களும் என்னை மெலிஞ்சிமுனைக்கு அழைத்துச் சென்று, எனது நெறியாள்கையில் கிறிஸ்தோப்பர் நாடகத்தைத் தயாரித்து, அதனை நாவாந்துறையில் வணக்கத்திற்குரிய ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களின் தலையில் 1989இல் மேடை ஏற்றிய அந்த அற்புதமான நிகழ்வுகள் நினைவில் நிறைந்து நிற்கின்றன. புலம்பெயர்வின் பின் அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள் 1994ம் ஆண்டு கனடாவில் நடந்த நாடகப்போட்டியில் சிறுமையெனும் சமுக சீர்திருத்த பார்வையுடனான நாட்டுக்கூத்தை எழுதி அரங்கேற்றி முதலாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆறாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாடு ரொறன்ரோவில் 1996 இல் நடைபெற்றபோது, மிகேல்தாஸ் எழுதி இயக்கிய கண்ணகி கூத்து அவ்விழாவில் மேடை ஏற்றப்பட்டது. அக்கூத்துப் பயிற்சியின் போது என்னையும் அழைத்திருந்தனர், அதில் நானும் கலந்துகொண்டு நெறியாள்கை, மேற்பார்வை செய்தேன் என்பதும் மகிழ்ச்சியும், மனநிறைவையும் அளித்தது. அக்கூத்துப் பிரதி முழுமை பெற்று இப்போது உங்கள் கைகளில் நூல் வடிவம் பெற்றுள்ளது. சிறந்த சொல்லாட்சியும் ராகம் - தாளம் தப்பாத பாடல்களைக் கொண்டதாகவும், துன்பியல் சுவை நிறைந்த கதைப்போக்கும் அமைய கண்ணகி கதையைத் தென்மோடிக் கூத்தாகப் பாடியுள்ளார். இக்கூத்து பல தடவைகள் ஆடப்பட்டமையால் பாடலும் வசனமும் பக்குவமாய் அமைந்துள்ளன. இக்கூத்தின் தொடக்கத்தில் கட்டியகாரன் வரவுத் தருவாக அமைந்த பாடலின் இசை பாடுவதற்கு இன்சுவை அளிப்பதாக அமைகின்றன:

கட்டியகாரன் தரு: மேதினியுறு வீர மறவரே - எங்கள் மீன்கொடி பாண்டியன் சபை வாறார் நற்பரிவாய்ப் பந்தல் போடுங்கோ - நீங்கள் நர்த்தனம் ஆடி மகிழுங்கோ

பாவலர் நாவலர் பண்பாடி - தமிழ்ப் பாரம் பரியத்தைப் பேணியே சங்கொலி முரசொலி அதிரவே - வீர சக்கர வர்த்தியும் சபை வாறார்...

*பாண்டியன் அரண்மனையில் கண்ணகி தன் காற்சிலம்பை வீசி எறிகிறாள். அங்கு முத்துப்பரல்கள் சிதறிப் பறக்கின்றன. பாண்டியன் நீதி பிழைத்தமையை வீராவேசத்துடன் கூறி, கண்ணகி புலம்புவதாக வரும் பின்வரும் பாடற்பகுதி உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்துள்ளமையையும் நோக்கலாம்:*

*"மீன்கொடி மன்னவனே மேதினி இகழ்ந்திடப் பழியானாய் - இங்கு உதிர்ந்தவை முத்தல்ல உயிராய்க் கலந்தவன் உதிரமே! உயிரை அழித்தாய் எந்தன் உறவின் உணர்வினை அறிவாயோ - உயர்ந்த வெண்கொற்றக் குடையும் தமிழ் காத்த செங்கோலும் சரிந்ததே!"*

*தனது பரம்பரையினர் கூத்துப் பிரதிகளை ஆக்குவதில் பெரிதும் பணியாற்றியது போன்றே மிக்கேல்தாஸும் கூத்துப் பிரதிகள் எழுதுவதில் மும்முரமாக ஈடுபடலானார். அதன் பயனாகவே "மாவீரன் பண்டார வன்னியன்" என்ற கூத்தும் இப்போது நூலுருப் பெற்றுள்ளது. தமிழரின் இன்றைய வாழ்வியல் நிலைப்பாட்டில் இத்தகைய கூத்துக்கள், நவீன நாடகங்கள் வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகிறது. வீரச்சுவை ததும்பும் இக்கூத்தில் இடம்பெறும் பாடல்களும் வசனங்களும் வாசித்து மகிழத்தக்கவை. பண்டார வன்னியனின் தளபதி பாடுவது வீர உணர்வை ஊட்டுகிறது: "நிலத்தைப் பறித்தெங்கள் பலத்தை விலை பேசலாகுமோ தோளை நிமிர்த்தியே போராடி சூழும் பகைமையை விரட்டுவோம்". அதுபோன்றே போர் புரியும்போது பண்டாரவன்னியன் ஆங்கிலத்தளபதியை நோக்கி கறையான் புற்றில் கருநாகங்களாய் எங்கள் மண்ணை ஆக்கிரமித்து ஆழத்துடிக்கிறீர்கள். நாங்கள் வாழத்துடிக்கின்றோம் என்று கூறியபடி பாடும் உறைவிட்டு உருவும் வாழ் ஒலி கேட்டு ஓடியோரே உரிமை தனை பேரம் பேச பேடிகளா நாங்கள் என்னும் இடம் பெறும்; தர்க்கப் பாடல்களும் வீர முழக்கம் கொண்டனவாகவே அமைந்துள்ளன. வீரத்தை விளைவிக்கும் பண்டாரவன்னியன் கூத்தை புலம்பெயர் நாடுகளில் மேடை ஏற்ற விரும்புவோர் இக்கூத்துப் பிரதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது என் விருப்பமாகும்.*

*அண்ணாவி மரபுக் கூத்துக்களே ஈழத்தமிழரின் தனித்துவமான கலைமரபை எடுத்துக்காட்டுவன. அக்கலை மரபில் பணியாற்றிய அண்ணாவிமார்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களது ஆக்கங்கள், அவர்கள் மேடையேற்றிய நாடகங்கள் முதலான விபரங்களைத் தேடித் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டும். அந்த வகையில் இவர் எழுதியுள்ள "மாவீரன் பண்டார வன்னியன்", "கண்ணகி" ஆகிய தென்மோடி கூத்துக்கள் இரண்டையும் நூலாக வெளியிடுகின்றமை ஈழத்தமிழரின் கலை - பண்பாட்டு வரலாற்றை வளம்படுத்துகின்றது. அவரது கலைப்பணி மேலும் தொடர என வாழ்த்துகின்றேன்.*

*கனடா வளாகம் ரொறன்ரோ,*
*04.04.2013*



## நெஞ்சின் நினைவுகளில்

# அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ்

இனத்தை மொழி அடையாளப்படுத்துகின்றது, பிறப்பிடம் பூர்வீகத்தை பதிவு செய்கின்றது. பாரம்பரியத்தை - பண்பாட்டை கலைகள் பேணுகின்றன, என் மனத்திரை விலக கரு முகிலை காற்று கலைக்க பசுமை நினைவுகள் மலர்கின்றன.

யாழ் தீவகத்தின் சோழமுனை கொண்ட மெலிஞ்சிமுனை என்னும் எமது மண்ணையும் மக்களையும் நெஞ்சிருத்தி நினைத்துப் பார்கின்றேன். தெற்கே அலை தவழ்ந்து முத்தமிடும் நெய்தல் நிலமும், வடபாலாய் பயிர் செழித்து வளம் கொண்ட மருத நிலமும், மேற்கின் எல்லையாய் கண்ணகி அம்மன் கோவிலும், கிழக்கின் வாயிலின் அன்னை வேளாங்கண்ணியின் அழகுறும் ஆலயம் அரணமைக்க, நடு நாயகமாய் கிறிஸ்து ராச கோவில் பரிபாலணமிட.

எண்ணச் சிதறல் விரிய வரலாற்றின் வழித்தடங்கலாக மண்ணின் உயர்வுக்காக உழைத்த பெரியோர்களும் வழிவந்த தலைமுறைகளாக -

தீயோகு, நீக்கிலார், மோசேஸ், மரியார், யாக்கோப்பர், சுவானி, சுவாம், வலோரியார், அவுறார், வைத்தியார், அருளப்பர், கிருத்தோவர், சலமோர், இன்னாசி, அ. லுக்கேஸ், நீ.வ. அந்தோனி, அதிரியார், சந்தியாகு, இசுதோர், தீ. பிரகாசம், பபூன் பாவிலு, சூசைமுத்து, சந்தியாக்குட்டி, சு. வைத்தியார், பேதுறு, ம. வைத்தியார், சுவக்கின், அ. வைத்தியார், அந்தோனி, ஆகியோரும் -

2ம் தலைமுறையாளராக -

இ. மத்தியாஸ், பே. செபமாலை, ம. மனவல், அ. மடுத்தீஸ், பத்தினாதர், அ. சவிரிமுத்து, கி. சவிரிமுத்து, சு. பிரகாசம், யா. கிருத்தோ, ச. ராயப்பு, ப. பாக்கியம், ச. சூசை, குருசமுத்து, கபிரியேல், கலித்து, ஆசை, தொம்மைக்குட்டி, சு. சூசை, ம. அலெக்சாந்தர், ம. சின்னத்துரை, தானியேல், யா. செல்வர், சீரணி, ம. யாக்கோப்பு, ம. மனவல், ச. காணிக்கை, மருசலீன், பறுநாந்து, தொ. செபஸ்தியான், ம. சவிரிமுத்து, ச. செபஸ்தியான், சூ. ஆசீர்வாதம் -

3ம் தலைமுறையாக -

அ. சீமான்பிள்ளை, ப. சைமன், வி. பிரான்சீஸ், வ. மரியநாயகம், பி. அகஸ்ரின், இ. பவளம், நோ. ராசநாயகம், அ. டேவிற், ஆ. தோமாஸ், செங்கோல், ச. கிறிஸ்தோப்பர், சூ. ராசு, பெமியான், சூ. சிலுவைராசா, விக்ரர், பாவிலு, ஆசத்துரை, கி. சேவியர், தொம்மை, ம. காணிக்கை, சூ. ஆனந்தம், யேசுதாசன், ஆ. சின்னராசா, அருள் ஆகியோரும் -

4ம் தலைமுறையாளராக -

பி. யோண்பிள்ளை, சூ. சிலுவை, ப. சில்வேஸ்ரர், ச. சவிரியான், அ. சேவியர், லு. சிங்கராயர், ச. ஜெயராஜா, ம. அந்தோனிப்பிள்ளை, பி. அந்தோனி, லு. சேவியர், சி. அன்ரன், செபஸ்தியாம்பிள்ளை, கீதம், மரியதாஸ், ம. பெனடிற், ச. அல்பிறட், லு. யோன், கி. மிக்கேல், றூபன், சின்னக்கிழி, யா. அந்தோனிப்பிள்ளை -

என 1980ம் ஆண்டு வரையான காலப்பகுதியையே இங்கு குறிப்பிடப்படுகின்றது.

இக்குடும்பத் தலைமுறையினர் அனைவரும் என்னை அன்போடும் உரிமையோடும் தங்களின் மூத்த பூட்டனாக உறவுகொண்டாடிய நினைவுகளும் நான் அம்மண்ணில் வாழ்ந்தபோது மெலிஞ்சிமுனை இருதயராசா சனசமூக செயலாளராகவும். கடற் தொழிலாளர் சங்கச் செயலாளராகவும். கத்தோலிக்க இளைஞர் கழக தலைமைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றிய பின், 1978ம் ஆண்டு திருமணமாகி நாவாந்துறைக்கு குடிபெயர்ந்த பின்பும் மக்கள் என்னை மறவாது வடமாகாண க.தொ சங்க இயக்குனர் சபைக்கான தேர்தல் நடைபெற்ற போது என்னை பிரதிநிதியாக நியமித்ததை எண்ணும்போது இதயம் இன்றும் ஈரமாய்க் கசிகின்றது.

எமது மண்ணின் மரபுக்கலையாம் கூத்துப் பாரம்பரியத்தின் மூலவரான கலைக்குரிசில் நீ.வ. அந்தோனி அவர்கள் 1928ம் ஆண்டில் தொடக்கி வைத்த கலைப்பணி விதையாகி இன்றுவரை மண்ணிலும் புலம் பெயர் நாடுகளிலும் வளர்ச்சிபெற்று வருகின்றது. இவர் தனிமனிதனுக்கான குறியீடல்ல, தொடரும் இத் தலைமுறையினருக்கான மண்ணின் அடையாளமாகும்.

நான் சிறுவனாய் வாழ்ந்த அன்றைய காலப்பகுதியில் கலைக்குரிசில் அவர்கள் எழுதி மேடையேற்றிய அலசு நாட்டுக்கூத்து பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியது. அவைக்காற்று தன்மையுடன் செம்மையும், எளிமையுமான வார்த்தைப் பதப்பிரயோகமும் அக்கூத்தில் வெளிப்பட்டதுடன், அதில் பெமியான் பிரபுவாக, திரு. அ. வைத்தியார் அவர்கள் உச்ச ஸ்தாயியில் பாடிய ஞானக் கலையுணர்ந்த எனும் எழுச்சிமிகு பாடல் காதுக்கினிய கீதமாய் குரல்வள சுருதியுடன் காற்றில் ஒலித்தமையும். அலசு பாத்திரமேற்று திரு. இ. மத்தியாசு அவர்கள் இன்னிசையாக உள்ளத்தை உருக்கும் வண்ணம் பாடிய பிச்சைபோடும் அண்ணன்மாரே என்னும் பாடலும். திரு. அ. மடித்தீஸ் அவர்கள் பபூணாகத் தோன்றி அரங்கை அதிரவைத்த நகைச்சுவைக் காட்சிகளும் இன்றும் நினைவில் நிழலாடுகிறது.

எம் மண்ணில் தொடர்ந்து முன்னெடுத்து வளர்த்த அண்ணாவியார் அ. சவிரிமுத்து அவர்களையும், அண்ணாவியார் ம. அலெக்சாந்தர் அவர்களையும், அண்ணாவியார் நீ. தானியேல் அவர்களையும், மிருதங்க ஆசிரியர் கி. சவிரிமுத்து அவர்களையும்,

அவருடன் மிருதங்க வாசிப்பாளராக பணியாற்றிய ப. சைமன் அவர்களையும், அக்காலத்தில் பொறுப்பு மிக்க மனேச்சராக சேவையாற்றிய திரு. பேளக்குட்டி வைத்தியார் அவர்களுக்கும்,

காலத்தால் செய்த நன்றி சிறிதாயினும்
ஞாலத்தின் மாணப்பெரிது -

எனும் வள்ளுவ வாக்கொப்ப உளத்துணர்வாய், உள்ளொளியாய் நன்றியறிதல் மிக்க பரியாரியார் திரு. செபத்தியாம்பிள்ளை. காணிக்கமரி குடும்பத்தினருக்கும், திரு. சூ. சிலுவைராசா அவர்களுக்கும், திரு. ம. பெனடிற் அவர்களுக்கும், திரு. தி. தனபால் மற்றும் திரு. பி. யோண்பிள்ளை அவர்களுக்கும்.

எனது முதல் கூத்தின் மேடையேற்றத்துக்கு வழிசமைத்த சட்டத்தரணி திரு. மனுவல். யேசுதாசன், திரு. ஆ. ஆசிர்தாசன் ஆகியோருக்கும், மலரின் உருவாக்கத்திற்கு உறுதுணையாய் விளங்கிய திரு. சூசை. மார்க், திரு. ச. ஜெயராசா, திரு. சூ. றொபின்சன் ஆகியோருக்கும் போற்றுதற்குரிய வணக்கத்தை தெரிவிப்பதுடன் மாவீரன் பண்டாரவன்னியன், கண்ணகி நாட்டுக்கூத்துக்கள் வரலாற்று காவியங்களை படித்து ஆய்வு செய்து கட்டுரை வழங்கிய மதிப்புக்குரியவர்களான பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், பேராசிரியர் திரு. இ. பாலசுந்தரம் அவர்களுக்கும், முனைவர் திருமதி பார்வதி கந்தசாமி அவர்களுக்கம், நாம்தமிழர் செந்தமிழன் சீமான் அவர்களுக்கும், உணர்ச்சிக்கவிஞர் திரு. காசி ஆனந்தன் அவர்களுக்கும், பிரான்ஸ் காலாச்சாரக்குழுத் தலைவர் திரு. எம். அரியநாயகம் அவர்களுக்கும், இம் மலரை அழகுற உருவாக்கிய மண்ணின் மூத்த கவிஞர் திரு. தமயந்தி, துணைவியார் பானு பாரதி இணையர்க்கும், உயிர்மெய் பதிப்பகத்தார்க்கும், பல வழிகளில் உதவிய அனைவருக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



# கதிர் முன்னோட்டம்

*ஏகாதிபத்தியம் ஓர் இனத்தின் இறைமையை பறிக்க முற்படும்போது அந்த இனம் வீறுகொண்டு தன் உரிமைக்காய் போராடும்.*

*இனப்பற்றோடும், மொழி உணர்வோடும், வன்னி இராட்சியத்தை ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து காப்பாற்ற வீரம், விவேகம், தியாகம் எனும் சுதந்திர உணர்வோடு வீரத்தை விளைத்த நெஞ்சனாய், இறுதி மூச்சுவரை போராடிய, கால ஓட்டத்திலும் கரையாத, வரலாற்றுப் புகழ்மிகு ஈழத்தின் இறுதித் தமிழ் மன்னனே மாவீரன் பண்டாரவன்னியன்.*

**தோரணவாயில்**

*பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையை தம் ஆழுமைக்குட்படுத்திய 1798ம் ஆண்டிலான காலப்பகுதி, வாணிபத்திற்காக வந்த ஆங்கிலேயர், படிப்படியாக படையெடுப்பாகி தமது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொண்டிருந்த வேளை தமிழ், சிங்கள மன்னர்கள் ஒவ்வொன்றாகத் தம் இறைமையை இழந்தபோதும், ஈழமண்ணின் வன்னிமை பகுதியின் அடங்காப்பற்றை ஆண்ட குலசேகரவைரமுத்து என்று அழைக்கப்படும் பண்டாரவன்னியனும், கண்டி மாநகரை ஆட்சிபுரிந்த விக்கிரமராச சிங்கனெனும் கண்ணுச்சாமியும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு அடிபணிய மறுத்து, தமிழின உணர்வோடு மண்ணின் உரிமை காத்து ஆட்சி புரிகின்றனர்.*

*அதே காலகட்டத்தில் தமிழகத்திலும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு எதிராக உரிமைக் குரலெழுப்பி எதிர்த்துப் போராடிய வீரபாண்டியகட்டப்பொம்மனும், பண்டாரவன்னியனுடன் நெருக்கமான தொடர்பாடி, தளபதி சுந்தரலிங்கத்தை வன்னிக்கு அனுப்பியும் விடுதலை வேட்கையை உணர்வு பூர்வமான*

கருத்துப் பரிமாற்றம் மேற்கொண்டும் தமிழக, ஈழ ஒருமைப்பாடு மேலோங்கி இருந்தது.

பண்டாரவன்னியனுக்கும், குருவிநாச்சி என்ற இளவரசிக்கும் குருகுலத்தில் படிக்கும் சமையம், காதல் மலர்கிறது. ஆனாலும் மோதிப் பகைமுடித்து ஆங்கிலேயரை வன்னிமண்ணை விட்டு அகற்றும் வரை இருவரும் இல்லற வாழ்வில் இணைவதில்லை என்ற இலட்சியத்துடன் போராடி வருகின்றனர்.

அதே சமையம் கரிக்கட்டு மூலை என்னும் குறுநிலத்தை ஆளும் காக்கைவன்னியன், ஒருதலைக் காதலாய் குருவிநாச்சியாரை விரும்புகின்றான். இளவரசி காக்கையின் காதலை மறுதலிப்பதுடன், பண்டாரவன்னியனை விரும்பியதனால் ஏற்பட்ட வெறுப்பு, பழிவாங்கும் சதிகாரனாகிய காக்கைவன்னியன், வணிகனாக மாறுவேடமிட்டு பண்டாரவன்னியன் தங்கை நல்லநாச்சியைக் காதலிப்பதுடன் வெள்ளையருக்கு வெண்சாமரை வீசி துரோகத்திற்கு துணைபோகின்றான்.

மறுபுறம் இதேபோல் ஆங்கிலேயரின் வஞ்சக வலையில் வீழ்ந்து, கண்டியின் ஆட்சிக்கு எதிராக, கண்டிமன்னன் கண்ணுச்சாமியின் தம்பி முத்துச்சாமியும், சிங்களஅமைச்சர் பிலிமதளாவும் பதவி மோகத்தால் பாதகம் புரிகின்றனர்.

1803ம் ஆண்டு கொழும்பை நிர்வகித்து வந்த நார்த்பிரபு தலைமையிலான ஆங்கிலேயப் படையணிக்கும், கண்டியரசனுக்கும் போர் நிகழ்ந்தபோது, கண்டிமன்னன் அழைப்பை ஏற்று அங்கு படையுடன் சென்ற பண்டாரவன்னியன், தமிழன் வீரத்தை நிலைநாட்டி ஆங்கிலேயரை விரட்டியடிக்கின்றான்.

பண்டாரவன்னியன் கண்டி வெற்றி விழாவில் பங்கேற்கும் வேளை, காக்கைவன்னியன் ஆங்கிலத்தளபதி வொன்றிக்குடன் சேர்ந்து, முல்லைக் கோட்டை கைப்பற்றப்படுகிறது.

வன்னி திரும்பிய பண்டாரவன்னியன் கோபாவேசமுற்று, இலங்கையிலிருந்து ஆங்கிலேயரை அழிப்பதாக சபதமிட்டு

போர்க்களமாடி மீண்டும் முல்லைக் கோட்டையை மீட்டெடுத்து ஆங்கிலேயரை யாழ்ப்பாணம் நோக்கி பின் வாங்கச் செய்கிறான்.

தொடர் தோல்வியின் விரக்த்தியால் வெகுண்டெழுந்த ஏகாதிபத்தியம், ஒல்லாந்தர் படைப்பிரிவினரையும் ஒன்றிணைத்து மீண்டும் முல்லைத்தீவை கைப்பற்ற பாரிய திட்டமிடலுடன் யாழ்ப்பாணத்திலிருந்தும், மன்னாரிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும் மும்முனைகளால் வியூகம் வகுத்து படையெடுத்தனர்.

பண்டாரவன்னியன் கற்சிலைமடுவில் யாழ்ப்பாணப் படையை தாக்கியழித்துக் கொண்டிருக்க, மறுமுனைகளால் வந்த பெரும் படையெடுப்பின் எதிர் பாராத தாக்குதலினால் 1803ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் நாள் அதிகாலை வேளை தோற்கடிக்கப்பட்டு பின்வாங்கினார். இவ்வெற்றியின் நினைவாக கற்சிலை மடுவில் ஆங்கிலத்தளபதி வொன்றிக்கினால் நினைவு நடுக்கல் நாட்டப்பட்டது.

கற்சிலை மடுவில் நடந்த போரில் பண்டாரவன்னியன் பின்வாங்கிய போதும் ஓய்ந்து விடாது தனக்குக்கிடைத்த வளங்களை ஒன்றுதிரட்டி வன்னியில் மறைந்திருந்து தொடர் தாக்குதல் நடாத்தி ஆங்கிலேயருக்கு சிம்மசொற்ப்பனமாக விளங்கினார்.

1811ம் ஆண்டு பண்டாரவன்னியன் உடையாவூர் என்ற இடத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து உக்கிரப்போர் தொடுத்தவேளை, நெஞ்சில் படுகாயமடைய படையினர் பனங்காமம் கொண்டு சென்று பராமரிக்கின்றனர். பண்டாரவன்னியனின் இலட்சிய வேட்கைக்கு உறுதுணையாக விளங்கிய இளவரசி குருவிநாச்சியார், மன்னர் மாண்டு விட்டதாக செய்தியறிந்து உயிருடன் அடிபணியக் கூடாது என்ற உணர்வுடன் கார்த்திகைக்கிழங்கை உண்டு உயிரை மாய்க்கிறாள்.

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு அடிபணியாது தமிழின உணர்வோடு வன்னி இராட்சியத்தை காக்க இறுதி வரை போராடிய ஈழத்தின் இறுதித் தமிழ்மன்னன் பண்டாரவன்னியன் 1811ம் ஆண்டு தனது 34வது வயதில் களப்போரில் ஏற்ப்பட்ட விழுப்புண் தாக்கத்தினால் வீரமரணத்தை தழுவிக் கொள்கிறான்.

◉

# மாவீரன் பண்டாரவன்னியன்

**தென்மோடி நாட்டுக்கூத்து**

எழுத்துருவாக்கம்

**அண்ணாவியார்**

**சவிரிமுத்து மிக்கேல்தாஸ்**



# பாத்திரங்கள்

**கட்டியகாரர்**
**பண்டாரவன்னியன்**
**மந்திரி, தளபதி**
**தங்கை நல்லநாச்சி**
**காதலி குருவிநாச்சி**
**தோழிகள்**
**தமிழகத் தளபதி சுந்தரலிங்கம்**
**கண்டியரசன் கண்ணுச்சாமி**
**தம்பி முத்துச்சாமி**
**அமைச்சர் பிலிமதளா, தளபதி**
**காக்கைவன்னியன்**
**மந்திரி, தளபதி**
**ஆங்கிலத்தளபதி வொன்றிக்**
**நார்த்பிரபு**
**ஆங்கிலப்படைவீரர்கள்**
**காவலர்கள், படைவீரர்கள்**
**பொதுமக்கள்**
**சான்றோர்**
**ஆலயக்குருக்கள்**
**நடன நங்கையர்**



# காப்புவிருத்தம்

ஆதியாம் இறையோன் போற்றி
அணியுற நெய்தல் சூழும் ஈழ
முல்லையும் மருதமும் குறிஞ்சி
முத்து நகைப்பெட்டகமாய்
வளமோங்கு வன்னிமை மாவீரன்
பண்டாரவன்னி நாடகத்தை
ஆய்ந் தறிந்தவை யுரைக்க
அடைக்கல அன்னையே அடிபணிந்தேன்

## வேறு காப்புவிருத்தம்

பண் இயல் கலைக்குரிசில்
தண்ணுமை கவிவல்லோனின்
இலக்கண முறைமையோடு
இளைமுறை அரங்கு ஆடும்
பார்போற்று பண்டாரவன்னி
பருதி ஒளி மாவீரன் காதை
கருதரு நாடகமாகச் செப்ப
கர்த்தர் தாழ் காப்புத்தானே



## 1ம் காட்சி

**காட்சியமைப்பு: வீதி**
**பாத்திரங்கள்: கட்டியகாரர்.**

***சபையுரை: வன்னியின் தேசவழமை கூற***
***கட்டியகாரர் சபை வரவு.***

முதலாம் கட்டியகாரன் தரு

ராகம்: கல்யாணி | தாளம்: அட

*காலைக் கதிரொளி தோன்றவே - பூவில்*
*காரிருள் பனித்துளி விலகலாய்*
*பார்த்திபன் பண்டாரன் படை கண்டால்*
*பகை கொண்ட பகைவரும் பதறுவார்*

இரண்டாம் கட்டியகாரன் தரு

*குடில் கொம்பு தவில் பம்பை முழங்கவே - வீர*
*குரகத படை நீடி அணி செய்ய*
*பிறை நுதல் பெடையன்ன கோதையர்*
*கவரி வீசிடக் காவலன் சபை வாறார்*

முதலாம் கட்டியகாரன் தரு

*மாவிலைத் தோரணம் கட்டுங்கோ - முல்லை*
*மல்லிகை பூப்பந்தல் நாட்டுங்கோ*
*நால்வகை படை தானை அணி செய்ய*
*எங்கள் நிமலன் நிருபனும் வருகிறார்*

இரண்டாம் கட்டியகாரன் தரு

*மூண்டெழும் தீயாகி பகைவரை - திணற*
*தீண்டிடும் திறல் மிகு வேந்தனாம்*
*மறத் தமிழ் காவலன் பண்டார - வன்னி*
*மாண்புறு சபை நாடி வருகின்றார்*

முதலாம் கட்டியகாரன் கூறல்

*ராசாதி ராசன், ராச கெம்பீரன் அந்நியருக்கு அடிபணியா,*
*ஆளுமை மிகு அடலேறு*

இரண்டாம் கட்டியகாரன் கூறல்

*வன்னிமை பெருநில வாட்கொடி வேந்தன்,*
*மாட்சிமை தங்கிய தமிழ் மாமன்னன் சபை வருகிறார்.*



## 2ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை
பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், அமைச்சர், தளபதி, பணிப்பெண்கள், சேவகர்.

***சபையுரை: வளமிகு வன்னிமையின் அடங்காப்பற்றை ஆளும், அடலேறு வைரமுத்து பண்டாரவன்னியன் சபை வரவு.***

பண்டாரவன்னியன் வரவு தரு

ராகம்: மோகனம் | தாளம்: ஆதி

*இலங்கும் இந்துமா ஈழ மணியெழில்*
*பொலிந்த நானில வளமிகு வன்னிமை*
*அகரமெனும் அகராதி அதிரோதன்*
*அந்நிய ஆதிக்க அரணை அளிப்பவன்*
*ஆதி சிவனின் பதம் ஆரிதம் நெறி மிகு*
*ஆதித்தன் பன்டாரவன்னியன் நானே*

*தொல் புகழ் முன்னோரெம் இயக்கர் நாகரும்*
*தொன்றுடன் பாரிலெம் தொன்மை காத்தனர்*
*ஒல்லாந்தர் ஆங்கிலர் பொய்மை போக்கியே*
*ஓங்கு தழிழ் மொழி தரணி யோங்கவே*
*மண்ணின் மாண்புடனே மறவ வீரமுடன்*
*வண்ண மணிக் கொலுவை அறமுடன் ஆள்வேன்*

வசனம்

*நீதி கோணாது அரசாளுவேன்*

மந்திரி கவி

*வாகை திணை யொலிக்க*
*வீறுடன் படை நகர்த்தி*
*செங்கதிர் இலங் கொளியாய்*
*செந்தமிழ் இசை பரப்பி*

தளபதி கவி

*வன்னியின் எழில் பெருமை*
*வழமையின் முறைமை சாற்ற -*
*தண்ணொளித் தலைவா உங்கள்*
*தகவினை இயம்பு வீரே*

பண்டாரவன்னியன் வசனம்

*வளம் கொழிக்கும் வன்னியின்*

தரு

ராகம்: பலவுரம்ச | தாளம்: ரூபகம்

*கார் கால நாளிலே வருணன் வரவால்*
*ஏரி குளங்களும் நிலமும் செழிக்க*
*ஏர் பூட்டி உழவர்கள் நாற்று நட்டார்*
*தென்றலில் தெம்மாங்கு பாட்டொலிக்க*

மந்திரி தரு

*கதிர் முற்றி வயல் நில பரப்பில் சாய*
*கன்னியர் களை பறித் தேயகற்ற -*
*அரிவினை ஆடவர் மகிழ்வாய் வெட்டி*
*நெல் மணி கொம்பறை யில் குவித்தார்*

பண்டாரவன்னியன் தரு

*காலத்தின் சுமைகளாய் ஆங்கிலேயர்*
*கால் பதித்தெம் மண்ணில் ஆங்கு செய்ய*
*எதிரியை கருவினில் கரு வறுக்கும்*
*ஏற்ற நல் யோசனை தானுரைப்பீர்*

மந்திரி தரு

*எதிரியை தலைவனாய் எண்ணினானே*
*ஏந்தலன் காக்கையான் வன்னியனும்*
*கள நிலை பின்னணி கயவர்க் குரைத்தே*
*கபடமாய் கலந்துற வாடி வாறார்*

வசனம்

*அரசே தங்கள் வீரத்திற்கும் விவேகத்திற்கும் ஈடு கொடுக்க முடியாமல், ஆங்கிலேயர் திணறும் போது, காக்கைவன்னியன் அடி வருடியாகி களநிலையை பலவீனப் படுத்துகின்றார்.*

பண்டாரவன்னியன் வசனம்

*எதிரிகளை எதிர்க்கலாம், துரோகிகளை மதிப்பிட முடியாது. காக்கைவன்னியன் நம் உறவோடு கலந்தவன் - ஏனோ இப்படித் துரோகியானான்! தளபதி!*

தளபதி வசனம்

*அரசே!*

பண்டாரவன்னியன் வேறு தரு

ராகம்: பைரவி | தாளம்: ரூபகம்

*தாய் மண்ணில் வீரர்கள்*
*வாய் மூடி மௌனிக்க லாகுமோ*
*வீர வன்னியில் தமிழாட்சி*
*தரியலரால் நிலை குலைவதே*

தளபதி தரு

*நிலத்தைப் பறித்தெங்கள்*
*பலத்தை விலை பேச லாகுமோ*
*தோளை நிமிர்த்தியே போராடி*
*சூளும் பகைமையை விரட்டுவோம்*

பண்டாரவன்னியன் வசனம்

*உலைக்களத்து நெருப்பாக என் உள்ளம் கொதிக்கிறது.*

தரு

*ஆங்கிலர் ஒல்லாந்தர் அடுத்தாரே*
*அன்னை மண் மீதிலே*
*தானைத் தளங்களின் எல்லையை*
*தளபதி திண்ணமாய் காப்பீரே*

தளபதி தரு

*வெற்றியை குறி கொண்டிடு*
*வீர வாள் திகழ் கொடி வேந்தனே*
*வீர பூமியாம் வன்னியில்*
*வந்த பகைவரும் பலியாவார்*

பண்டாரவன்னியன் வசனம்

*நமது ஆளுகைக்குட்பட்ட*

கவி

எல்லை வடக்கினிலே எழில் பரவு யாழ் கடலும்
கிழக்கொளியாம் திருமலையும் தென் அருவி ஆறோங்கும்
மேவுபெறு மன்னாரும் மேற்கெல்லையாய் விளங்கு
வளமான வன்னிமையின் வனப்புயர ஆளுவோமே

வசனம்

தளபதி, நமது ஆளுமைக்குட்பட்ட மேற்குக் கரையாம் மன்னார், மாந்தை, விடத்தல் தீவும், கிழக்குக் கரையாம் முல்லைத்தீவு, அளம்பில், செம்மலை, தென்னமரவடி ஆகிய கரை துறைப் பகுதிகள் அவதானமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

தளபதி வசனம்

அரசே, தங்கள் ஆணைப்படி நம் கரை துறைப் பகுதிகளை கண் இமைபோல் கண்காணிப்பேன்.



## 3ம் காட்சி

காட்சியமைப்பு: மாளிகை
பாத்திரங்கள்: காக்கைவன்னியன், மந்திரி, தளபதி, ஆங்கிலத்தளபதி வொன்றிக்.

**சபையுரை: வன்னியின் அடங்கலான கரிக்கட்டு மூலை என்னும் குறுநிலத்தை ஆளும் காக்கைவன்னியன் சபை வரவுடன், ஆங்கிலத்தளபதி வொன்றிக் வரவு.**

காக்கைவன்னியன் வரவு தரு

ராகம்: கல்யாணி | தாளம்: அட

*வீரம் செறி மறவர் வேந்தர் குலமுதித்து*
*சூரனாய் எழிலுறு கரிக்கட்டு மூலையாள்*
*குறுநில மன்னனாய் குவலயம் போற்றிடும்*
*குபிலன் காக்கைவன்னி சபை தன்னை நாடியே*
*பருதி ஒளி கிரணன் மருவி வெள்ளையரோடு*
*கருதி சதிபுரிய மகிழ்வோடு செல்வேன்*

*குரு குலந் தன்னனிலே குருவியாம் நாச்சியை*
*குலவிக் காதல் கொள்ள கடுநகை செய்தாளே*
*வேந்தன் எனை வெறுத்து வெருவி பண்டாரனை*
*விரகமாய் மருவினாள் விரக்தியால் துடித்திட*
*திருமலை அரசியாம் பண்டாரன் தங்கையை*
*வணிகனாய் வசமாக்கி வஞ்சம் தீர்ப்பேனே*

வசனம்

*கனகமணி ஆசனம் செல்லுவேன்.*

மந்திரி கவி

*முத்திழை மகிடம் சூடி எத்திசை எங்கும் போற்ற*
*கருதரு கரிக்கட்டாளும் காவலா போற்றி போற்றி*

தளபதி கவி

*அடங்கிடாப் பற்றோனான ஆணவப் பண்டாரவன்னி*
*அகந்தையை அடக்கி நமது ஆட்சியை விரிவு செய்வோம்*

காக்கைவன்னியன் வசனம்

*இந்தப் பிறவி எடுத்ததே, என் ஜென்ம விரோதி பண்டாரவன்னியனை பழிவாங்கவே.*

**(ஆங்கிலத்தளபதி வொன்றிக் சபை வரல்,**
**காக்கைவன்னியன் கைலாகு கொடுத்து வரவேற்றல்)**

வசனம்

*வாருங்கள் மேன்மை தங்கிய வொன்றிக் பிரபுவே, எதிரிக்கு எதிரி நண்பன்.*

வொன்றிக் வசனம்

*நன்றியுடையோரிடம் நட்பை வளர்ப்பதுதான் எமது குணம்.*

தரு

*மஞ்சர மகிடமுடி மகிபா - வீர*
*குஞ்சரனே குடியிறையும், அதிகாரமு மளித்தாய் -*
*பேசருமுன் ராச்சியத்தின் பாது காப்பை -*
*நேசமுடன் வழிநடத்தி வன்னிமையை மீட்போம்*

காக்கைவன்னியன் தரு

*ஆங்கிலேய அதிபதியே கேளும் - அன்று*
*அகம்பாவமாய் பகைவாதியாம் பண்டாரவன்னியனும் -*
*குருகுலத்தில் குருவியாளை விரும்ப என்னை -*
*குமைந்தளித்த குபிலன் மீது நெஞ்சில் வஞ்ச முண்டு*

வசனம்

*நெஞ்சம் நெருப்பாய் எரிகிறது, என் உணர்வை உருக்குலைத்து வஞ்சனை புரிந்து விட்டான்.*

வொன்றிக் வசனம்

*உமது காயமும், துயரமும் புரிகிறது. நமது வேள்வியில் அவன் விரைவில் வீழ்வது நிச்சயம்.*

தரு

அஞ்சவேண்டாம் மிஞ்சு திட்டம் உண்டு - நாமும்
கஞ்சுகராய் கரிக்கட்டினை பாசறையாய் கொண்டு -
கண்டியோடு முல்லை தள கோட்டை - தன்னை
காவு கொள்ளும் வல்ல திட்டம் ஆற்றலுடன் வகுப்போம்

காக்கைவன்னியன் தரு

பைந்தமிழ் உணர்வு மிகு மழுவன் - வீர
பண்டாரனும் சூளுரைத்தான் ஈழ மண்ணை விட்டு -
ஆங்கிலேய ஆதிக்கத்தை அகற்றி - தமிழ்
ஆளுமையை நாட்டும் வரை மணமே இல்லை என்று

வொன்றிக் வசனம்

வாளையும், ஈட்டியையும் வைத்துக்கொண்டு வரலாறு படைக்கப்போகிறானாம். தமிழ் அரசுக்கள் பலவும் பணிந்து விட்டன, பண்டாரவன்னியனுக்கும் கண்டி அரசனுக்கும் மட்டும் விடுதலையாம் வேட்கையாம்.

காக்கைவன்னியன் வசனம்

பண்டாரவன்னியன் நாடிழந்து நாடோடியாக வேண்டும். எனது காதலியான அவன் தங்கை நல்லநாச்சி மானமிழந்து துடிக்க வேண்டும். ஆம் நேரமாகிறது வழக்கம் போல் வணிகனாய் மாறுவேடமிட்டு நல்ல நாச்சியை சந்திக்கவேண்டும்.



## 4ம் காட்சி

**காட்சியமைப்பு: நந்தவனம்**
**பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், குருவிநாச்சி.**

**சபையுரை: பண்டாரவன்னியனும்
காதலி குருவிநாச்சியாரும் நந்தவனத்தில் சந்திப்பு.**

குருவிநாச்சி வசனம்

*பிரபு பூவுக்கு மணம் போன்று, வாழ்வுக்கு அன்பு போன்று நமது நெஞ்சில் தாயக இலட்சியமும், காதலும் பின்னிப் பிணைந்தவை.*

பண்டாரவன்னியன் வசனம்

*அன்பே நாம் நினைக்கும் நிலையை பொறுத்தே, நம் புலன்களுக்கு எல்லாம் மாறுபாடாய் தென்படும்.*

குருவிநாச்சி வசனம்

*எந்த நிலையிலும் நிலவாய் பௌர்ணமிக்கிறீர்கள்.*

பண்டாரவன்னியன் வசனம்

*உன் பேரழகிற்கு உவமையாக அந்த*

தரு

ராகம்: கீரவாணி | தாளம்: அடதளகாப்பு

நிலவை பிளந்தொரு நெற்றிப் பிறையணி
மலரிதழ் மகரந்த பேரெழிலாள் -
நெரிகுழல் குருவியாள் வேல் விழி நாச்சியே -
நீரலை அருவி ஒலி உன் சிரிப்போ

குருவிநாச்சி தரு

புலியை நிகர்த்திடு புயவீர புரவலா

*புலர்ந்தொரு காலம் என்றோ விடியும் -*
*ஆசைக் கனவுகள் ஆயிரம் ஆனாலும் -*
*அந்நியர் ஆதிக்கத்தை முன்னழிப்போம்*

வசனம்

*கதிரவனுக்காக தாமரை காத்திருக்கும்.*

பண்டாரவன்னியன் வசனம்

*அன்றொரு நாள் மறத்தமிழ் மங்கை குருவியின் வீரத்தை கண்டு வியந்தேன்.*

தரு

*வற்றாப்பளை எழு பத்தினிக் கண்ணகி*
*விசாக விழாவிலன்று வீறு கொண்ட -*
*மத கரி தனை மாய்த்த குருவியாம் திருமகள் -*
*வளையல் கை வாள் பிடித்த வீரமதை*

குருவிநாச்சி வசனம்

*வாழும் மண்ணை விட்டு, வந்த எதிரிகளை விரட்டும் வரை நம் வாழ்வில்*

தரு

*மனம் ஒன்றாய் ஆகினும் மலர் மணம் வீசாது*
*இனமான ஆளுமையை இருப்பாக்கி -*
*சுதந்திரம் என்றோ நமக்கன்றே வாழ்வென -*
*சூளுரை கொண்டோமே நெறியாய்*

பண்டாரவன்னியன் வசனம்

*குருவி, என் இதய வெடிப்பின் பிளவுக்குள்ளும் நீ எனக்கென அளித்த அன்பு கல்வெட்டாய் பொறிக்கப்பட்டிருக்கிறது.*



## 5ம் காட்சி

**காட்சியமைப்பு: அரண்மனை**
**பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், மந்திரி, தளபதி, சேவகர், சுந்தரலிங்கம்.**

***சபையுரை: தமிழகத்திலிருந்து வீரபாண்டியகட்டப் பொம்மனின் தூதராக தளபதி சுந்தரலிங்கம் வன்னிக்கு வருகை.***

சேவகன் வசனம்

*தமிழகத்திலிருந்து தங்களைக் காண தளபதி சுந்தரலிங்கம் வந்துள்ளார்.*

பண்டாரவன்னியன் வசனம்

*அழைத்து வாருங்கள்.*

சுந்தரலிங்கம் கவி

நெற்றியில் நீறு இட்டு, நீள் கர வாளை ஏந்தும்
போரியல் வலிமைமிக்க, புரவலா போற்றி போற்றி
தாயக தமிழகத்தின், தன்மான இருப்பை காக்கும்
பாஞ்சால மன்னன் ஓலை, பரிவுடன் தந்ததிட்டாரே

பண்டாரவன்னியன் வசனம்

*அமருங்கள், மானப்போர் நடக்கும் மண்ணில் மார்பு தட்டிப் போராடும் மறவனின் தானைத் தளபதி சுந்தரலிங்கமல்லவா. கடிதத்தைப் படியுங்கள்.*

சுந்தரலிங்கம் கடித வாசகம்

வெண்புரவிமீது வீரந்திகழ் மறவ
வெற்றிவாள் கொடியுடை வேந்தே
வல்லமை அழலே பாஞ்சால மகிபனும்
பரிவுடன் வரைந்திடு நிருபம்

வாணிபமென்று தமிழக ஈழ
வளர் நிலை யாவையும் வசமாக்கு
கெறுவுடன் வெள்ளையர் வன்னிமை கண்டியை
கரவுடன் காலக் கணக்கிட்டே

கண்டியின் மன்னனாய் கண்ணுச்சாமிதனை
கருத்துடன் நாம் எடுத்தியம்ப
திடமான முடிவாக்கி தன்மானத் தளமிட்டீர்
திசைமாறி ஆங்கிலர் பதைக்க

வாயில்லா விலங்கோ, வந்தேறு குடியோ
நம் வரலாறு வாகை பெறவே
தரணியில் நமக்கெனும் தடமோடு நடையிடு
தமிழக கட்டப்பொம்மன் கையெழுத்தே

பண்டாரவன்னியன் வசனம்

*நண்பர்கள் எண்ணத்தை சுமந்து வந்த தாயக தமிழகத்தின் தளவீரனே! அலைகடல் நம்மை அணையாக தடுத்தாலும் கலையும், கன்னித்தமிழும் உறவை வளர்க்கும்.*

சுந்தரலிங்கம் வசனம்

*துடிக்கின்ற இனத்தின் துடுப்பாகி, வம்புக்கு வந்தோரை வாயடக்கும் வல்லமையின் வடிவமே!*

பண்டாரவன்னியன் தரு

ராகம்: கல்யாணி | தாளம்: ஏகதாளம்

வீரபாண்டிய கட்டப்பொம்மனும்
தீர மிகுந்த வெள்ளையத் தேவன் -
நினைவை நெருப்பாய் சுமந்து வந்திடு -
தானை வீரனே சுந்தரலிங்கா -

சுந்தரலிங்கம் தரு

திடமிகு வீரம் தெளிவான கொள்கை
அறமிகு மண்ணில் ஆங்கிலர் வந்து -
ஆளுகை தனை மேவ எண்ணியே -
ஆண்மைக்கு அறை கூவினார்களே

பண்டாரவன்னியன் தரு

நமது இனம் மொழி காக்க பாரில்

எமது ஆளுமை நாடு வேண்டும் -
தாயக தன் ஆட்சி இழக்கும்
திராணியற்ற இனமாய் ஆவதா -

சுந்தரலிங்கம் தரு

மூ-வேந்தரின் வழியே முகிழ்த்து
முல்லைக்கு தேர் ஈய்ந்த இனத்தை -
துரோகத்தின் துணையாக மாற்றினார் - கூறு பட்டு குடியிழப்பதோ

வசனம்

ஈழமண்ணில் தமிழன் நல்லாட்சி தொடர வேண்டுமென்பதே தமிழகத்தின் விருப்பமாகும். நம் முப்பாட்டி கண்ணகிக்கு, கலைக்கோவில் அமைத்து பெருவிழா எடுத்தும், கன்னித்தமிழ் வளர கண்ணயராது பாடுபடும் பணிகள் தமிழகத்தை மிஞ்சிய உணர்வை காணமுடிகிறது.

பண்டாரவன்னியன் வசனம்

அன்றைய தமிழகத்தின் வரலாற்றை நோக்கும் போது மூவேந்தரின் அரசுரிமை இமயம் முதல் ஈழம்வரை பரவியிருந்தது. இன்றோ!

வேறு தரு

சேர சோழ பாண்டியர் பொற்காலம் - வீர
ஆள் நிலமும் அரசியல் கோன்குடி முறைகள் நான்கும் -
இருவகை நீர் நிரப்படைகளோடு - கரிபரிதேர்
காலாட் படை நடாத்தி கொடி முடி கொண்டாண்டார்

சுந்தரலிங்கம் வசனம்

ஓரினமாய் வாழ்ந்த தமிழினத்தை பல நூறு வகை சாதியாக்கி

தரு

சங்க காலத் தமிழுணர்வின் இணைவை - வட
ஆரியரும் பார்ப்பனரும் பொல்லாக் குழி பறித்தே -
பத்தாம் நூற் றாண்டில் முக-மதியர் - பின்பு
விசயநகர் வடுகர்படை பகைமை மூட்டி நுழைந்தார்

பண்டாரவன்னியன் தரு

களமதனில் வென்ற பாண்டி மன்னர் - மற்றும்
ஈழம் வென்ற ராஜராஜசோழன் - கரிகாலன் -

இருவருமே படை நடாத்தி வென்றார் - பின்பு பிடித்த
நாட்டை கொடுப்பதுவே பெருமையென்றே நினைத்தார்

வசனம்

*அடக்கிப் பிடித்த ஆட்சியை மீண்டும் கொடுப்பது செந்தமிழர் பெருமைக்கு செறிவு என திரும்பிக் கொடுத்தனர், இன்றைய தமிழகத்தில்*

சுந்தரலிங்கம் தரு

எட்டப்பனும் எதிரியாக மாறி - எங்கள்
ஏக்கம் எதிர்-பார்ப்புரிமை எதிர்க்கும் நீசானாகி -
ஆங்கிலேயர் ஆணை பெற்றே வரிகள் - ஆளும்
இறைமையற்ற எடுபிடியாய் அடக்கி வைக்க நினைத்தார்

வசனம்

*ஈழம் போன்றே தமிழகத்திலும் உரிமைப் போர் நடக்கிறது.*

பண்டாரவன்னியன் வசனம்

*துரோகத்தின் வலிமை நம்மை துவளவைக்கிறது அர்ப்பணிப்புடன் அணிவகுப்போம்.*

சுந்தரலிங்கம் வசனம்

*நீர் நிறைந்த வரப்புப் போன்று என்றும் நாம் ஒப்பற்ற உறவுகள் ஓங்கி ஒலிக்கும்.*



## 6ம் காட்சி

**காட்சியமைப்பு: கண்ணகி அம்மன் கோவில்**
**பாத்திரங்கள்: குருக்கள், பண்டாரவன்னியன், குருவிநாச்சி, நடனநங்கையர்.**

***சபையுரை: வற்றாப்பளை கண்ணகி அம்மன் விசாகவிழா.***

பண்டாரவன்னியன் வசனம்

*அம்பிகையே அருள் வடிவே, பாண்டியனுக்கு நீதி புகட்டியவளே. மூத்த குடியென முடி சூடி ஆண்ட இனம், அரசுரிமைகளை இழந்து வருகிறது. எதிரிகள் தூபமிட்டு துரோகிகளாக உருவாக்க, இனம் இனத்தை பகைக்கிறது.*

**(பண்டாரவன்னியனும் குருவிநாச்சியும் அம்மனை தரிசித்தல்)**

ஆலயக்குருக்கள் வசனம்

*அருள் பரிபாலிக்கும் கண்ணகி அம்மனின் விசாகவிழாவை முன்னிட்டு, வருகை தந்திருக்கும் அடங்காப்பற்றை ஆளும் தமிழேறே தங்களையும் இளவரசியாரையும் வரவேற்பதில் பெருமை கொள்கிறோம். கூத்தும் குரவையும் இணைந்த ஆடல் கலையால் அன்னையின் புகழ் பாடுவோம்.*

பண்டாரவன்னியன் வசனம்

*நமது நுண் கலைகளால் தேவியை வாழ்த்தி வணங்குவோம், ஆடல் ஆரம்பமாகட்டும்...*

நடனநங்கை பூங்குழலி தரு

ராகம்: கல்யாணி | தாளம்: ஆதி

*வாழியவே வீரந் திகழும் வன்னியாம்*
*எங்கள் தாயகமும் வாழ்க வாழ்கவே*

கயல்விழி தரு

*செந்தமிழர் பண்பாட்டினை சீருடன் எடுத்தியம்பி*
*இயலுடன் இசை நாடக இலக்கண முத்தமிழ் தொடுத்து*
*அங்கயர் கன்னியர் போற்று மங்களச் செல்வியாம் எங்கள்*
*வற்றாப்பளை கண்ணகியின் பொற்புறு விசாக விழா (வாழியவே)*

பூங்குழலி தரு

*மருத முல்லை நெய்தல் சூழ முக்கனியும் நால் வளமும்*
*உழும் வயல்கள் நிலத்தினிலே உதிரமதை உரமாயிட்டு*
*ஆனை கட்டி போரடித்து அறுவடை சேர் கொம்பறையும்*
*சீர் மிகுந்த வன்னிமையின் செம்பவள முகையவிழ்ப்பு (வாழியவே)*

கயல்விழி தரு

*சுதந்திர மரபு காக்க சூரியப் புலர்வாய் எழு*
*மறவர் குலத்தமிழினமும் மாற்றார்க்கடி பணியாதெனும்*
*வற்றாத நீதி நெறியால் வானுயர் வலிமை பெற்ற*
*இராவணர் பரம்பரையின் பண்டார-வன்னியே வாழி*

**(ஆடல் நங்கையர் அவையை வணங்குதல்)**

பண்டாரவன்னியன் வசனம்

*இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து இசைந்தாடி அரங்கொளி செய்யும் மங்கயரை குருவிநாச்சியார் கௌரவிப்பார்.*

குருவிநாச்சியார் வசனம்

*குழலிசையும் - யாழிசையும் எழுப்பிய பண்ணமைவின் நாத ஒலிக்கேற்ப பரதக் கலையை அரங்கினிலே அளவு மிகையாதபடி ஆடிய ஆடல் மணிகளுக்கு எங்கள் அன்புப் பரிசு...*

**(பரிசளித்தல்)**

பண்டாரவன்னியன் வசனம்

*குருவிநாச்சியாரே மாறு வேடமிட்டு விழாவிற்கு வந்திருக்கும் நண்பரை தனியாகச் சந்திக்க வேண்டும். நீங்கள் புறப்படுங்கள்.*



## 7ம் காட்சி

**காட்சியமைப்பு: கோவில்மண்டபம்**
**பாத்திரங்கள்: காக்கைவன்னியன், பண்டாரவன்னியன்.**

***சபையுரை: விழாவிற்கு மாறுவேடமிட்டு வந்த காக்கைவன்னியனை பண்டாரவன்னியன் சந்தித்தல்.***

பண்டாரவன்னியன் வசனம்

*நண்பரே, நன்றிகள்.*

காக்கைவன்னியன் வசனம்

*அரசே இந்த ஏழையை!*

பண்டாரவன்னியன் வசனம்

*இனம் கண்டு கொண்டேன் நண்பர் காக்கைவன்னியர்.*

காக்கைவன்னியான் வசனம்

*பாம்பின் கால் பாம்பறியும். குருகுலத்திலிருந்தே கூட இருந்து குழிபறித்து சரித்தவனா?*

பண்டாரவன்னியன் வசனம்

*சரிவது வேறு சாய்ப்பது வேறு, காலம் பகைத்ததால் இரு துருவமாகி விட்டோம். ஆங்கிலேயருக்கு துணையானால் நாடு என்னவாகும்.*

காக்கைவன்னியன் வசனம்

*நாடு நாசமானால் நமக்கென்ன. ஆங்கிலேயரை எதிர்ப்பது காட்டாற்று வெள்ளத்தை கை கொண்டு தடுப்பது போன்றது.*

பண்டாரவன்னியன் வசனம்

*கராம்புக்கும் கறுவாவுக்கும் இங்கு கடலோடி வந்தவர்களின் காட்டாட்சிக்கு காவடியா*

தரு

நாடு நாசமானால் நமக்கென்னும் மனோ பாவம்
கூடப்பிறந்தே கொல்லும் நோயாகி
சாவுக்குப் பயந்தவன் சதிகாரன் ஆகினால்
சரித்திரம் துரோகி யென்றே சபிக்கும்

காக்கைவன்னியன் தரு

ஆங்கிலேயர் தமை அடக்கிட நினைப்பது
ஆத்திரக் காரன் புத்திக் கொப்பானதே
தீராக்கோபம் கொண்டால் போராய் முடிந்திடும்
கூர் மீது தலை வைக்கும் நிலையே

வசனம்

ஏதோ மொழி பேசுபவருக்காக, ஆங்கிலேயர் எண்ணத்துக்கு எதிராக கண்டியில் கண்ணுச் சாமிக்கு முடி சூட்டியதை என்ன வென்பது.

பண்டாரவன்னியன் வசனம்

வேறு மொழியல்ல நம் தமிழ் உச்சரிப்பில்தான் ஊருக்கு ஊர் வித்தியாசம்,கூருகள் பல மொழி ஒன்றுதான் தமிழுணர்வில் ஒன்றாகி உரிமைக்காய் போராடுகிறோம்.

தரு

புலரும் உதயத்தை கூண்டினுள் காண்பித்து
மலரும் சுதந்திரமாய் திரிப்பார்
எலிவளையானாலும் தனிவளை தமிழ் மண்ணை
பலியிட்டு தாரை வார்த்தல் நெறியா

காக்கைவன்னியன் தரு

சுதந்திரம் எனக் கூறி தந்திரம் செய்கிறாய்
சுற்றி வளைத்து மூக்கை தொடாதே
பிள்ளையை கிள்ளியே தொட்டிலை ஆட்டுவார்
பாவம் துரோகமல்ல விவேகம்

பண்டாரவன்னியன் வசனம்

ஆதிக்கத்துக்கு துணையாகி, மூடமதிச் சாத்திரமிடுகிறாய். விதியென்றும் வினையென்றும் விசம் கலக்கப்பட்டு திசைமாறி திண்டாடுகின்றாய்.



## 8ம் காட்சி

**காட்சியமைப்பு: கண்டி அரண்மனை**
**பாத்திரங்கள்: கண்டியரசன், மந்திரி, தளபதி, பணிப்பெண்கள்.**

***சபையுரை: கண்டி இராச்சியத்தை ஆட்சிபுரியும் கண்ணுச்சாமி என்றழைக்கப்படும் விக்கிரமராசசிங்கன் சபை வரவு.***

கண்டியரசன் வரவுதரு

ராகம்: மோகனம் | தாளம்: ஆதி

*பொங்கும் கலையொலிக்கும் கண்டி*
*பொலிந்த குறுஞ்சி பாலை பண்ணுறவே*
*கமலமேவு கந்தன் அருளால் அறமதோங்கு*
*காவலன் விக்கிரம சிங்கனும் நானே*

*தரணி போற்று மகிபன் பகைவர்*
*திட்ட மடக்கும் தீரன் கண்டி*
*நிலத்தின் நிமிர்வோடு பலத்தில் களமாடி*
*அரணமைத்து ஆளும் அரசனும் நானே*

*சிங்க நாதமிட்டு சீரிளமை*
*சங்கத் தமிழால் போற்றி வளமுறவே*
*துங்க கனகமணி முத்திழைத்த கொலு*
*சங்கையுறவே பாரில் இருந்தர சாள்வேன்*

வசனம்

*செங்கோல் செலுத்தி அரசாளுவேன்.*

அமைச்சர் பிலிமதளா கவி

*அயர் வில்லா உழைப்பினோடு*
*அரசியல் நெறி நயக்க*
*வனப்புறு கண்டி யாளும்*
*வள்ளலே போற்றி போற்றி*

தளபதி

*குன்றென நிமிர் வினோடு*
*குடையோடு கொடி கொண்டாண்டு*
*நன்றென நினைப்ப தெல்லாம்*
*நடத்திடும் தூயா போற்றி*

கண்டியரசன் தரு

ராகம்: முகாரி | தாளம்: அட

*அறிவும் ஆற்றலும் அணிசேர் அமைச்சரே*
*அறம் மிகுந்திடு - ஆளுகை சிறப்பின்*
*மேன்மைகள் தானுரைப்பீர் அவையின் முன்னே*

அமைச்சர் பிலிமதளா தரு

*எந்தையாம் ஏந்தலே எழில் திகழ் கண்டியில்*
*எல்லா வளமும் - ஏற்றம் பெற்றே மக்கள்*
*போற்றி மகிழ்கிறார் எனது அரசே*

கண்டியரசன் தரு

*அடங்கா வீரனாம் திடங் கொள் தளபதி*
*எல்லை யெங்குமே - ஆங்கிலப் படையணி*
*கண்டஞ்சி அதிரவே அரணாய் காப்பீர்*

தளபதி

*கண்டி மாநகரினை காரிருள் சூழ்ந்ததே*
*கபடர் சதியால் - மூலபலமாக*
*முத்துச்சாமி சேர்ந்தே பாலமாகினார்*

வசனம்

*கண்டி அரசுரிமைப் போட்டியில் தோல்வியுற்ற முத்துச்சாமி துரோகியாகி விட்டார் அரசே.*

கண்டியரசன் தரு

ராகம்: பைரவி | தாளம்: ஆதி

*ஆழி சூள் இலங்கா புரி எழில்*
*அரண் மிகு கண்டியை நாடியே*
*ஆங்கிலர் அடக்கிட முனைந் திடில்*
*அதிர் கணைகள் தொடுப்போம்*

*மாட்சி சேர் கண்டியின் மகிமையை*
*ஆட்சிக்காய் அந்நியன் ஆளாகி*
*சத்துருவான என் சோதரன்*
*சாக் குறி தன்னையே சூடினான்*

*இருப்பிடம் எங்களின் தாயகம்*
*இடரினால் அடிமைகள் ஆவதோ*
*இரவு தன் நிலையது மாறுமோ*
*வழுவில்லா வல்லமை காட்டுவோம்*

வசனம்

*கோட்டை எங்கும் படை நிரைத்து குறிப்பாய் காவல் புரிவீர்.*



## 9ம் காட்சி

**காட்சியமைப்பு: காடு**
**பாத்திரங்கள்: காக்கைவன்னியன், நல்ல நாச்சி.**

***சபையுரை: காக்கை வன்னியன் வணிகனாக மாறு வேடமிட்டு, பண்டாரவன்னியன் தங்கை நல்லநாச்சியை காதலித்தல்.***

காக்கைவன்னியன் வசனம்

*விசாக விழாவில் பிரபுவாக வேடமிட பண்டார வன்னியன் கண்டுபிடித்து விட்டான். கவனமாக இனிமேல் வணிகனாக மாறு வேடமிட்டு அரசி நல்லநாச்சியை நம்ப வைத்து விட்டேன், காத்திருப்பாள்.*

தரு

ராகம்: செஞ்சுருட்டி | தாளம்: ஏகம்

ஆடகப் பூம்பாவை அரசி நல்ல நாச்சி
கூட நானும் சேர வென்றே
தேடலுடன் செல்வேன்

ஆங்கிலேயர் வரவை ஆதிக்க சுவடை
அறவே அளிப்போ மென்போரை
அடுத்து நானும் கெடுப்பேன்

வன்னி மன்னன் தங்கை வணிகன்
வசமாகி முறை தவறி கறை
படிந்தாள் மடை திறந்த நீராய்

***(நல்லநாச்சி மர நிழலில் காத்திருத்தல்)***

வசனம்

*என் கோமள வல்லியை இந்த வேப்ப மரத்தடியில் நீண்ட நேரம் காக்க வைத்து விட்டதனால் கோபமா?*

நல்லநாச்சி வசனம்

*ஏதோ தவறிழைப்பது போல் பதட்டமேன்.*

காக்கைவன்னியன் தரு

ராகம்: கருணைப்பிரியா | தாளம்: ரூபகம்

*கத்தும் குயிலொலியோ*
*இல்லாவிடில் கானமயில் நடமோ*
*எண்ணமாய் ஓடி வந்தேன்*
*வண்ணக் கொடி வேதனை ஏனிப்போது*

நல்லநாச்சி தரு

*அந்நிய ஆங்கிலேயர்*
*நம தரும் அன்னை மண் மீதினிலே*
*அப கடம் புரிவதனால்*
*மனதினில் ஆகுலம் ஆகிறது*

காக்கைவன்னி வசனம்

*ஆங்கிலேயர் அவனியையே தம் ஆளுமைக்கு உட்படுத்தியவர், அவர்களுடன் மோதுவதா? அரசியல் தெளிவற்றவன் இந்த வணிகன்.*

தரு

*தேனினை தேடும் வண்டாய்*
*மலர் நாடி தேடி இங் கோடி வந்தேன்*
*சஞ்சலம் ஏன் அணங்கே*
*அருவியாய் சல சலத்தே ஒலிப்பாய்*

நல்லநாச்சி தரு

*மணி முடி மீ தொளிரும்*
*மரகத மாணிக்கம் ஆன எந்தன்*
*உடன் பிறப்போடு எண்ண*
*உங்கள் நிலை ஊனமாய் உறுத்துகுதே*

வசனம்

*துளியும் சுதந்திர உணர்வின்றி, எதிரிக்கு துணையாக பேசுகிறீர்களே?*

காக்கைவன்னியன் வசனம்

*நாட்டு விவகாரம் ஏனிப்போ? நம் காதலை, எதிர் காலத்தைப் பற்றி சிந்திப்போம்.*



## 10ம் காட்சி

**காட்சியமைப்பு: கண்டி அரண்மனை**
**பாத்திரங்கள்: கண்டியரசன், தளபதி, சேவகர்.**

**சபையுரை: கண்டியை கொழும்பிலிருந்த ஆங்கிலேயர் படை முற்றுகை. மன்னன் மந்திராலோசனை.**

சேவகன் வசனம்

*மாட்சிமை தங்கிய மகாராஜா, ஆங்கிலேயர் படையெடுத்து நம் எல்லைகளை முற்றுகையிட்டுள்ளனர்.*

கண்டியரசன் சந்ததம்

*அதிராச் சிறப்புடை அணிவகு படை நிரை*
*அரனுறு கண்டியினை- அரசிறை கேட்டிடு*
*ஆதிக்க ஆங்கிலர் ஆஸ்தானம் மீதடர்வாய்*

*தாய்மையை தொழுமெம் தாயக மீதினில்*
*திரளுறு சேனையினை - பெரு நிலம் காத்திட*
*வரு தடை யுடைத்தே திருவினை யாக்கிடுவோம்*

தளபதி வசனம்

*அரசே, சதியின் வெளிப்பாடு நம் உள்ளரங்கில் நடக்கிறது. மதியுகமாக அணுகவேண்டும்.*

கண்டியரசன் தரு

*வானம் பொய்யா வண்மையுறும் கண்டி*
*வளர் தலை முறையின் உரிமை தனை அடக்கி*
*வீரமிகு இறைமை தனை அளித்தே*
*வந்த வெள்ளையரும் பேரம் பேசும் நிலையோ*

தளபதி தரு

*பார்புகழும் பார்த்திபா எம் அரசே*

போரை முழங்கி வரும் ஆங்கிலர் கை ஓங்க
சூழ்ச்சி மிகும் நம் அமைச்சர் பிலிமா போல
ஆட்சிக்காக அலையும் முத்துச்சாமி

வசனம்

அரசே ஆங்கிலேயருக்கும் உதவி புரிந்து, எதிரிகளின் கூட்டுடன் நிழலாட்சியை நடத்துவதே அமைச்சரின் திட்டம். மறுபுறம் தங்கள் சகோதரன் முத்துச்சாமி அடி வருடியாகி அலைகிறார்.

கண்டியரசன் தரு

வீரவேரின் விழுதுகொண்ட மறவர்
போரில் வெஞ்சினப் படைக்கு அஞ்சலாமோ
கண்ணொளியாம் சுத்ந்திரத்தை இழந்து
மண்ணைக் கயவரிடம் காணிக்கையாய் கொடுக்க

தளபதி தரு

பகைவரஞ்ச பார் புகழும் வீரன்
போர் பட்டறையில் பழு காச்சிய தமிழன்
காவலன் பண்டாரவன்னி தனையே போரில்
காக்கும் கந்தனாய் அழைப்பீர் அரசே

கண்டியரசன் வசனம்

ஆம், உறியிலே வெண்ணைய் இருக்க நெய்க்கு அலைவதா. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை அனுமதிக்காத அடலேறு நண்பன் பண்டாரவன்னியனுக்கு உடனே ஓலை அனுப்புவோம்.

கவி

என்னரும் வாசல் காக்கும் ஏற்புறு வீரனே கேள்
பொன்னணி மகிட வேந்தன் போற்றகு பண்டாரவன்னி
தன்னிகரில்லாத் தலைவன் நின்னரும் நாட்டிற்க் கேகி
திட்டமாய் நிருபம் தன்னை திகழுடன் அளித்திடாயே

வசனம்

வீரனே, அதி விரைவாகச் சென்று வன்னியை ஆளும் மகிபன் பண்டாரவன்னியிடம் இவ்வோலையை சேர்ப்பீராக.

சேவகன் வசனம்

அப்படியே செய்கிறேன் ராஜனே!



## 11ம் காட்சி

காட்சியமைப்பு: அடங்காப்பற்று அரண்மனை
பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், அமைச்சர், தளபதி, தூதன்.

**சபையுரை: கண்டியரசன் விக்கிரமராசசிங்கன் ஆங்கிலேயரின் படையெடுப்பை முறியடிக்க உதவி கோரி, பண்டாரவன்னியனுக்கு ஓலை அனுப்புதல்.**

மந்திரி வசனம்

*அரசே கண்டிமன்னன் விக்கிரமராசசிங்கன் அவர்கள், தூதன் மூலம் ஓலை அனுப்பியுள்ளார்.*

பண்டாரவன்னியன் வசனம்

*நண்பன் கண்ணுச்சாமியிடமிருந்தா? வரச் சொல்லுங்கள்.*

**(தூதன் வணங்கி ஓலையைக் கொடுத்தல்)**

பண்டாரவன்னியன் கடித வாசகம்

அக்கினி குலமுதி ஆதிக்கப் பகையளி
அறியாமை போக்கு மதியே -
அறிவியல் கோவே கண்டி மாமன்னன்
அன்புடன் அழைத்திடு ஓலை

பிரித்தானியாவின் பிரித்தாளு படையும்
பிரமமாய் கண்டி புகுந்தார் -
விடுதலை வீழ்வதா வீர இனம் சரிவதா
வெற்றியதுதானே தேரேறி வந்து விடுமோ

ஆவணத் தடமிகு அடல் தமிழ் ஏறே
ஆதிக்கப் படையினை அடக்க -
ஆறுமுக வேலனாய் அழகு மயிலேறி வா
ஆருயிர் விக்கிரமராசனின் கையெழுத்தே

மந்திரி வசனம்

*அரசே ஆங்கிலேயரின் அகம்பாவத்தை அடியோடு அளிக்க வேண்டும்.*

பண்டாரவன்னியன் தரு

*அதிகாரத் திமிரோ ஆங்கிலேயர் அப கடத்தனமோ*
*அதிகாரத்திமிரினால் - அடுத்திடக் கெடுத்தாரே*
*மதி கெட்டோர் செயலினால் - மனம் நெருப்பாகுதே*

*தமிழின விடிவே தலையாய தாரகமாகும்*
*தமிழன்னை துகிலுற - தலைமுறை குனிவதோ*
*தடம்பதி பகைவரை - திடங்கொண் டழித்திடவே*

*தாய் முலைப்பாலில் தந்தாளே தமிழின வீரம்*
*தொப்புள் கொடியுறவை - தொடர் பிழ விடுவேனோ*
*திகிலாய் ஊடறுத்தவர் - திணற நிலை குலைப்பேன்*

வசனம்

*அண்ணன் ஆள்வதை பொறுக்க முடியாத தம்பி, ஒட்டாத உறவு.*

மந்திரி வசனம்

*முத்துச்சாமி ஆங்கிலேயரின் அடியாள். பாசத்தை விட்டு பகைக்கு பங்காளி.*

பண்டாரவன்னியன் வசனம்

*தளபதி கண்டியின் மையப் பகுதியை ஓர் பிரிவும், அடுத்து கிழக்கெல்லையால் ஊடறுத்து வில்லாகங்கையில் முகாமிட்டிருக்கும் எதிரியை சுற்றி வளைப்போம்.*

தளபதி வசனம்

*அரசே தங்களின் சீரிய திட்டமும், அதனுடனான முன்னெடுப்புக்களும், நிலை கொண்ட எதிரியின் கணிப்பை தடுமாறி செயலிழக்க வல்லது.*



## 12ம் காட்சி

காட்சியமைப்பு: மாளிகை
பாத்திரங்கள்: காக்கைவன்னியன், உளவாளி, வொன்றிக்பிரபு.

**சபையுரை: பண்டாரவன்னியன் கண்டிக்கு படையுடன் சென்றதை ஒற்றர் மூலம் அறிந்த காக்கைவன்னியன், ஆங்கிலேயருடன் சேர்ந்து முல்லைக் கோட்டையை கைப்பற்ற திட்டமிடல்.**

ஒற்றன் வசனம்

*அரசே, பண்டாரவன்னியன் அவசரமாக முல்லைக் கோட்டைக்கான படையணியை நகர்த்தி, கண்டி நோக்கி செல்வதை அறிந்தேன்.*

காக்கைவன்னியன் வசனம்

*நல்லதொரு செய்தி, விளக்கைத் தேடி விட்டில் பூச்சி வீழ்ந்தழிந்த நிலையில் நமது எதிரி.*

வொன்றிக் தரு

ராகம்: கல்யாணி | தாளம்: அட

திசையெட்டும் எதிர் நிலையில்லாது
தேசம் எங்கும் தடம் பதித்தாள்வோமே -
பண்டாரன் கண்டிக்கு படை கொண்டால்
பகை முடித் தங்கு அழித்திட வழி செய்வோம்

காக்கைவன்னியன் தரு

நீறு கொள் பூத்து நெருப்பான
நெடுநாள் பகை நிறைவேறும் துருப்பாக -
இங்கு நாம் முல்லையை கைப்பற்ற
அங்கு கண்டியில் பண்டாரன் கைதியாம்

வொன்றிக் வசனம்

*தங்களைப் போன்ற சாமர்த்திய சாலியை இங்கு நான் காணவில்லை.*

தரு

*விலையில்லாப் பெருமைகள் புரிவதால்*
*உங்கள்தலை மீது கிரீடத்தை சூட்டுவோம் -*
*வழி காட்டும் மதி மிகு தன்மையால்*
*எம் வரலாற்றில் என்றும் நீர் வாழுவீர்*

காக்கைவன்னியன் தரு

*முத்துச்சாமி செய்யும் முயற்சிகள்*
*மகா அரிமாவை நரி கொன்ற மதியாகும்*
*பாயும் வேங்கை பண்டாரனை போரில்*
*பலியாக்கி முல்லையை மீட்போமே*

கவி

*தர்மத்தை நிலை குலைக்கும்*
*தள கர்த்தனாம் பிரபுவே நாம் -*
*தீட்டிடும் சதி வலையில் மாட்டுவான் பண்டாரவன்னி*
*உங்களின் ஆளுமைக்காய் உகந்திடு தளமதாக -*
*கரிக்கட்டு மூலை தன்னை களமாக்கி வளம் பெறுவீர்*

வொன்றிக் வசனம்

*ஒரே கல்லில் இரண்டு மாங்காய். உங்கள் முது மொழிப்படி முல்லையும் கண்டியும் ஒரே நேரத்தில் நம் வசமாகி விடும்.*

காக்கைவன்னியன் வசனம்

*முழங்கட்டும் முரசு, முன்னேறட்டும் படையணி, முற்றுகையிடுவோம் முல்லைமண்ணை, முடியட்டும் பண்டாரவன்னியன் ஆட்சி.*

*(ஆங்கிலப்படைகள் முல்லைக் கோட்டையை கைப்பற்றுதல்.)*



## 13ம் காட்சி

**காட்சியமைப்பு: போர்முனை**
**பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், நார்த் பிரபு, கண்டியரசன், முத்துச்சாமி படையணி.**

***சபையுரை: கண்டிப் போர்முனையில் பண்டாரவன்னியன் ஆங்கிலேயப் படையணியை சுற்றி வளைத்தல்.***

கண்டியரசன் வசனம்

*ஆபத்தில் அறியலாம் அருமை நண்பனை. நண்பா உன்னைக் கண்டதும் வெற்றியின் முதல் படியின் மகிழ்வு.*

பண்டாரவன்னியன் வசனம்

*தானாடா விட்டாலும் தன் தசையாடும், அதோ எதிரிகள் முகாம். போரை ஆரம்பித்த வண்ணம் நகருங்கள், நாங்கள் கிழக்கெல்லையால் சுற்றி வளைப்போம்.*

கண்டியரசன் தரு

ராகம்: அமிர்சபதி | தாளம்: ஆதி

*செந்தமிழ் வீரர் படையணி*
*செங்களம் தனில் செஞ் சுடராகி*
*தானமும் தவமும் நிலைத்திடு*
*மான மறவரும் விலைய தாகிடார்*
*வீர மறவரென ஆண்மை தனை யுணர்த்து*
*வீறு படையணியே வெற்றியும் நமதே*

நார்த்பிரபு வசனம்

*அதோ பாருங்கள் பண்டாரவன்னியன் ஏதோ திட்டமிட்ட இலக்குடன் நம்மை சுற்றி வளைத்து விட்டான். முத்துச்சாமியின் முட்டாள் தனத்தால் பொறிக்குள் சிக்கி விட்டோம் போலிருக்கிறது.*

தரு

படுபாவி பண்டாரவன்னியா.
பதுங்கி வந்திங்கு பாய்ச்சலிட்டாயோ
கொழும்போடு கோட்டை கொத்தளம்
வழுத்து யாழ்ப்பாணம் மட்டக்கிளப்புடன்
ஆளும் தமிழரசர் அடி பணிந்தேற்றுறார்
ஆரோகண மின்றி அடங்கியே பணிவீர்

பண்டாரவன்னியன் வசனம்

*மானமிழப்பதைவிட மரணம் மேலானது, பணிந்தவர்கள் மறவரல்ல, பதவிக்காய் பலவீனமானவர்கள்.*

தரு

சிரமேவு கண்டி சாகிய
சரிதை உணராது சஞ் சரிக்கிறீர்
பறவை தன் கூட்டை காப்பதை
பாதகம் என பணியச் சொல்வதா
அகந்தை செருக்கடக்கி ஆழியாள் சோழனாய்
அளிப்பார் தமிழர் படை அடி பணிந்தோடும்

நார்த்பிரபு வசனம்

*முத்துச்சாமி கண்டிமன்னனாக வேண்டுமென்ற எண்ணத்தோடு தானே, பிலிமதளா அமைச்சருடன் சேர்ந்து எமக்கு உளவாளியானாய்.*

முத்துச்சாமி வசனம்

*ஆம் பிரபு, எனது சகோதரன் கண்டியரசன் கண்ணுச்சாமியை அழித்து மன்னன் ஆவதே எனது இலட்சியம்.*

நார்த்பிரபு வசனம்

*கூடப் பிறந்தவனையே கொல்லத் திட்டமிடும் கொத்தடிமையே உன்னை எப்படி நம்புவது, இன்றோடு உன் வாழ்வு முடியட்டும்.*

**(முத்துச்சாமியை வாளால் குத்தி கொல்லுதல்)**

மறு வசனம்

*வீரர்களே - பண்டாரவன்னியன் போரில் பாண்டித்தியம் மிக்கவன், பொறிக்குள் சிக்காது நாம் பின் வாங்குவோம்.*

**(ஆங்கிலப்படையினர் பின்வாங்கி செல்லுதல்)**

பண்டாரவன்னியன் வசனம்

*அதோ பாருங்கள், துரோகி எதிரியின் கையால் மடிந்தான். பயன்படுகிறவரை தலையில் தூக்கிவைத்தாடுவது பின் சமயம் பார்த்து பலிக்கடாயாக்குவது.*

கண்டியரசன் வசனம்

*வாள் வீச்சில் வல்லவனே! வெற்றியை குறித்த நோக்கு. வெம்பகை முடித்த தீரம் மெய்சிலிர்க்க வைக்கின்றது. வாருங்கள் வெற்றிவிழாக்காண.*



## 14ம் காட்சி

**காட்சியமைப்பு: நந்தவனம்**
**பாத்திரங்கள்: நல்லநாச்சி, குருவிநாச்சி, தோழிகள்.**

***சபையுரை: பண்டாரவன்னியன் தங்கையும் திருமலை அரசியுமான நல்லநாச்சியார், குருவிநாச்சியார் சந்திப்பு.***

தோழி வசனம்

*இளவரசியாரே தங்களைக் காண திருமலை அரசியார் வருகிறார்.*

குருவிநாச்சியார் வசனம்

*வரச் சொல்லுங்கள்.*

நல்லநாச்சி வசனம்

*வணக்கம், அந்தப்புரத்தில் தனிமையில்,*

குருவிநாச்சி வசனம்

*மன்னரை நினைக்கும் போது ஒவ்வொரு நாளிகையும் யுகமாகத் தோன்றுகிறது.*

நல்லநாச்சி தரு

*வளமலரெழில் பூம்பொழில் காவனம்
விரி கதிரெழு நிறை கமழ் வாசம்
வல்ல சூரிய காந்தி மலரினில்
வண்டுற வாடி சீண்டுதே பாரும்*

குருவிநாச்சி தரு

*காலையில் சேவல் கட்டியம் பாடியே
கதிரவன் வரவை கூவியே கூறும்
வண்ண மயில்கள் தோகை விரித்தாட*

*முல்லைப் பூ மெல்ல மொட்டு விரிக்கும்*

வசனம்

*நீங்கள் ஒருவரை விரும்புவதாக அறிந்தேன்.*

நல்லநாச்சி வசனம்

*ஆம், பெரும் வணிகன், பெயர் பிர்மானந்தன்.*

குருவிநாச்சி வசனம்

*எப்படி உங்கள் சந்திப்பு.*

நல்லநாச்சி தரு

*கடை விழி கண் பார்வை முதல் மொழி*
*தடையில்லாமலே உள்ள மொன்றானோம்*
*தாமரை சுற்றும் கதிரவன் வரவினால்*
*தண்ணொளி பெற்று மலர்ந்த தப்போது*

குருவிநாச்சி தரு

*வீரத்தை விளையாடியே போரினில்*
*வீணர்கள் படை சிதறியே ஓட*
*வில்லெடுத் தாளு வீரனாய் கண்டியில்*
*வெற்றிக்கனி பறித்திங்கு வருவார்.*

வசனம்

*காலப் பகை வென்று மன்னர் நாடு திரும்பியதும், உங்கள் திருமணம்.*



## 15ம் காட்சி

**காட்சியமைப்பு: கண்டி அரண்மனை**

**பாத்திரங்கள்: கண்டியரசன், பண்டாரவன்னியன், மந்திரி, தளபதி.**

***சபையுரை: கண்டி மண்ணை எதிரிகளிடமிருந்து மீட்டெடுத்த பண்டாரவன்னியன் வீரத்தை போற்றி, வெற்றிப் பெரு விழா.***

தளபதி வசனம்

*கண்டி மாநகரின் பெருங்குடி மக்களே. ஆங்கிலேயர் நமது மண்ணை அடிமைப்படுத்தும் திட்டத்துடன் படையெடுத்தனர். இப்போருக்கு துணைபோன நம் உள்ளக சதி வலையை அறுத்தெறிந்து இறைமையை காத்த மாமன்னனுக்கு விழா எடுக்க இங்கே கூடியுள்ளோம்.*

சான்றோர் வசனம்

*அடக்கு முறைக்கெதிராய் எம் சுதந்திரத்தை காத்த கொற்றவனே! குடியோடு உம் கொற்றம் வாழ்க!*

கண்டியரசன் வசனம்

*இனத்தால், மொழியால், கலை பண்பாட்டினால், உடலில் ஓடும் உதிரத்தால் தமிழன் ஒன்றானான் என உணர்த்திய நண்பனே, தாவி வந்து தாங்கியவனே. வளைக்க முடியாத வன்னியனே. உம்மை வளமுற வாழ்த்துகின்றோம்.*

பண்டாரவன்னியன் வசனம்

*நாடு, மொழி, இன உணர்வு இப்படி எத்தனையோ எம் நினைவுகள். எத்தர்களால் எண்ணமின்றி ஏற்றமின்றிப் போவதா?*

கண்டியரசன் தரு

ராகம்: தேசிகதோடி | தாளம்: ஏகம்

*மாற்றார் படை புறமிடவே ஆற்றா*
*மறப் போர் வகுத்த தகையே - கண்டி*
*மண்ணின் மானத் திறவு கோலாய்*
*விண்ணுயர நெஞ்சில் நிலையானீர்*

தளபதி தரு

*நல்லோர் போற்றும் வல்லவனே*
*குன்றின் மீது குல விளக்காய் மிளிர்ந்தே - செந்*
*தமிழை காத்தோர் ஏட்டினிலே*
*தண்ணொளியே தகமையுடன் ஒளிர்வாய்*

பண்டார வன்னியன் தரு

*பெருங்கடல் போல் தமிழன் வீரம்*
*சிறு குழிக்குள் ஆங்கிலேயர் அடக்கார் - பொங்கி*
*நீர்ப் பாறை மீ தலை மோதும்*
*நீரடித்து நீர் விலகா உறவு*

கண்டியரசன் தரு

*ஆயிரம் விண் மீன்கள் வானில்*
*அகர்நிலமாய் அரங்கமிட்ட போதும் - அடலார்*
*ஆதவன் பண்டார வன்னி ஆர்த்தெழவே*
*இருள் மதியோர் அகன்றார்*

வசனம்

*ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர வரலாற்றை பதித்த வேங்கையே! கண்டி மானங்காத்த குமரனாய் எம் மக்கள் மனதில் நிறைந்து விட்டீர்கள். அடங்காப் பற்றின் அடலேறே, தமிழ் உள்ளவரை உன் புகழ் வாழும். நமது அரசினதும் மக்களினதும் நினைவாக வீரச் சின்னமாம் வெற்றி வாளை பரிசளிக்கின்றோம், ஏற்றுக்கொள்வீராக.*

**(சபையினர் மகிழ்வுடன் ஆரவாரித்தல்)**



## 16ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை
பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், மந்திரி, தளபதி, பணிப்பெண்கள்.

**சபையுரை: நாடு திரும்பிய பண்டாரவன்னியன் ஆங்கிலேயர் முல்லைக் கோட்டையை கைப்பற்றியதறிந்து சீற்றமுற்று போர் தொடுத்தல்.**

மந்திரி வசனம்

*மன்னர் மன்னவா, தாங்கள் கண்டிக்குச்சென்ற சமயம் காக்கைவன்னியன் ஆங்கிலேயருடன் இணைந்து முல்லைக் கோட்டையை கைப்பற்றி விட்டனர்.*

பண்டாரவன்னியன் ஆசரியம்

*அலை தங்கு புவியெங்கும் அகடமாய்
ஆங்கிலேயர் ஆளுகை புரியும் எண்ணம் -
முந்தையர் மூ வேந்தர் இமயத்தில்
முத்தமிழை முடிசூடி முர சறைந்தார் -*

*சங்கிலியன் எல்லாளன் செந்தமிழ்
காக்கவே செருக் களமாடி மாண்டார் -
வீர வாள் கொடி கொண்ட வீரமுறு
வன்னியை வீணரும் அபகரிக்க -*

*வாட்டியே பகைவர்தமை, வந்த வழி ஓடவே*

சிந்து

*இப்படி துணிவு கொண்டாரோ - ஆங்கிலேயர்
இப்படி துணிவு கொண்டாரோ -*

*அண்ட பகி ரண்டமொடு எண்டிசையு மே அதிர
வண்டலர் நடுங்கியோட சண்டமாருதம் புரிவேன்*

(இப்படி துணிவு)

(போர்க்களம்)
அரும்பெறல் தமிழினத்தின் அடி முடியாள் தமிழரசை
அடக்கிட நினைத் தனரோ,
அவ கடமாய் அடங்கு திறையாக்கிடவோ -
அவனிதனில் வாழ்வதும் ஒரு முறையே வீர
வன்னிக்காய் நிமிர்ந்து - வீழ்வதாயின்
அன்னைத் தமிழ் விடியலுக்காய் விதையாவோம் -
(இப்படி துணிவு)

ஆரியரும் ராவணனை அசுரனெனஅறைந்திடல் போல்
ஆங்கிலேயர் கட்டப்பொம்மை அசித்திரனாய் ஆக்கிடவோ -
இப்போதினிலே வன்னி வள மண்ணை விட்டு பறங்கியர் பதறியோட
சங்கத் தமிழ் வீரமதை பொங்கிட முரசறைவோம் -
(இப்படி துணிவு)

வீரன் வசனம்

*மகாராஜா தங்களின் எதிர்பாராத வரவினாலும், முன்னணி காவலரணில் மூர்க்கமாய்த் தொடுத்த ஒவ்வொரு வாள் வீச்சிலும் ஒன்பதாய்த் தலை சரிய ஒட்டுமொத்த ஆங்கிலேயப் படையணியும் அதிர்ந்து குலுங்கி முல்லைக்கோட்டையில் இரு பாரிய பீரங்கிகளையும் கைவிட்டு கடல் வழியாக யாழ்ப்பாணம் நோக்கி செல்கின்றனர்.*

பண்டாரவன்னியன் வசனம்

*வீரர்களே - விடிவெள்ளிக்கு முன்பாக இருள் அதிகமாகவே தெரிந்தாலும், விடிவுதான் முடிவு.*



## 17ம் காட்சி

**காட்சியமைப்பு: மாளிகை**

**பாத்திரங்கள்: சேவகன், நல்லநாச்சி, பண்டாரவன்னியன்.**

***சபையுரை: பண்டாரவன்னியனை சந்திக்க***
***சகோதரி நல்லநாச்சி வருகை.***

சேவகன் வசனம்

*அரசே! தங்களைக்காண திருமலை அரசியார் வருகிறார்.*

2ம் பண்டாரவன்னியன் தரு

ராகம்: தோடி | தாளம்: ஏகம்

*கருது குல கண்மணியே கற்றறிந்த*
*கலை மகளே தங்காய் - நீயும்*
*கூடியொரு நிலையறியா காதலெனும்*
*சோரலாதல் முறையோ -*

நல்லநாச்சி தரு

*பொங்கு தமிழ் பெரு நிலவே பொன்னார் தவ*
*திரு வடிவே அண்ணா - நானும்*
*உன்னுதரங் கொண்ட தங்கை*
*ஊறுதனை உமக்களிக்க எண்ணாள்*

பண்டார வன்னியன் தரு

*தென்னவரின் தேன் மொழியாம் செந்*
*தமிழின் முப்பாலாய் செறிந்தே - திரு*
*கார்த்திகையின் தீபம் போலே*
*கருத்துரைக்கும் கல்வெட்டாய் திகழ்வாய் -*

நல்லநாச்சி தரு

*அண்ணா எந்தன் கண்ணொளியே*
*ஆன்றோர் போற்றும் ஆற்றல் மிகு - தலைவா*
*கண்ணெனவே நமது மானம்*
*கருத் துறவே கவரி மானாய் காப்பேன் -*

வசனம்

*என்னை நம்புங்கள் அண்ணா. நாட்டிற்கோ நமது குடும்பத்திற்கோ அபகீர்த்தி உண்டாக்க மாட்டேன்.*



## 18ம் காட்சி

காட்சியமைப்பு: காடு

பாத்திரங்கள்: காக்கைவன்னியன், நல்லநாச்சி, தணிகை, குருவிநாச்சி.

**சபையுரை: தொடர் தோல்விகளால் விரக்தியுற்ற காக்கைவன்னியன், காதலியைக்காண செல்லுதல். தணிகை பின்தொடர்ந்து கண்காணித்தல்.**

காக்கைவன்னியன் வசனம்

*பண்டாரவன்னியனை அழிக்க கரிக்கட்டு மூலையில் தளம் அமைத்து யாவும் கானல்நீராகி விட்டதே. வணிகன் வேடம் கலையுமுன் நல்லநாச்சியை வசப்படுத்த வேண்டும்.*

**(நல்லநாச்சி அருகில் செல்லல்)**

நல்லநாச்சி கொச்சகம்

*அற மற்ற சிந்தனையும் ஆழமில்லா*
*திற மற்ற நெறி முறையும் -*
*இனமான உணர்வின்றி மனதிலே பொய்யுரையாய்*
*காத்திருப்பும் கனவாகி, கானல் நீராகியதே -*

தரு

ராகம்: மலையாமி | தாளம்: ரூபகம்

*நினைத்துப் பார்க்கையிலே நெஞ்சமது நெருப்பாய் எரிகிறதே*
*நேற்று நடந்தவை பாவச் சுமையாகி*
*உண்மையும் பொய்மையும் உறவாகிப் போகுமோ*
*பாலை வனத்தில் சோலை படருமோ*

காக்கைவன்னியன் கொச்சகம்

*சித்திரமே ரெத்தினமே சீரிளமை செங்கயல் மீன் விழியாளே -*
*வானில் வலம் வந் தொளிரும் வெண்ணிலவின் பேரழகே*
*மனதில் குடியாகி - உயிரில் கலந்தவளே -*

தரு

கற்பனை கோலமிட்டு, கபட மன சிறகை விரிக்காதே
காற்றில் பறக்காதே கனவை கலையாதே -
கோல விழி காட்டி குறு நகை புரிந்திடு
கொஞ்சிக் குலவியே கன்னல் மொழி பேசு

**(காக்கைவன்னியன் நல்லநாச்சியை**
**பலவந்தப் படுத்த முயற்சித்தல்)**

நல்லநாச்சி வசனம்

*இப்போது உங்கள் செயல்கள் எல்லாம்?*

காக்கைவன்னியன் வசனம்

*என் தூய உள்ளத்தை துரோகமாக்கி களங்கப்படுத்தாதே.*

நல்லநாச்சி வசனம்

*விடுங்கள் என்னை.*

**(தணிகை குறுக்கிட்டு காக்கைவன்னியின்**
**மாறு வேடத்தை கலைத்தல்)**

தணிகை வசனம்

*காக்கைவன்னியா! உன் கபட வேடத்தை கலைத்து விடு - ஏமாந்து விட்டீர்களம்மா.*

நல்லநாச்சி வசனம்

*காக்கை வன்னியா? இந்த துரோகியிடமா என்னை அர்ப்பணித்தேன்.*

தணிகை வசனம்

*ஆம் தாயே, ஆங்கிலேயருடன் உறவாடி, நம் அரசை அழிக்க காலமெல்லாம் கண்ணுறங்காது. (மனமுடைந்து)*

தரு

ராகம்: சௌராட்டிரம் | தாளம்: அடதளகாப்பு

கூலிக்காக இனத்தை விற்கும் துரோகி
காக்கைவன்னி யென்னுமிந்த காமுகன் வணிகனாய்
தீக் குணமாய் வேடமிட்டான் தாயே

நல்லநாச்சி தரு

*காதலெனும் மாயையினால் நானும் இந்தக்*
*காதகன் வலையினுள் காரிருள் நோக்கியே*
*கதியிழந்து சகதியிலா வீழ்ந்தேன்*

தணிகை தரு

*மன்னனிட்ட ஆணைப்படி தொடர்ந்தே உங்கள்*
*மகத்துவம் பேணியே மறைந்துள வாடினேன்*
*மன்னித்திட வேண்டுகிறேன் தாயே*

நல்லநாச்சி வசனம்

*தேச பக்தி நிறைந்த தணிகையே! என்னை நீங்கள் தான் மன்னிக்க வேண்டும்.*

காக்கைவன்னியன் வேறுதரு

ராகம்: முகாரி | தாளம்: ரூபகம்

*துட்டனாம் தணிகையே துணிவோடு ஏகித்*
*தொடர்ந்தாயோ - தொடர் சோதனை யாக்கியே*
*என் வாழ்வில் பாதகம் செய்தாயே*

தணிதை தரு

*வஞ்சக நோக்குடன் வலை வீசி*
*வேடம் தரித்தாயே - சூழ்ச்சி வகித்திடு*
*மூளையின் நாக நரம்புகள் வெடித்ததே*

காக்கைவன்னியன் தரு

*எத்தனையோ திட்டம் என் எதிர்பார்ப்புகள்*
*எதிர் வாக்கி - இறுதி மூச்சு முடிவாகி*
*சாவிற்கு சட்டை அணிவித்தாய்*

**(தணிகையை வாளால் குத்திக்கொல்லுதலுதல்)**

நல்லநாச்சி வசனம்

*இனத் துரோகி! உன் வேடம் கலைத்ததிற்காக ஒரு நாட்டுப் பற்றாளனை கொன்று விட்டாயே.*

காக்கைவன்னி வேறுதரு

*மண்ணகம் போற்றும் மங்கள முறு*
*மங்கையே சோரம் போனாயே*

*உடன் பிறந்தோனை பழி வாங்க*
*உந்தன் வாழ்க்கையில் வலை வீசினேன்*

நல்லநாச்சி தரு

*கயவனாம் காக்கைவன்னியே*
*காதல் காமுக மாறு வேடமும்*
*இனத்தினை கூறாய் விலையாக்கும்*
*இழி செயலினால் தமிழ் அழிவதா*

காக்கைவன்னியன் தரு

*தமிழினம் பண்பாடென்றே தொன்மை*
*பெருமைகள் பேசிப் பிதற்றுநீர்*
*இனத்தினால் நானும் தமிழன்தான்*
*இங்கு அரசாள உரிமை கொண்டவன்*

நல்லநாச்சி தரு

*நாட்டிற்கும் நம் இனத்திற்கும்*
*நிகாதனாய் பிறப்பெடுத்தாயே*
*துரோகி நீ மறத் தமிழனா*
*துரோகம் முடிவுற உன்னை மாற்றுவேன்*

வசனம்

*யாரங்கே!*

**(குருவிநாச்சி வர காக்கைவன்னியன் மறுபுறம் திரும்ப வாளால் குத்துதல். காக்கைவன்னியன் மரணித்தல்)**

குருவிநாச்சி வசனம்

*தாயகத்தை நேசித்த தணிகையே உனக்கா இந்தக் கொடுமை. இத் துரோகியிடமிருந்து பாதுகாக்கவே தணிகை நியமிக்கப்பட்டார்.*

நல்லநாச்சி வசனம்

*அண்ணி! இத் துரோகியின் வலையில் வீழ்ந்து தமிழ் குல பெண்மைக்கு சந்தேகமெனும் களங்கம் கற்பித்து விட்டேன்*

வேறுதரு

ராகம்: நீலாம்புரி | தாளம்: ரூபகம்

*தாய்ப் பாலில் நஞ்சு வைத்தே*

தமிழின பழி காரி ஆகினேன் -
கொடும் படு பாவி வேசமிட
பாம்பினை பச்சைக்கொடி என்றேனே

வசனம்

இளமை உணர்ச்சியினால்.

தரு

முள் மீது சேலை விழ
மூர்க்கமாய் இழுத்ததை கிழித்தேனே -
தமிழ் தாய்மை எனும் பெருமை
தூய்மையின்றி துரோகம் ஆவதோ

**(நல்லநாச்சி வாளால் தன் வயிற்றில் குத்துதல்)**

குருவிநாச்சி வசனம்

தெய்வமே ஏனிந்த விபரீத முடிவு - துரோகியை அழித்த நீங்கள் எப்படி துரோகியாக முடியும்.

நல்லநாச்சி வசனம்

அண்ணி என் உயிரை அழிப்பதன் மூலம்தான், எனக்கு பாவ விமோசனம் கிடைக்கும்.

இந்தப் பாவியை மன்னிக்கும் படி அண்ணாவிடம் கூறுங்கள்.

**(குருவிநாச்சி மடியில் நல்லநாச்சி மரணித்தல்)**



## 19ம் காட்சி

**காட்சியமைப்பு: அரண்மனை**

**பாத்திரங்கள்: குருவிநாச்சி, பண்டாரவன்னியன், மந்திரி, தளபதி.**

***சபையுரை: குருவிநாச்சியார் அரசவை சென்று - தணிகை, நல்லநாச்சியார் மறைவு குறித்து தெரிவித்தல்.***

பண்டாரவன்னியன் வசனம்

*மிகுந்த மனவேதனையுடன் குருவிநாச்சியார் அரசவைக்கு வரக்காரணம்!*

குருவிநாச்சியார் வசனம்

*நினைத்துப்பார்க்க முடியாத பேரவலம் நிகழ்ந்து விட்டது அரசே*

அகவல்

*ஆழுமை இழந்தே அடிமையின் வடிவாய்*
*அண்டியே அன்னியர் உறவில்*
*தரியலன் காக்கை பகைமையின் பழியாய்*
*தணிகையின் விதியினை வீழ்த்த*

*கயல்விழி மங்கை கன்னிநல்நாச்சி*
*காமுகன் காக்கையை கரைத்து*
*உலைக் களம் மீது உயிரினை உருக்கி*
*உறுதியின் ஊற்று வாயாகி*

வசனம்

*வீர மங்கை நல்லநாச்சியும், தியாகி தணிகையும் காக்கை வன்னியனை அழித்து வீரமரணத்தை தழுவிக்கொண்டனர்.*

பண்டாரவன்னியன் தரு

ராகம்: லாவணி | தாளம்: ரூபகம்

*மானங்காக்க மனமகிழ்வாய் தன்னைத்*
*தானமாக்கி - எங்கள் வண்ண மலர்*
*நல்லநாச்சி மண்ணுக்காய் மரித்தாளே*

*போர்க்களமும் புலனாய்வும் பொருது*
*வீரன் தணிகை - மறத் தமிழனையே*
*சதிபுரிந்து அறமிழந்து அழித்தான்*

*பிறந்த மண்ணின் பெருமை காக்க*
*மறத்தனத்தின் விடிவாய்- எங்கள் தேச*
*மண்ணின் கவசமானீர் ஆராதனை செய்வோம்*

சேவகன் வசனம்

*அரசே ஆங்கிலேயர் கற்சிலை மடுவை நோக்கி திருமலையிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் இரு முனைகளால் படையெடுத்து வருகின்றனர்.*

பண்டாரவன்னியன்வசனம்

*துயரங்கள் அழுத்தும் போதுகூடக் கண்ணீர் சிந்தமுடியவில்லை*

பண்டாரவன்னியன் சந்ததம்

*அகர் முக ஒளி திகழ்*
*ஆளுகை கொற்றமாம்*
*இளவள வன்னிமையின் -*
*ஈரியல் தொன்மையை*
*உத்திரர் உணராது*
*ஊறு விளைத்திடவோ*

*எழுகள மீதினில்*
*ஏதலர் வெடி குண்டால்*
*ஐயமுற்றிடு வேனோ -*
*ஒளி யென பூபாள*
*ஓம் எனும் பிரணவ*
*ஔடத மாவோமே*

வசனம்

*குருவி! என் அன்பே! எது வரினும் எதிர் கொள்வோம்.*

குருவிநாச்சி வசனம்

*பிரபு நாம் ஈடுபட்டிருப்பது இலட்சியப் போராட்டம், என் எண்ணமெல்லாம் உங்களுக்கு முன்பாக.*

பண்டாரவன்னியன் வசனம்

*அச்சத்தை வென்றெடுப்பதே வீரத்தின் முதல்ப்படியாகும். என்கண்மணி எண்ணித் துணிந்தோம் நமக்குள் பிரிவேது, நான் சென்று வருகிறேன்.*



## 20ம் காட்சி

காட்சியமைப்பு: போர்க்களம்
பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், படையணி, ஆங்கிலத் தளபதி வொன்றிக் படையணியினர்.

**சபையுரை: ஆங்கிலேயர் டச்சுப் படையணியையும் இணைத்து, திருமலை, யாழ்ப்பாணம், மன்னார் என மும்முனைகளால் வன்னியை நோக்கிப் படையெடுப்பு. பண்டாரவன்னியன் போர்க்களம் விட்டு வெளியேறுதல். ஆங்கிலேயர் வெற்றியின் நினைவாக கற்சிலை மடுவில் நடுகல் நாட்டுதல்.**

பண்டாரவன்னியன் தரு (நெடில்)

*தாயெனும் தகைமையோடு சேயெனை வித்தகனாய்*
*தரணிக்கே தொல்மரபு தந்த முத்தமிழைப் போற்றியே -*
*முடியுடை மூவேந்தராலே செறிவுறு செந் தமிழாகி*
*முற்கூறாய் முதல்வியாகி மண்ணெல்லாம் மணப்பவள்*

*ஆரிய அனல் நெருப்பை அலையாகி அணைத்தாயே*
*ஆர்ப் பரிக்கும் ஆங்கிலேயர் ஆணவம் அடங்கவே -*
*திமிரடக்கி திமிரர் படை திரை விலக்கி திடமுடன்*
*திகழ் மொழியை அரியணையின் திருப்பணியதாக்குவோம்*

ஆங்கிலத்தளபதி வொன்றிக் வசனம்

*பண்டாரவன்னியா உன் அகம்பாவம்தான் அழிவிற்கு வழியாகி விட்டது. நீ இருமுனைகளைத்தான் கவனித்தாய், எமது படையணிகள் மும்முனைகளால் சூழ்ந்து விட்டனர். நீ அழிவது நாங்கள் ஆள்வது.*

பண்டாரவன்னியன் வசனம்

*கறையான் புற்றில் கருநாகங்களாய், எங்கள் மண்ணை ஆக்கிரமித்து ஆளத் துடிக்கிறீர்கள். நாங்கள் வாழத்துடிக்கிறோம்.*

வேறுதரு

ராகம்: ஆனந்தபைரவி | தாளம்: ஏகம்

*உறை விட்டு உருவும் வாள் ஒலி கேட்டு ஓடியோரே*
*உரிமை தன்னை பேரம் பேச பேடிகளா நாங்கள் -*
*அன்னைத் தமிழ் வீரமதின் அடிப்பலம் பாரறியும்*
*அகங்காரம் கொண்ட உங்கள் அகராதியை அழிப்போம்*

ஆங்கிலத்தளபதி வொன்றிக் தரு

*பார் புகழும் பிரித்தானிய பேரரசு ஓங்கிடவே*
*போர்த்திறன் சுடு கலனும் எறிகணை பீரங்கி -*
*வாளீட்டி வேலம்பு வலுவிழந்த போர்க்கலங்கள்*
*வாகைசூடி வலம் வருவோர் வையகமே போற்ற*

வசனம்

*தமிழரின் போராயுதம் வில் வாள் என பிதற்றுகின்றனர் வீரரே நம் நவீன பீரங்கிகளை முடுக்கிவிடுங்கள்.*

**(பீரங்கி வெடித்தல்)**

பண்டாரவன்னியன் வசனம்

*வீரர்களே நான்கு பக்கமும் கழுகுகள் சூழ்ந்திட நடுவில் சிக்கிய வெண்புறாவின் நிலையில் நாம், வல்லூறுகளிடமிருந்து விவேகமாக தப்பிக்க வேண்டும், புறப்படுங்கள்.*

**(பண்டாரவன்னியன் வீரர்களுடன் பின்வாங்கிச் செல்லல்)**

ஆங்கிலத்தளபதி வொன்றிக் வசனம்

*வீரர்களே எவ்வித எதிர்ப்பையும் காணவில்லை நம் நவீன எறி கணைகளால் அனைவரும் அழிக்கப்பட்டிருக்கலாம். எனவே*

கவி

*குன்றெழு நெடுந்தோள் வீரன் - குலமிகு பண்டாரவன்னி*
*நாவினில் நாதமாடும் நற்தமிழ் சொல் வல்லாளன்*
*மாவீரன் தனை மதித்து மகிமையாய் நம் பெருமையோங்க*
*கருதியே நடுகல் தன்னை கற்சிலை மடுவில் வைப்பீர்*

வசனம்

*கேளும் வீரரே பண்டாரவன்னியன் தேசப்பற்று மிக்க மாவீரன், நன்கு திட்டமிடப்பட்ட மும்முனைத் தாக்குதல் மூலம்தான் வெற்றிபெற முடிந்தது. அவன்வீரத்தை போற்றியும், நமது வெற்றியின் அடையாளச் சின்னமாகவும், கற்சிலை மடுவில் நடுகல் நாட்டி பட்டுத் துணியால் போர்த்துவீராக.*

**(வீரர்கள் நடுக்கல் நாட்டுதல்)**


HEREABOUTS
CAPTAIN
VON DRIBERG
DEFEATED
PANDARA
VAWNIYAN
31st OCT
1803



## 21ம் காட்சி

காட்சியமைப்பு: வீடு

பாத்திரங்கள்: குருவிநாச்சியார், தோழி

**சபையுரை: கற்சிலை மடுவில் நடந்தபோரில் மன்னர் போர்க்களம் விட்டு பின்வாங்கியதை தோழி குருவிநாச்சியாருக்கு கூறல்.**

தோழி வசனம்

*அம்மணி! கற்சிலைமடுவில் நடந்த யுத்தத்தில், எதிரிகளின் மும்முனைகளால் முன்னேறித் தாக்கியமையினால் மன்னர் போர்க்களம் விட்டு பின்வாங்கி விட்டாராம்.*

குருவிநாச்சி வசனம்

*விடுதலை வேள்விக்காய் தோளை நிமிர்த்திய வீரன் தோற்றுப் போவதா?*

தரு

ராகம்: புரவாளி | தாளம்: ஆதிதாளம்

*நீல வானின் வெண்ணிலவே முகில்*
*நெருங்கி வந்து மறைந் ததுவோ*
*வளர் மதியே நீயில்லாது*
*வன்னிமண்ணில் இருள் சூழலாச்சே*

*பொழுதொரு கணமும் அஞ்சா*
*புடமிட்டாய் போரில் புன்னகையாய்*
*தொழு வாரும்மை பழு தில்லோனாய்*
*திகழ் பிடி தளர்ந்தடி பெயர்வோ*

*உறங்கிடா உணர்வுடையோன் தீயில்*
*உருக்கினாலும் கருகா தங்கம்*
*குயிலே உன் குர லடங்க*
*காக்கை கரையுமோசைகானமாச்சே*

**(பொரிவிளாங்காயை தோழியிடம் கொடுத்து)**

வசனம்

*என் அருமைத்தோழி, இந்த பொரி விளாங்காய்களை அவரிடம் சேர்ப்பித்து, உள்ளத் துயரிலும் குருவி உறுதியுடன் இருப்பதாக தெரிவித்து விடு.*



## 22ம் காட்சி

காட்சியமைப்பு: காடு
பாத்திரங்கள்: சின்னான். வள்ளி

**சபையுரை: ஆங்கிலேயரின் மும்முனைத் தாக்குதலினால் பண்டாரவன்னியன் போர்க்களத்தை விட்டு பின் வாங்கிய போதும், வன்னிமண் எதிரிகளிடம் அடிமையாகி விடக்கூடாது என்ற உறுதியுடன் காட்டில் மறைந்திருந்து தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கும்போது பக்கபலமாக உதவிய கண்டி பிரதேச மலைவாழ் பழங்குடியினரை ராஜதுரோக குற்றம் சாட்டி தூக்கிலிடுவதை வெளிப்படுத்தும் தேசப்பற்றாளர்கள்.**

சின்னான் வசனம்

*காட்டிக் கொடுப்போரே - கடக்கப் போய் அழிவோரே எங்களை காக்கும் அந்த*

தரு

ராகம்: கீதவாணி | தாளம்: ரூபகம்

முந்தி தவமிருந்து அன்னை
முன்நூறு நாட்கள் சுமந்து பெற்ற
கண்ணான மகராசன் எல்லை
காவல் தலைவன் பண்டாரவன்னி

வள்ளி தரு

காடும் கடல் வளமும் பாடிக்
கூடி விதைத்திடு விளைநிலமும்
கூவு குயில் மயிலும் ஆடி
தேனோடு முக்கனி செறிந்தவன்னி

சின்னான் தரு

பத்து விரல் தனையே கூட்டிப்

பகுத்தறியார் தம் நிலையறியார்
பதறிட உணர்வாளரை காட்டி
பாதகம் புரிந்து அழிப்பதுவே

வள்ளி தரு

செங்கட்டி திண்ணையிலே நாங்க
சேர்ந்து சமஞ்சிங்கு வாழ்ந்தாலும்
கடலோரம் வெளஞ்ச முத்து காட்டுத்
தரைமீதும் குகை இருளோடும்

வசனம்

கன்னித்தவமிருந்து காவல் தந்த ரெத்தினத்தை கூடிக் கெடுத்தவரை கொல்லி மலை சென்று அவர் கொடும் பாவி எரிக்க வேண்டும்.

தரு

தீங்கான சகுனம் கண்டால் அது
தீவினையாக அமைந்திடுமோ
எங்களை காக்கும் ராசா
அவர் பங்கமின்றி கொடி முடி நீள

சின்னான் தரு

ஈரல் கருகுதய்யோ கண்கள்
இரவிரவாக வலிக்குதம்மா
நலிந்த இனம் காக்கும் அந்த
நல்லவரை நாம் காக்க வேணும்

வசனம்

தர்மபிரபு, காட்டில்தான் ஆறறிவு அற்ற விஷ மிருகங்களுண்டு. நம் நாட்டிலும் கொல்லி பில்லி சூனிய கொடுஞ் சூரிகளுமுண்டு தங்களுக்கு உதவி புரிந்த தேச உணர்வாளரை ராசதுரோகிகளாக்கி தூக்கிலிடப் படுகின்றனர்.

பண்டாரவன்னியன் வசனம்

காட்டிக்கொடுக்கும் இழிநிலைப்பண்பு இன்று நேற்றல்ல காலம் காலமாய் நடந்தேறி வருகிறது. 'உணர்வுமிகு உடன்பிறப்புக்களே உம்மை போற்றுகிறேன்"

தரு

ராகம்: ஆனந்தபைரவி | தாளம்: சாப்பு

நெஞ்சம் நினைவழியா வஞ்சப்பகையாலே
கொஞ்சும் தாய் மண்ணை தஞ்சமிட்டழிக்க
விடியலுக்கொரு விலங்கு பூட்டிட
அடிவருடிகள் அடிமை யாவதா
கரையேறிட அலை துடிப்பதை
வலை கொண்டோ தடுப்பார்

எந்தை தாய் மண்ணில் எதிரி எக்களிப்பாய்
நிந்தை புரிந்தடக்க வீழ்ந்தடி பணிவோமே
சங்கு முரசொலி தமிழக இசை
பேரிகை பறை ஈழவர் முறம்
போரெழ வீர உணர்வை ஊட்டியே
தடையெனும் மடை உடைப்போம்

வசனம்

ஆதிக்கத்துக்கு எதிரான சுதந்திர விதைப்பும் இலட்சிய வேட்கையும் நமக்குப் பிறகும் நம் தலைமுறைகளிடம் தழைத்து ஓங்க வேண்டும்.



## 23ம் காட்சி

காட்சியமைப்பு: காடு
பாத்திரங்கள் - பண்டாரவன்னியன், தளபதி, வீரர்கள், ஆங்கிலத் தளபதி வொன்றிக், படையணி.

**சபையுரை: ஆங்கிலேயருக்கு எதிராக உடையாவூரில் பண்டாரவன்னியன் போர் தொடுத்தவேளை படுகாயமடைதல். வீரர்கள் மன்னரை பனங்காமம் கொண்டுசெல்லுதல்.**

வீரன் வசனம்

*அரசே! ஆங்கிலேயர் பெரும் படையெடுப்புடன், உடையாவூர் நோக்கி வந்து கொண்டுடிருக்கின்றனர்.*

பண்டாரவன்னியன் ஆசரியம்

*விடியலுக்கு விலை பேசும்*
*ஆதிக்க சக்கரத்தின் அச்சாணி தனைப் பிடுங்கி*
*காற்றின்றி வாழ்ந்தாலும்*
*ககன் ஒளி குன்றினும் கனவிலும் அடிமை தாழா*
*உயிரைக் கொடுத்தேனும்*
*உரிமைக்காய் போராடி - உரமாயெம் வன்னிமைக்காய்*
*கண்ணை இழந்தாலும்*
*மண்ணை இழக்கா - மறவரென மார்புதட்டி*

தரு

*தாயகத்தில் வாழத் தடையோ*
*தரியலர் முன் தெண்டனிட்டடி பணிவதோ -*
*வீழ்வானோ மறத்தமிழன் தாழ்வதோ சதி வலையில்*
*வீரத்தின் வெம்மைச் சுடரில், வஞ்சனையோர் நெஞ்சுருக*

*அடிமையாய் அடங்கி ஆள்வதோ*
*அந்நியர் எம்மேல் ஆதிக்க கணை தொடுப்பதோ*
*வன்னியாம் எமது மண்ணில் வற்றாத வளம் சுரண்டும்*
*இன்னொருவன் தீர்மானிக்க உணர்விழந்து ஊமையாகி*

வசனம்

மறைந்து வாழ்ந்தாலும் மண்ணுக்காய் நமது நெஞ்சம் விம்முகிறது.

போராடப் புறப்படுங்கள்.

**(சண்டைக்காட்சி)**

பண்டாரவன்னியன் வேறுதரு

ராகம்: தேசியதோடி | தாளம்: ரூபகம்

நெஞ்சுரம் மிகு வன்னியர் படை
அஞ்சி வாழ்ந்திடுமோ - பாரில் கல்லினில்
தண்ணீரைக் காணும் வல்லினம் நாங்கள்

ஆங்கிலத்தளபதி வொன்றிக் தரு

நாடு மொழி இன உணர்வு
கேடுமதியாகும் - நீங்கள் இணக்கமுற
இசைந்திடுகில் ஈடில்லாப்பெருமை

வசனம்

ஒருநாள் முடியும் வாழ்விற்காக ஒப்பாரியிடமாட்டோம்.

பண்டாரவன்னியன் தரு

சுதந்திரம் தனை சூறையாடுதல்
தந்திரக்குணமே - போராடியே மற
மானங்காத்திட மீண்டெழுவோமே

ஆங்கிலத்தளபதிவொன்றிக் தரு

அழிவின் எதிர் மறை அறிந்த பின்னும்
ஆழம் பார்க்கிறீர் - நாங்கள் ஆதிக்கப் படை
தடை யுடைத்தே ஆளும் படையே

வசனம்

இம் முறை உடையாவூர் களமுனையில் எவரும் தப்பமுடியாது. படை பலம் குறைந்த நிலையில் பண்டாரவன்னியனால் நேருக்குநேர் எதிர்க்க முடியாது, முழுப் பலத்தையும் பிரயோகிப்போம், பீரங்கிகளை முடுக்கி விடுங்கள்.

**(பீரங்கி குண்டுகள் வெடித்தல்)**

பண்டாரவன்னியன் வசனம்

*வீரர்களே! எங்கும் புகைமண்டலம், ஆ - என் நெஞ்சில் குண்டு பட்டுவிட்டது.*

**(மன்னர் மயங்கி வீழ்தல்)**

வீரன் வசனம்

*மன்னர் மயங்கி விட்டார். புகைமண்டலம் விலகுமுன்பாக நம் உயிரைக் கொடுத்தாவது, பனங்காம அரணுக்கு கொண்டு சென்று காப்பாற்றுவோம்.*

**(வீரர்கள் மன்னரை பனங்காமம் கொண்டு செல்லல்)**

வொன்றிக் வசனம்

*பண்டாரவன்னியன் களம் பல கண்ட வீரியன். புத்தி வேகத்துடன் கத்தியின் துணையுடன் உயர்த்திய ஒவ்வொரு வாழ் வீச்சிலும் ஒன்பதாய் தலை சரித்தவன் சூட்சுமங்கள் புரிந்து மின்னலாய் மறைந்திருப்பான்.*



## 24ம் காட்சி

**காட்சியமைப்பு: மாளிகை**
**பாத்திரங்கள்: ஆங்கிலத்தளபதி வொன்றிக், படையணி.**

**சபையுரை: ஆங்கிலேயர் உடையாவூர் வெற்றிக்களிப்பினால் வன்னியை தங்கள் பூரணக்கட்டுப்பாட்டில் நிர்வகிக்க திட்டமிடல்.**

ஆங்கிலத்தளபதி வொன்றிக் வசனம்

*காடும், மலைக்குகையும்தான் பண்டாரவன்னியனின் வாழ்விடங்கள். படைபலம் திரட்டி பெரும்பாசறை அமைக்குமுன், பிடித்த தளங்களை பேண வேண்டும் எனவே*

தரு

ராகம்: புன்னவராளி | தாளம்: ஏகம்

*வளம் கொளிக்கும் வன்னி மண்ணை*
*வளைத்து வெற்றி கொண்டோம் - எறிகணைகள்*
*குண்டுகளால் சரிந்தது வன்னி அரசு*

ஆங்கிளத்தலபதி வொன்றிக் தரு

*அடங்காப் பற்று அநுராத புரம்*
*ஆளுமைக்காய் அழுக்கி - சிங்களவர்*
*தமிழர்களை ஓரலகாய் இணைப்போம்*

ஆங்கிலப்படைவீரன் வசனம்

*பிரபு நம் சதிவலையில் தமிழ் துரோகிகளை எழிதாக சிக்கவைத்து விட்டோம்*

தரு

*காக்கை வன்னி பிலிமதளா கயவன் முத்துச்சாமி*
*சோரம் போனார் பதவிக்கா சொந்தமண்ணை அளிக்க*
*அடுத்த கணை இலக்குமுறை அபகாரம் என்ன*

*களப்போரின் ரணம் ஆறும் முன்னே கருத்துரைப்பீர்*

வொன்றிக் வசனம்

*எமது ஏகாதிபத்தியத்தின் மூலோபாயமே பொருளாதார நோக்குடைய வர்த்தகம்தான். அடுத்தபடியாக*

தரு

*இறைமை மிகு கொழும்பு கண்டி திருமலை யாழ்ப் பாணம்*
*இறுமாப்பாய் இருந்துவந்த வன்னி நிலம் யாவும்*
*அரசுமுறை அழித்து இனி ஒரு குடையின் கீழாய்*
*சுதந்திரம் உரிமை யென சில சலுகை அளிப்போம்*

வசனம்

*எல்லா அரசு முறைமைகளையும் ஒழித்து நம் நிருவாக வசதிக்காக சிங்கள தமிழின ஆட்சி எல்லைகளை ஒன்றாக இணைப்போம்.*

ஆங்கிலப்படைவீரன் வசனம்

*பிரபு! தங்களின் ஆணைப்படியே, நம் நிர்வாக வசதிக்காக சிங்கள, தமிழின ஆட்சி எல்லைகளை ஒன்றாக்குவோம்.*

ஆங்கிளத்தலபதிவொன்றிக் வசனம்

*பண்டாரவன்னியன் கொள்ளையடித்த வேளையில் நமது படையுடன் ஏற்பட்ட மோதலின் போது, மடிந்து விட்டதாக தண்டோராபோட்டு அறிவியுங்கள்.*



## 25ம் காட்சி

**காட்சியமைப்பு: மாளிகை**
**பாத்திரங்கள்: குருவிநாச்சியார், தோழி, வீரன்.**

***சபையுரை: மன்னர் மரணமடைந்ததாக தோழி மூலம் தகவலறிந்த குருவிநாச்சியார், உயிருடன் அடிபணியக் கூடாது என்ற வேட்கையுடன் கார்த்திகைக் கிழங்கை உண்டு மரணித்தல்.***

தோழி வசனம்

*தங்களுக்கு தகவல் தெரிவிப்பதற்காக படை வீரன் காத்திருக்கிறார்.*

குருவிநாச்சி வசனம்

*வரச் சொல்லுங்கள்!*

வீரன் வசனம்

*இளவரசியாரே! போரில் படுகாயமடைந்த மன்னர், அதன் தாக்கத்தினால் இறந்து விட்டதாகவும், ஆங்கிலேயர் இங்கு படையெடுத்து வருவதாகவும் அறியப்படுகிறது.*

குருவிநாச்சி வசனம்

*தாயே! இலட்சிய சோதனையில் எத்தனை முறைதான் கண்கள் கண்ணீரைத் தாங்கும். எமக்கு விடிவே கிடையாதா?*

புலம்பல்

*முப்பொறி வடிவே முத்தமிழ் விடிவே*
*முப்பகை வினையோர் முடங்கலிட்டனரோ*

*விடுதலை விருட்ச விதையினை சிதைத்து*
*வேருடன் இழுத்தே வெய்யினில் போட்டார்*
*பெரும் சரித்திரமே பேரிகை ஒலியே*
*ஆணையின் அதிர்வே - ஆவியடங்கியதோ -*

தரு

வீரமிகு வன்னிமைக் காய்
வீறு நடை போட்ட மன்னவனே -
செதுக்கி வைத்த சிற்ப மதாய் மண்ணில்
செறிந்தாயோ செந்தமிழே -

கற்பரசி கண்ணகியே
வற்றா பளை யெழு அம்பிகையே -
கண்ணிழந்து மண்ணிழக்க தர்மம்
தலை குனி வானதையோ

வசனம்

கார்த்திகைக்கிழங்கை உண்டு, கயவரிடம் மண்டியிடாது மரணத்தை ஏற்கிறேன்.

தரு

குருகுலத்தில் கூடி வாழ்ந்தோம்
குருசேத்திரத்தில் பிரிவோ
உடலை விட்டு அடிபணியா துயிர்
ஒன்றாக அங்கு வாறேன்

வசனம்

பூவின் குரலொலி வண்டிற்குக் கேட்கும். பூவையின் ஓலம் புரவலா உனக்கு கேட்காதா.

**(தென்னோலைப்பன்னாக்கில் படுத்தபடி)**

மீண்டும் ஓர் பிறப்பிருந்தால் சேர்வோம் நாம் வாழுவோம்.

**(குருவிநாச்சியார் மரணமடைதல்)**



## 26ம் காட்சி

காட்சியமைப்பு: காடு
பாத்திரங்கள்: பண்டாரவன்னியன், தளபதி, வீரர்கள்.

***சபையுரை: போர்முனையில் படுகாயமுற்று மயக்க நிலையில் வீரர்களால் பனங்காமம் கொண்டு செல்லப்பட்ட பண்டாரவன்னியன், மயக்க நிலை தெளிதல்.***

பண்டாரவன்னியன் வசனம்

*வீரர்களே நான் எங்கிருக்கிறேன்.*

தளபதி வசனம்

*அரசே, ஆங்கிலேயரின் வஞ்சனையால் உடையாவூர் போர்க்களத்தில் படுகாயமுற்ற வேளை!*

பண்டாரவன்னியன் வசனம்

*அடிமை வடுவுடன், உடம்பில் உயிரை சுமப்பதா? ராவணனை வீழ்த்த சகோதரன் விபீடணன் துரோகியானான். கட்டப்பொம்மனை காட்டிக்கொடுக்க எட்டப்பன். பண்டாரவன்னியனை அழிக்க காக்கைவன்னியன், கண்டியை கைப்பற்ற தம்பி முத்துச்சாமி இப்போது சிங்கள சிலந்தி பிலிமதளா ஆங்கிலேயருக்கு அடிவருடியானான். அங்கும் முடியாட்சி முடக்கப்பட்டு நண்பன் கண்ணுச்சாமி காவலில். தமிழனின் ஆளுமை தலைவிதி இப்படியா ஆகவேண்டும்.*

வீரன் தரு

ராகம்: காம்போதி | தாளம்: ரூபகம்

*அஞ்சிடல் அறியா தெங்கள் நெஞ்சுரம் கொள் வீரவேந்தே*
*மார்பில் வீர குண்டை ஏந்தி மயக்கமுற்றீர் போர்க்களத்தில்*

மறுவீரன் தரு

*அமிழ்தினும் இனிய தமிழ் அறந்தகழ்வாய் ஆள்கைபுரி*
*கோலின் செம்மை குடையின் தண்மை கொற்றவா நீ வீழவில்லை*

தளபதி தரு

*தங்கமுகப் பொன்மகனே தரணி போற்றும் மன்னவனே*
*பங்கமில்லா பரிவொளியே பாரிலெங்கள் வழித்தடமே*

பண்டாரவன்னியன் தரு

*தங்கப்பேழைக்குள் கிளியாய் தாவிடா அடிமை நிலை*
*களத்தினில் விழுப்புண்ணுற்று வளமிழந்து வாழுவதோ*

வீரன் தரு

*கங்குல்திரை தான்விலக களனியெங்கும் கதிரொளிக்கும்*
*தூயா உம்மை காப்பதனால் தாயவளும் தலை நிமிர்வாள்*

மறுவீரன் தரு

*ஆயிரம் ஆண்டிற் கோர்முறை அன்னைத்தமிழ் காக்கவந்த*
*ஊற்றுக்கண் உமையிழந்தால் ஆற்றுவார் எமக்கு யாரோ*

பண்டாரவன்னியன் வசனம்

*நெஞ்சு வலிக்கிறது, கரையாத நினைவுகள் கண்ணெதிரே.*

கொச்சகம்

*பேரிமையக் கல் எடுத்து ஆரியர்கள் தலைசுமத்தி*
*பத்தினிக்குப் படிமமிட்டு பார் போற்ற வாழ்ந்த இனம்...*
*வாடையிலே திருவேங்கம் தென்பாலாய்க் குமரிமுனை*
*பாங்கீழம் தமிழகமும் பெருநிலமாய் இணைந்திருக்க*
*கடற்கோளால் குமரி கண்டம் கடுவினையாய்க் கடலெடுக்க*

வசனம்

*கடல் கொண்டது கரைகள் பிளந்தன. கன்னித் தமிழே!*

தரு

ராகம்: முஹாரி | தாளம்: ஆதி

*பொதிகை மலை பொழில் முப்பாலாய்*
*பொங்கு தமிழே - சங்க மதுரையிலே*
*மூ வேந்தரால் புவிக் கணியானாய்*

*கருவறையாம் தமிழகத்தில்*

உருவிழந்தாயே - தொப்புள் உறவுடைய
ஈழ மண்ணில் உரிமை போவதோ

தாய் நிலத்தில் தமிழர் படை
தலை குனிவதோ - எந்தன் கண்ணெதிரே
என் இனமும் அடிமை யாவதோ

வசனம்

என்றோ ஒருநாள்

தரு

நாகர் குல இராவணனின் நெடுந்தகையோனாய்
நெய்தல் நெஞ்சுரத்தோன்
பகையழித்து படைகொண்டாளுவான்

வசனம்

மண்ணின் விடிவிற்காய் மார்தட்டிப் போராடிய மறவர்களே, மாவீரர்களே, என் கடைசி வேளையில் கண்ணீரை மாலையாக்கி உங்கள் காலடியில் காணிக்கையாக்குகின்றேன்.

என் உறவோடு கலந்து உரிமைக்காய் உறுதிபூண்ட குருவிநாச்சியே, என்னால் உன் வாழ்வை அழித்தாயம்மா.

வீரர்கள் வீழ்வது விரோதிகளிடமல்ல, துரோகத்தின் வியூகத்தால்.

மாலை மறையும் கதிரவன் மறுநாள்க்காலை மீண்டெழுவான்.

வீரத்தமிழினமே நம் இலட்சிய வேட்கை ஈடேற வேண்டும். விடுதலை வீழ்வதா, இருப்பதை இழப்பதா, சரிவது சரித்திரமாகாது, மீண்டெழுவதே வீறுறை வரலாறு.

“தமிழ் வாழ்க, தாயகம் வாழ்க”

**(பண்டாரவன்னியன் வீர மரணமடைதல்)**

**கதைக்கருவுக்கான உசாத்துணை நூல்கள்**


1. வன்னிவிழா 1998ம் ஆண்டின் மலரின் கொம்பறையின் கட்டுரைக்குறிப்பு
2. புகழ்பூத்த வன்னிமண்ணின் காவலன் பண்டாரவன்னியன் – முல்லைமணி வே. சுப்புரமணியம்
3. வன்னி நாட்டின் இறுதிமன்னன் மாவீரன் பண்டாரவன்னி – எம்.எஸ்.கந்தசாமி
4. பாயும்புலி பண்டாரக வன்னியன் – கலைஞர் மூ.கருணாநிதி

# கண்ணகி

## தென்மோடி நாட்டுக்கூத்து

எழுத்துருவாக்கம்

**அண்ணாவியார்**

**சவிரிமுத்து மிக்கேல்தாஸ்**

*1996ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24ம்தேதி கனடா ரொறென்ரோ நகரில் நடைபெற்ற 6வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டில் கண்ணகி கூத்து மேடையேற்றப்பட்டது.*

*பிரான்ஸ் நாட்டில் 2014ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ம் திகதி T.T.N. தமிழ் ஒளி தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பிற்காக இக் கண்ணகி கூத்தினை தயாரித்து வெளியிட்டுள்ளது.*



# கதை முன்னோட்டம்

சிலப்பதிகாரம் தமிழரின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாக போற்றப்படுவதுடன், தமிழின மறமேம்பாட்டினையும், தமிழ் ஆட்சியமைப்பின் அறநெறி உறுதிப்பாட்டினையும் விளக்கும் தனிப்பெருஞ் செல்வமாக திகழ்கிறது.

பாண்டிய மன்னனோடு வழக்காடி நீதியை நிலைநாட்டும் கற்பின்செல்வி கண்ணகி கதையை இளங்கோவடிகள் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாக வடித்தார். கண்ணகி கதை காலம்காலமாக தமிழ்மக்கள் மத்தியில் வழிபாட்டிலக்கியமாகவும், கூத்தாகவும், நாடகமாகவும் நிலைபெற்று வருகிறது.

பூம்புகாரில் வாளும் வணிக குலத்து பெருஞ்செல்வந்தனாகிய கோவலன் தனது செல்வங்களையெல்லாம் மாதவியிடம் இளந்து, தன்மனைவி கண்ணகியிடம் செல்கிறான், தான்செய்த தவறுகளுக்காக மனம் நோகிறான்.

புதுவாழ்வை அமைத்துக்கொள்ள கண்ணகியுடன் மதுரைக்குச் செல்கிறான். மதுரையில் பொற்கொல்லனால் வஞ்சிக்கப்பட்டு அநீதியான முறையில் கோவலன் பாண்டிய மன்னனால் கொலை செய்விக்கப்படுகிறான்.

இதனை அறிந்த கண்ணகி, பாண்டிய மன்னனுடன் வழக்குரைத்து நீதியை நிலை நாட்டி, தன் கணவன் கோவலனுக்கு தீங்கிளைத்த மதுரையை அழித்து, தன் கற்பின் பெருமையை உலகிறக்கு உணர்த்தி பத்தினித் தெய்வமாகிறாள்.



# பாத்திரங்கள்

**கண்ணகி**
**கோவலன்**
**மாதவி**
**கவுந்தி அடிகள்**
**கட்டியகாரர்**
**பாண்டியமன்னன்**
**அரசி கோப்பெருந்தேவி**
**மந்திரி, தளபதி**
**சான்றோர்**
**பணிப்பெண்கள்**
**பொற்கொல்லர்**
**காவலர்**
**மாதரி, ஐயை**
**பொதுமக்கள்**



## காப்புவிருத்தம்

ஆதியாம் இறையோன் தூய
அருள் பரன் ஆவி போற்றி
தமிழோங்கு மதுரை நாட்டில்
கண்ணகி வழக்குரைத்த
கருதரு காதை சாற்றும்
கவியாய்ந்த கலைக்குரிசில்
கலைவழி பிழைகள் போக்க
கன்னித்தாய் மரியே காப்பு



## 1ம் காட்சி

காட்சியமைப்பு: வீடு
பாத்திரங்கள்: கோவலன் மாதவி

**சபையுரை: மாதவி எனும் ஆடல்மகள் சோழ அரசவையில் நாட்டியத் திறனுடன் ஆடிக்காட்டினாள். மனம் மகிழ்ந்த சோழமன்னன் ஆயிரத்து எட்டுக் களஞ்சியப் பொன் தகமையுடைய பசும்பொன் மாலையைப் பரிசளிக்கிறான். அம்மாலையை விலைகொடுத்து வாங்குபவர் மாதவிக்கு மணமகனாக அமைவர் என்னும் பொருளுறும், கூனி எனும் மூதாட்டி அம்மாலையை விலை கூற, கிரேக்க வியாபாரி ஒருவன் பேரம் பேசுகிறான். அவனிடம் மாதவி விலைபோகக் கூடாது என்ற நோக்குடன் மாலைக்குரிய பொன்னைக் கொடுத்து மாதவியை மீட்ட கோவலன் எனும் வணிகன் தன் மனைவி கண்ணகியை அறவே மறந்து மாதவி வீட்டில் கூடி வாழ்கிறான்.**

கோவலன் வசனம்

*ஆடல் கலாவல்லியாம் மாதேவியே! அன்னைத் தழிழைப் போற்றி அன்று சோழமன்னன் அவையில் ஆடியதைப் போன்று வகையுடன் நடனமிடு.*

மாதவி வசனம்

*அன்று தெய்வமாய் என்னைக் காப்பாற்றினீர்கள் இல்லையேல் சோழமண்டலத்தில் என்குலப் பெருமையும் மானமும் பறிபோயிருக்கும்.*

கோவலன் வசனம்

*கலைமகளே உன் கலைத்திறனுக்கு விலையேது?*

மாதவி நடனத்தரு

*தாயே தமிழே தண்ணொழித் திங்களின் ஒளியே*

விண்மீன் புடைசூள் பண்ணுறு அன்னையே உயிரே

ஆய கலையின் அன்னையே அருமுத்தமிழே
கல்வியும் செல்வ வீரத்தின் முப்பெரும் தேவி

காலச் சுழலின் கனலாலே கரையாக் கலையாம்
குரவையும் கூத்தும் கும்மி கோலாட்டம் நடனம்

குண்றாப் பேறாய் குவலைய இலக்கணத் தொன்மை
மூலப் பண்ணாய் முடிகொண்ட முத்தமிழ் இசையே

அறமும் மறமும் ஆய்ந்தோங்கு செறிபொருள் செம்மை
ஒலிகளின் உயிர்ப்பே மொழிகளின் மூலமாம் முதலே

கோவலன் வசனம்

அன்று மரபின் முறைப்படி வக்காணம் வகுத்து பண்ணுடன் நடனமாடிய பெருமையை நினைவூட்டினாய், கிரேக்க வியாபாரியிடம் தமிழ்மகள் விலைபோகக் கூடாது என்பதற்காகவே உன்னை மீட்டேன்.

மாதவி வசனம்

நீங்கள் என்மானத்தை மட்டுமல்ல மகள் மணிமேகலை எனும் விலை மதிப்பில்லா மாணிக்கத்தையுமல்லவா அளித்துள்ளீர்கள்.

கோவலன் வசனம்

நம் செல்வமகள் மணிமேகலை பூக்களில் சதிராடும் பூந்தென்றல், குழலும் யாழும் அளிக்கா இனிமை நம் குழந்தையின் குரலொலி.

மாதவி வசனம்

அத்தான் இன்று கடலும் காவேரியும் ஒன்று கூடும் இந்திரவிழா, சோழமண்டலத்து தலைநகராம் பூம்புகார் கடற்கரையில் நடக்கிறது, ஊரே அங்கு திரண்டிருக்கும்.

கோவலன் வசனம்

மாதவி, உன் விருப்பப்படியே இந்திரவிழாக் காண பூம்புகார் கடற்கரை செல்வோம்.



## 2ம் காட்சி

காட்சியமைப்பு: கடற்கரை
பாத்திரங்கள்: கோவலன், மாதவி, பொதுமக்கள்.

**சபையுரை: பூம்புகார் நகரத்து கடற்கரையில் நடைபெற்ற இந்திரவிழாவினில் கோவலனும் மாதவியும் கூடிக்குலவும் வேளை, கானல் வரிப்பாடலின் போது, கோவலன் மனம் மாறிப் பிரிதல்.**

கோவலன் வசனம்

*அலையை ஆடையாகவும், மலைகளை தன் மார்பாகவும், மழைமேகத்தை கரும் கூந்தலாகவும் கொண்டவள் நிலமடந்தை. இம் மங்கையின் உடலை மூடியிருக்கும் இருளை ஆதவன் அகற்ற கடலும் காவேரியும் இணையும் அற்புதமான காட்சி.*

மாதவி வசனம்

*காவேரியே நீ வாழ்க, உன்னோடு உறவாடிய சோழன் கங்கையிடமும் சென்று கூடியபோதும் நீ வெறுக்கவில்லையே.*

தரு

*ஆழ் கடலை தென்றல் வருட*
*அலை புரண்டு கரையை நாடி ஆர்பரிக்குதே*
*கங்கை கொண்டோன் கயல் விழி கன்னி*
*குமரியாளை கூடுதலும் அறமதாகுமோ*

கோவலன் வசனம்

*காவேரியின் மனதில் பகையில்லை, அதனால் அவள் ஆத்திரப்படவில்லை இது பெண்ணுக்குரிய பெருமை.*

தரு

*வைகறையில் தென்னவர் குல*

வனிதையரும் கங்கையாடி கோலமிட்டபின்
காலகாலம் காக்கும் மரபாய்
திலகமிட்டு கணவனையே போற்றி மகிழ்வார்

மாதவி வசனம்

*மனம் போனபடி ஆண்கள் அறமிழந்து அலைவது சரியானதென ஒப்பிடுகிறீர்களா?*

கோவலன் வசனம்

*தமிழ்ப்பெண்ணின் தனித்துவம் கற்பு நெறி பற்றியே கூறினேன்.*

மாதவி வசனம்

*கற்பெனும் வரைமுறை பெண்மைக்கு மட்டும்தானா?*

தரு

கங்கையோடு கலந்த சோழனும்
கன்னிகுமரியாளைத் தீண்டி கற்பிழந்தானே
காவேரிபோல் பார்த்து வாழ்வதா-
கண்ணகி பின்பு மாதவியாய் மறுபெண் எண்ணமோ

மாதவி வசனம்

*காவேரியை மணந்த சோழன் கங்கையுடன் கூடினான், பின்பு கன்னியாகுமரி இதுபோல் முதல் கண்ணகி இப்போது மாதவி, இனி..?*

கோவலன் வசனம்

*கயமை நிறைந்த விலைமகளே, கற்புக்கு உவமைகூறி கற்புக்கு அரசியாம் கண்ணகியை விட்டு உன் மாயையில் மயங்கிய என் கண்களை திறந்தாயடி*

மாதவி வசனம்

*பிரபு நான் அந்த எண்ணத்தில் கூறவில்லை, கற்பனை உவமையை கபடமாக எண்ணுகிறீர்கள்.*

கோவலன் வசனம்

கருத்துடன்தான் கூறினாய், உனக்கும் இன்னொருவரை உரிமை கோருகிறாய், முள் காலில் குத்தும் உன் சொல் நெஞ்சில் குத்தி விட்டது.

மாதவி வசனம்

உங்களை நெஞ்சிருத்தி உயிராய் மதிக்கிறேன்.

கோவலன் வசனம்

புழுதியில் கிடந்த உன்னிடம், புதுசுகம் காணும் நினைப்பில் மனிதத்தை இழந்தேன்.

மாதவி வசனம்

அழகுறும் இந்திர விழாவில் ஏனிந்த அபாண்டம், ஏனோ என் வலக் கண் துடிக்கிறது.

கோவலன் வசனம்

பத்தினிக்கு புரிந்த பாதகம் பலித்தது, என்னை சுற்றிய இருள்மதி தெளிந்தது, கணிகையே! உன் கபட நாடகம் புரிந்தது வருகிறேன்.

மாதவி கொச்சகம்

கல்லுருகும் கடலுருகும் காண்போரின் மனமுருகும்
கனிமொழியாள் மணிமேகலையும் குன்றி மனம் குரவையிட
விருப்புகளை விதையாக்கி விண்ணகத்து மின்னல் போல
நெடுவானில் இடியாகி நெஞ்சதிர வஞ்சனையோ

தரு

நெருப்பினை சொற்களினால் - கருவாக்கி
நெஞ்சினை துடிக்க வைத்தீர்
நிலை தடுமாறுகுதே முறையிதோ நேயமாய் ஏற்றுடுவீர்

கோவலன் வசனம்

தரு

வஞ்சனை நஞ்சினாளே பொருளோடு வளமான வாழ்வழித்து
நெஞ்சினில் பெண்மையின்றி நீலிக்கண்ணீர் வஞ்சகி வடிக்காதே

மாதவி தரு

வளமான சிந்தனையும் மனதில் வற்றாத அன்போடும்

*வாழ்வினை உயிர்ப்போடு வழங்கிய விதி மாறி வினையாச்சே*

**(மாதவி கோவலன் காலைப்பிடித்தபடி)**

வசனம்

*நான் கணிகைதான் மனதால் உம்மையன்றி.*

**(கோவலன் உதறிவிட்டுப் போதல்)**

மாதவி வசனம்

*பிரபு என்னையும் மணிமேகலையையும் தவிக்கவிட்டு சென்றது ஏனோ..! வேனிற்கால வெப்பமாய் பிரிவுத்துயர் மிகுதியாகுதே. காற்றின் வேகத்தினால், காம்பிலிருந்த மலர்கள் காயம்பட்டதாய் ஆகிவிட்டதே...*



## 3ம் காட்சி

காட்சியமைப்பு: வீடு
பாத்திரங்கள்: கண்ணகி, கோவலன்

**சபையுரை: புகார் நகர கடற்கரையின் இந்திரவிழாவின் போது, கானல் வரிப்பாடலினால், கோபமுற்ற கோவலன், மனம் மாறி கண்ணகியிடம் வருகிறான்.**

கண்ணகி வசனம்

*சுவாமி வந்துவிட்டீர்களா? ஏனிந்த ஏழ்மைக் கோலம், நிலவும் கதிரவனும், இரவும் பகலுமாகி, காலங்கள் கரைந்தோட உங்கள் நினைவால்... வாடிய மலரைக்காண..!*

கோவலன் வசனம்

*என் கண்மணி! பிரிவெனும் துயரால், தொடுவான எல்லைவரை துன்பத்தில் துவழவைத்த பாவி நான்.*

கண்ணகி வசனம்

*உங்கள் மலர்முகம் என்றும் என் மனக்கண்ணில் நிழலாடும்போது.*

கோவலன் கொச்சகம்

*பாற்கடலின் வலம்புரியே பாண்டியரின் மீன் விழியே*
*சேரன் வில்லை புருவமுற்ற சோழர்குல புலி மகளே -*
*கணிகையினால் கறை படிந்தேன் கரையேறி மீண்டிடவே*

தரு

ராகம்: பைரவி | தாளம்: ஆதி

*துயிலெழு மல்லிகையே துவதே மகிமை*
*மீண்டிட மதுரை போக எண்ணினேன்*
*நாணலாய் வளைந்து வாழ்ந்தாய் துயரிலும்*

*கிளி மொழியாளே வாய் திறந்து பகருவாய்*

கண்ணகி வசனம்

*பெருமை மிகுந்த மாமன் மாமியுடன்*

தரு

*தவமிரு அன்னை தந்தை மாமனார்*
*மணிமேகலை மகளார் எல்லாம் தவித்திட*
*விரிகதிர் உலகொளி போல் செல்வமும்*
*குலப் பெருமையும் கடல் மழையாய் ஆவதோ*

கோவலன் வசனம்

*நலிவடைந்த நிலையில்,; நாம் பிறர் தயவில் வாழப் போவதாய் மனது உறுத்துகிறது.*

கண்ணகி வசனம்

*அப்படி ஏன் நினைக்கிறீர்கள், நம் உறவுகளான*

தரு

இராகம்: காவியா | தாளம்: திரிவிடை

*மங்காமணி மாமன் மனை மகிழ் வளித்த தந்தை அன்னையரும்*
*உடன் பிறவாள் மாதவியும் மகள் உற்றார் குடி மனை இழந்தோ*

கோவலன் வசனம்

*மாதவி உன் வாழ்வில் பங்கு போட்டவள், கலங்கவைத்தவள் மீது கனிவுடன்பரிவு கொள்கிறாயே..!*

கண்ணகி வசனம்

*எப்படியாயினும் மணிமேகலை நம் குழந்தை.*

கோவலன் தரு

*தனிக்குடியாய் வாழ்வதற்கு தந்தை தகுதி பார்த்து பொருள்*
*அளித்தார்*
*மாதவியால் மதிப்பிழந்தேன் மாமன் கையை எதிர்பார்த்து வாழேன்*

கோவலன் வசனம்

*குற்றமற்ற பசும் பொன்னே, யாழிடை பிறவா இசையே, தந்தை தகுந்தளித்த செல்வங்களையெல்லாம் மாதவியிடம்*

சிதைத்தேன். இனியும் இழிமகனாய் இந்த சோழ மண்ணில் வாழ்வதா! வேண்டாம் மதுரைக்கு புறப்படுவோம்.

கண்ணகி வசனம்

சுவாமி, உங்கள் எண்ணப்படியே. புதிய பொழுது புலருமென்ற நம்பிக்கையுடன் புறப்படுவோம்

தரு

வந்த துயர் துன்பமெல்லாம் வாழ்க்கை தூய்மையாகி நிறைவுறவே
கலைந்த கூட்டை குருவி கட்டும் காவல் மதுரை சென்று வளம் பெறுவோம்

கோவலன் வசனம்

உன் பாடகம் அணிந்த பாதங்களை பருக்கைக் கற்கள் கீறி புண்படுத்திய போதும்

தரு

முத்து மூழ்கும் சோழமுனை எழில் பூம்புகாரின் கரையிதுவே
வாணிபத்தால் வளம் செழித்த நாவாய் துறை கடலை கடந்து செல்வோம்

வசனம்

அன்பே, அதோ பாண்டிய நாட்டு எல்லை தெரிகிறது, நகரை நெருங்க இன்னும் ஐந்து, ஆறு காத வழி தூரம் இருக்கிறது.

**(கோவலன் பாண்டிய நாட்டு எல்லை தெரிவதாக காண்பித்தல்)**



# 4ம் காட்சி

**காட்சி அமைப்பு: வீதி**
**பாத்திரங்கள்: கட்டிய காரர்**

***சபை உரை: பாண்டிய மன்னரின் கட்டிய காரர் அரசரின் சபை வரவை வெளிப்படுத்தல்.***

கட்டிய காரர் தரு

ராகம்: கல்யாணி | தாளம்: ஆதி

*மேதினியுறு வீர மறவரே - எங்கள்
மீன் கொடி பாண்டியன் சபை வாறார்
நற்பரிவாய்ப் பந்தல் போடுங்கோ
நீங்கள் நர்த்தனம் ஆடி மகிழுங்கோ*

*பாவலர் நாவலர் பண்பாடி
தமிழ் பாரம்பரியத்தை பேணியே
சங்கொலி முரசொலி அதிரவே
-வீர சக்கரவர்த்தியும் சபை வாறார்*

*மற்புய மேவிய மகிபனாம் -
எங்கள் விற்பனன் கரிநிரை துரகத
பன்மீன் தானை சேனை அணியுற
வீர தென்னவர் குல செல்வன் சபை வாறார்*

கூறல்

*ராஜாதி ராஜ, ராஜகெம்பீரன், மாட்சிமை மிகுந்த தென்னவர்க்கோன், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் சபை வருகிறார்.*



## 5ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை
பாத்திரங்கள்: பாண்டிய மன்னன், அரசி – கோப்பெருந்தேவி, மந்திரி, தளபதி, சான்றோர், பணிப்பெண்கள்.

***சபையுரை: பாண்டியமன்னன் நெடுஞ்செழியன் அவை வருகையும், தேச விசாரணையும்.***

பாண்டிய மன்னன் வரவு தரு

ராகம்: நாத நாமகிரி | தாளம்: ஆதி

*ஆதித் தழிழ் மொழியை முருகனும்*
*அகத்தியர் தவமுனியும் அறனாய்ந்த*
*சங்கம் வளர்த்திடு தங்க மதுரையை*
*அணியாய் ஆண்டிடும் அரசனும் நானே*

*அகர் மணி தமிழ் மண்ணை வணங்கியே*
*அறன் மறன் ஆற்றலுடன்இறைமையாய்*
*எங்கும் தமிழொலி பொங்கி புகலவே*
*அடங்கலர் அஞ்சிட நெறியுடன் ஆள்வேன்*

*மங்காப் புகழுடைய பண்பாடுடன்*
*பொங்கு கலைவழியும் சங்கையுற*
*போற்றி மறுமன்னர் திறைதந்தேற்றிடு*
*மதுரை பாண்டியன் கொலுவிற் செல்வேனே.*

உரை

*நீதி கோணாது அரசாளுவேன்*

மந்திரி கவி

*சந்திர வட்ட நீள தரளவெண் குடையின் கீழாய்*
*மதுரை மாநகரை ஆளும் ஏந்தலே மகிபா போற்றி*

தளபதி கவி

*கருதரு அமர்வின் முன்பு காத்திர வழமைசாற்ற,*
*தண்ணொளி தலைவா உங்கள் இசைவினை இயம்புவீரே*

மன்னன் தரு

ராகம்: பலவுரம்ச | தாளம்: ரூபகம்

*ஒப்பற்ற அவையினில் கீர்த்தி மேவும்*
*மதியுக மந்திரி பகரக் கேளாய்*
*தாய்த்திரு நாட்டினின் வழமை செழுமை*
*தான் சிறந்தோங்குதா செப்புவீரே*

மந்திரி

*மங்கல மங்கயர் கற்பு ஓங்கி*
*மக்கள் மகிழ்வுற நீதி போற்றி*
*நீர் வளம் பெருகிட மழை பொழிந்து*
*நில வளம் செழிப்புறும் பெருமை கண்டேன்*

மன்னன் வசனம்

*நாட்டு வழமை கேட்டு மகிழ்ந்தேன்.... தளபதி.*

தளபதி வசனம்

*அரசே!*

மன்னன் தரு

*எண்ணற்ற படையணி வழி நடத்தும்*
*எழில் மிகு தளபதி இயம்பக் கேளாய்*
*ஏற்ற நம் கோட்டையும் தளங்கள் எல்லை*
*மாற்றார் அணுகாது காவல் செய்வீர்*

தளபதி

*ஆரியப் படை வென்ற மன்னர் ஏறே*
*வீரிய மறவீரர் எல்லை யெங்கும்*
*நேரியமாகவே அரணமைத்து*
*சீரியமாய்ப் பணி புரிந்து வாறார்*

மன்னன் வசனம்

*நம் குவலையத்தின் குறைவற்ற நிலை கேட்டு மகிழ்ச்சியானேன்,*
*என்றும்போல் நம் வளம் சிறக்க*

கவி

குடி மக்கள் சேம மோடு தழிழ்க் குல செழிப்பும் கேட்டு
இணையில்லா மகிழ்ச்சியானேன் இப்பேறு என்றும் ஓங்க
வழிநடத்தமைச்சே எந்தன் வல்லமைத் தானை வீரா
என்றும்போல் உம் பணியை ஏற்றமாய்ப் பேணுவீரே

வசனம்

*தேவி, தேச விசாரணைகள் முடிந்தன, அந்தப்புரம் செல்வோம்*

அரசி வசனம்

*ஆகட்டும் அரசே (அரசி அவையை விட்டு படியிறங்கும் சமயம் ஓர் காற்சிலம்பு உடைதல்)*

வசனம்

*ஆ! தெய்வமே என்ன சோதனை! (சிலம்பை கழற்றியபடி)*

மன்னன் வசனம்

*தேவி முகம் சிவந்து கவலை தோன்றுகிறது எதற்காக..?*

அரசி வசனம்

*ஆம் பிரபு, அபசகுனமாய் ஒர் காற்சிலம்பு உடைந்து விட்டது, நெஞ்சம் நடுங்குகிறது.*

மன்னன் வசனம்

*தேவி இதற்காக ஏன் கலங்குகிறாய், உடைந்த சிலம்பை ஒட்ட வைக்கலாம்.*

அரசி வசனம்

*இரவினில் நான் கண்ட கொடிய கனவு என் இதயத்தை நெருடி வருத்துகின்றது.*

தரு

*ராகம்- கீதவாணி தாளம் - அட*
*நீண்ட தலைமுறையாய் - நீதி*
*காத்திடு பாண்டிய வேந்தர்களின்*
*மங்கல மங்கையரின் - முத்து*
*சிலம்புடைந்து பரல் விலகியதே*

அறநிலை தவறிடுமோ - அஞ்சி
ஏங்குதே மனம் விதனமாகி
தீங்கேதும் விளைந்திடுமோ - எந்தன்
ஏந்தலே பழிபோக்க வழியுரைப்பீர்

வசனம்

இதனால் ஏதும் தீங்கு நேருமோவென அஞ்சுகிறேன் பிரபு.

மன்னன் வசனம்

தேவி, இரவில் கண்ட கனவால், உன் மனதில் தொடரும் கற்பனையை விட்டு விடு.

இதனால் குறையொன்றுமில்லை... தளபதி.

தளபதி வசனம்

அரசே!

மன்னன் வசனம்

இச்சிலம்பினை எடுத்துச் சென்று அரண்மனை பொற் கொல்லரிடம் கொடுத்து பழுது பாருங்கள்.

தளபதி வசனம்

தங்கள் கட்டளைப்படியே.



## 6ம்காட்சி

காட்சியமைப்பு: வீதி
பாத்திரங்கள்: தளபதி, பொற் கொல்லர்

**சபையுரை: தளபதி அரண்மனை பொற்கொல்லரை சந்தித்து, உடைந்த சிலம்பை மன்னர் பழுது பார்க்கும்படி தந்ததாக கொடுத்தல்.**

தளபதி வசனம்

*பொற்கொல்லரே அரசியின் ஒற்றை சிலம்பு உடைந்துள்ளது.*

பொற் கொல்லர் வசனம்

*ஓ! அப்படியா... கொண்டுவந்துள்ளீர்களா?*

தளபதி வசனம்

*ஆம். உடைந்த இச்சிலம்பை உங்களிடம் கொடுத்து பழுதுபார்க்கும்படி அரசர் என்னை இங்கு அனுப்பினார்.*

**(சிலம்பை பொற்கொல்லர் வாங்கி, பார்வையிட்டபடி)**

பொற்கொல்லர் வசனம்

*ஆகா! மிகவும் நேர்த்தி மிகு அபூர்வமானது, இச் சிலம்பு மிகவும் கவனமாக கையாள வேண்டும்.*

தளபதி வசனம்

*பெறுவதற்கு அரிதான இச்சிலம்பு உடைந்ததினால், கோப்பெருந்தேவியார் மன சஞ்சலத்துடன் ஏதும் களங்கம் நேருமோவென கவலையடைந்துள்ளார்.*

பொற்கொல்லர் வசனம்

*பதுமம், நீலம், விந்தம், படிதம் எனும் நால்வகை மாணிக்கத்தை விட, இம் முத்துக்கள் அபூர்வமானதுதான்.*

இதன் குற்றம் குறை நீக்கி, சூழ்ந்த கொடிய ஆவி போக்கி, சிறப்பாக்கி நானே அரண்மனை கொண்டு வருகிறேன்.

### (தளபதி புறப்படுதல்)

பொற் கொல்லர் தரு

ராகம்: செஞ்சுருட்டி | தாளம்: ஏகம்

*தூய பொன்னை உருக்கி*
*தூரிகையால் வரையும்*
*கைவினை செய் பொற்கொல்லனும்*
*கவர்ந்த பொருள் பெற்றேன்*

*கிளிச்சிறையும் ஆடகம்*
*சாத ரூப சாம்பூதம்*
*முத்துப் பரல் சிலம்புபோல*
*மூழ்க வைக்க வில்லை*

*பணிகள் பல புரிந்தும்*
*பலன்கள் ஒன்றுமில்லை*
*தானைத் தளபதியளித்த*
*சிலம்பு தன்னை மறைப்பேன்*

வசனம்

உடைந்த இச்சிலம்பின் மூட்டு வாயை நீக்கும் போது, உள்ளிருக்கும் தலை சிறந்த முத்துப்பரல்களும், வைரம் பதித்த கேவண வரிசையும் என் மனதை நிலை குலைய வைக்கிறதே. எப்படியும் இதனை களவு போனதாக மறைக்க வேண்டும்... ஆம், களவு போனதாக மறைக்க வேண்டும்.



## 7ம்காட்சி

**காட்சியமைப்பு: காடு**
**பாத்திரங்கள்: கோவலன். கண்ணகி, கவுந்தி அடிகள்**
**மாதரி-ஐயை**

***சபையுரை: மதுரை செல்லும் வழியில் கோவலன் கண்ணகியை சந்திக்கும் கவுந்தி அடிகள், இருவரையும் மாதரியிடம் ஒப்படைத்தல்.***

கோவலன் வசனம்

*கொடிய வரிப்புலிகளின் உறுமலும், கோட்டான்களின் அலறலும் இவ் வேளை மேலும் அதிர்ச்சியையும் துயரத்தையுமல்லவா.*

கண்ணகி வசனம்

*சுவாமி, வாழ வேண்டுமென்ற மன வலிமை, மட்டற்ற துணிவையும் மகிழ்ச்சியையும் தருகிறது.*

கோவலன் தரு

ராகம்: தோடி | தாளம்: ஏகம்

*கண்மணியே காத்திருந்தாய் வண்ணமுற வாழ்வோமென்ற*
*உணர்வால்*
*சேர்ந்த கணத்தினிலும் துயரமதோ செங்கமல பாதம் சிவந்ததுவே*

கண்ணகி தரு

*என்ன துயர் நேர்ந்தாலும் ஏந்தலுடன் செல்வதே பெண் சிறப்பு*
*இம்மை வாழ்வின் துயரமெல்லாம் இயற்கை தரும் வழிகாட்டல் தானே*

கோவலன் வசனம்

*தங்க குவளையில் தாதிமார் பால் கொடுக்க வாழ்ந்தவளே, தவித்த வாய்க்கு நீரின்றி இங்கு*

தரு

*கண்களிலே நீர் திரள கவரும் ஒளி கனிந்த முகம் வாடி*
*எழில் மாறி உருக்குலைந்தும் மலர்ந்த முகம் மன வலிமையுனதே*

கண்ணகி தரு

*பாதி ஒளி பாதியிருள் - பாரில் இன்ப துன்பமது போலே*
*நாளை இலையுதிரும் காலம் மாறும் வசந்த கால வாழ்வை*
*எண்ணுவோமே*

வசனம்

*சுவாமி, அங்கே பாருங்கள், மகிமை பொருந்திய தவத்தில் மிகுந்த உயரிய பெருந்தகை அறவுரை கூறும் கவுந்தி அடிகளார். சென்று தொழுது போற்றுவோம்.*

**(இருவரும் கவுந்தி அடிகளாரை வணங்குதல்)**

கோவலன் வசனம்

*தவமுதல்வியே! தாயே, என்னை மன்னித்தருள்க. நெறி தவறி சிறுமையுற்ற இழிமகன் நான்.*

கவுந்திஅடிகள் வசனம்

*எல்லாம் அறிவேன், வாழ்வுப்பாதையில் வழி தவறினாய், அதனால் தீமையெனும் வெம்மை வினையாகி உன்னை தொடர்கிறது.*

கோவலன் வசனம்

*தாயே, ஒருவனுக்கு ஒருத்தியெனும் நெறி இழந்து, மனம் போன போக்கில் அலைந்த*

கவுந்திஅடிகள் வசனம்

*துன்பங்களும் துயரங்களும் நம்மை சூழ்வதற்கு அடிப்படைக் காரணங்கள் இருந்தே ஆக வேண்டும். மனம் ஒன்றை திட்டமிடுகிறது, அதை நடைபெறாமல் தடுப்பது விதியின் பிரவாகம்.*

தரு

ராகம்: முகாரி | தாளம்: ரூபகம்

*முன்னோர் செய் தவக்குறைவால்*

இன் நாளினில் பெருந்துயர் அடைந்தாயே
வினையது வலிமை கொண்டே
உனை வருத்தும் ஊழ் வினை என அறிவாய்

ராமனும் சீதையுடன் - காடுறைந்ததும்
ராசன் நளனு மன்று சூதாடியே
நாடு மனை யிழந்தார் கர்மமெனும்
கேடுறை ஊழ் வினையால்

வசனம்

மகனே, சீர்மையும் இளமையும் பொருந்திய கண்ணகியாம் இக் காரிகை, கடுங்கதிரின் வேனிலையொத்த துன்பங்களை தாங்க மாட்டாள். மொழியின் பொருளாய் நின்று இயங்கும் அறிவாய்ந்த தெய்வமே வழிக்கு துணையாகுக.

**(மாதரியும் - மகள் ஐயையும் வருதல்)**

கவுந்திஅடிகள் வசனம்

அதோ சிறப்புறுகுணம் மாதரி.

**(மாதரி வணங்கி நிற்க)**

மாதரி, பேறர்கரிய பெண்ணான இக்கண்ணகியின் தந்தையும், கணவனான கோவலனின் தந்தையும் நற்குணம் மிகு பெரு வணிகர்கள், ஏதோ பிறவிப்பயன் இவர்களை வாட்டுகிறது. நகர் புதியது என்பதினால் உன்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கிறேன்.

மாதரி வசனம்

தாயே இம் மங்கல மங்கையை, அரும் பேறு மிகு பாவையை அடைக்கலமாக தந்துள்ளீர்கள்.

வாழ்வில் நான் பெற்ற பெரும் புண்ணியம். இவள் என் மகள் ஐயை.

**(ஐயை கவுந்தி அடிகளை வணங்குதல்)**



## 8ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை

பாத்திரங்கள்: பாண்டியமன்னன், மந்திரி, தளபதி, அவையினர்

***சபையுரை: கோவலனின் சிலம்பை கையகப்படுத்திய பொற்கொல்லர், மன்னனிடம் சென்று சிலம்பு திருட்டுப் போனதாக முறையிடுதல்.***

பொற்கொல்லர் வசனம்

*மேன்மை தங்கிய மகாராசா, அடியேன் விண்ணப்பம். தேவியின் சிலம்பு பெட்டகத்தில் இருந்த சமயம் திருட்டுப்போயுள்ளது.*

அரசன் வசனம்

*ஆ... உனது கண்காணிப்பிலுள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் சிலம்பு மட்டும் எப்படி திருட்டுப் போகும். உனக்கு யார் மீது சந்கேம்?*

பெற்கொல்லர் வசனம்

*பலர் பணி புரிகின்றனர் விசாரித்ததில் மறுக்கின்றனர் யாரெனக் கூறுவது பிரபு.*

மன்னன் வசனம்

*குறுமதியுடைய வஞ்சப் பத்தனே, உன் முகபாவமும், நீ கூறும் முறையும் எனக்கு சந்தேகத்தை*

பொற்கொல்லர் வசனம்

**(மண்டியிட்டு)**

மன்னர் மன்னா, அவகாசம் கொடுங்கள். நான் குற்றமற்றவன் என்பதனை நிரூபிக்கும் வண்ணம் உங்கள் முன்பாக கொடிய அத்திருடனை நிறுத்துவேன்.

மன்னன் வசனம்

தவறு புரிந்து விட்டு தவணை கேட்கிறாய்

ஆசரியம்

ஆகெறுவம் ஆகெறுவம் அத்தனைக்கும் ஆச்சுதோ
ஆணவம் மிகுந்து போச்சோ.

நாற்புற சிற்றரசர் நாடியென் குடைகீழாய்
ஆணை கேட்டரசு செய்வார்.

தேவியின் சிலம்பினை தேர்ந்தெடுத்தபகரித்த
திருடனவன் உயிர் போக்கியே.

நாகெறுவமடக்கியே நானிலத்தவர் அஞ்சவே நாடு நகர் முற்றுமே
கேடனுயிர் வாடவே ஈனவதை செய்குவேனே

சிந்து

இப்படி துணிவு கொண்டானோ தீயவனும் இப்படி துணிவு
கொண்டானோ

தப்பிலி திருடனவன் பார் புகழு பாண்டி நாட்டில்
தப்பிலி திருடனவன் பார் புகழு பாண்டி நாட்டில்
ஈனமுறு இழி செயலால் கேடலுற எண்ணினானோ
(இப்படி)

தாரணியுள்ளோரறிய கூறு கூறதாக வெட்டி
தாரணியுள்ளோரறிய கூறு கூறதாக வெட்டி
ஈனனை வதைக்கவழி நானிதோ புரிகுவேனே...

வசனம்

பொற்கொல்லரே, திருடனை கண்டுபிடிக்கும் வரை சிலம்பிற்கு நீதான் பொறுப்பு. இல்லையேல் உன் தலை துண்டிக்கப்படும்...



## 9ம் காட்சி

**காட்சியமைப்பு: வீடு**
**பாத்திரங்கள்: கோவலன், கண்ணகி**

***சபையுரை: புதுவாழ்வு தொடங்குமுகமாக சிலம்பை விற்று வரும்படி கண்ணகி கணவன் கோவலனிடம் கொடுத்தல்.***

கோவலன் வசனம்

*அலையிடை பிறவா அழிழ்தே, நறுமலர் கோதையே, எங்கள் குலக்கொடியே உன் கோலம் காண என் நெஞ்சம் பதறுகிறது.*

கண்ணகி தரு

*மன்னனே என் இதயத்தின் தீபமே*
*மாங்கல்ய மகிமை தந்தோனே*
*பூதல செல்வம் நீங்கிய போதும்*
*பூவும் பொட்டுமாய் நிறைவுடன் வாழ்வேன்*

கோவலன் தரு

*மானே என் மாணிக்க முத்தே*
*மானிடர் போற்றும் கற்புடையாளெ*
*பதியென என் பாதம் கழுவினாய்*
*பாதகன் கண்ணீர் விட வைத்தேன்*

கண்ணகி தரு

*துன்பங்கள் துயரங்கள் நீங்கி*
*தூய்மையாய் நம் இல்லறம் ஓங்க*
*அன்பரே என் சிலம்பினை விற்று*
*கீர்த்தியாய் நாமும் வையகம் வாழ்வோம்*

வசனம்

*இந்த சிலம்பினை விற்று நம்மை இதுவரை பீடித்த*

கோவலன் வசனம்

*சிலம்பு அது ஒன்றுதான் கண்ணகி உன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கும்*
*ஆபரணம் கடைசியாக மிஞ்சியிருக்கும் அதையுமா ?*

தரு

*சாதமாய் நெல் அரிசியும் நெய்யும்*
*உண்டபின் வாயில் தாம்பூலம் ஊட்டி*
*சிலம்பினை விற்க பணிவுடன் பணிப்பது*
*தீயது போல் சஞ்சலம் கொண்டேன்*

கண்ணகி வசனம்

*ஏனிந்த அபசகுன வார்த்தைகள், துயரங்களை எதிர் கொண்டு துணிவுடன் துரத்தியடிப்போம், நம் இலட்சியங்கள் வாழ்வதற்கே வீழ்வதற்கல்ல.*

கோவலன் வசனம்

*கண்ணகி என் விருப்பப்படியே யாவற்றையும் அளித்தேன், இனி உன் மொழியை மீறமாட்டேன், கடைசியாக உன் காற்சிலம்பொலித்திட*

கோவலன் வேறு தரு

ராகம்: கீதவாணி | தாளம்: அடதாளசாப்பு

*ஆருயிர் கண்மணி குலம் வந்த செல்வியே*
*அழகு பாதமெடுத்து அன்னமென*
*காற்சிலம்பொலித்திட கடைசியாய் நடந்திடு*
*காதகன் பார்த்திடவே கண்ணாலே*

கண்ணகி வசனம்

*மதுரை ஆயர் பாடியில் நம் எதிர்காலம் சிறக்க மகிழ்வுடன் புதுவாழ்வு தொடங்குவோம்*

தரு

*முத்து பவளமும் மின்னு நகைகளும்*
*பாவையர் பெருமைக்கு அணியல்ல*
*அச்சமும் நாணமும் பெண்மையின் நிறைவாகும்*
*அக மகிழ்வாய் செல்வீர் தலைவா*

கோவலன் தரு

*ஞாயிறு திங்களோன் ஞானச்சுடர் போற்றி*

இருளழிந் - தொளிஎழவே நம் வாழ்வில்
கயல் மீனின் தாவலாய் காலடி வைத்திடு
பயணத்தின் பாதையாக ஒளியாய்

**(கண்ணகி காற்சிலம்பை கற்றி கொடுத்தபடி)**

கண்ணகி தரு

*அர்ச்சனை மல்லிகை மணமின்றி வாடுமுன்*
*அந்தியில் வந்திடுவீர் மகிழ்வாய்*
*வழி மீது விழி வைத்து உங்கள் நினைவாக*
*உறங்காது காத்திருப்பேன் அறிவீர்*

வசனம்

*சோதனைகள் நம் வாழ்வில் சூழ்ந்த போதும் துன்பத்தின் எல்லையை கடந்து*

கோவலன் வசனம்

*வான் தோன்றும் வளர்பிறையே. போகும் காரியம் சீக்கரம் முடிந்தால், மல்லிகை மலரல்ல மாங்காய் அழுகுமுன் வந்து விடுவேன்.*

கண்ணகி வசனம்

*இந்த விழியிரண்டும் உங்கள் வரவை நோக்கி விழித்திருக்கும்.*



## 10ம் காட்சி

காட்சியமைப்பு: பாதை

பாத்திரங்கள்: கோவலன், பொற்கொல்லர்

**சபையுரை: கோவலன் சிலம்பினைவிற்க நகருக்குச் சென்ற போது, அரண்மனை பொற்கொல்லரை சந்தித்து சிலம்பினை காண்பித்தல்.**

கோவலன் தரு

ராகம்: முகாரி | தாளம்: அட

*செந்தமிழ் மதுரையின்*
*சீர் வள சிறப்பினைக் காணவே*
*பாண்டி வேந்தனின் நீதியும்*
*பெருமையை வியந்திட லாகுமே*

வசனம்

*கூடல் நகரில் நாடக நங்கையரின் ஆடல் பாடலும், பண்ணின் இனிமைகளும் உள்ளத்தை கவருகிறது.*

தரு

*மாணிக்கக் சிலம்பினை*
*மலர் மகள் கறை போக்க நல்கினாள்*
*நானும் விரைவாக விற்றுமே*
*மனையாளை மகிழ்வுறக் காணுவேன்*

உரை

*சிலம்போ சிலம்பு, சிலம்போ சிலம்பு, சிலம்போ சிலம்பு...*

**(பொற்கொல்லர் வருதல்)**

பொற்கொல்லர் வசனம்

*யாரப்பா நீ, ஊருக்கு புதியவனோ? சிலம்பு விப்பதாய் கூறுகிறாய், நான் அரண்மனை பொற்கொல்லர்.*

கோவலன் வசனம்

*நுண்ணிய வேலைப்பாடுகளை செய்யும் பொற்கொல்லரைத்தான் நான் தேடி வந்தேன்.*

பொற்கொல்லர் வசனம்

*அப்படியா நல்லது, பழம் நழுவி பாலில் விழுந்துள்ளது. நீங்கள்?*

கோவலன் வசனம்

*கோவலனாகிய நான் சோழ நாட்டை சேர்ந்தவன், என் மனைவி கண்ணகியின் ஒற்றைச் சிலம்பை விற்க வந்துள்ளேன்.*

**(கோவலனிட மிருந்து சிலம்பை பொற்கொல்லர் வாங்கி பார்வையிடல்)**

பொற்கொல்லர் வசனம்

*ஆகா... இச்சிலம்பு மிகவும் அபூர்வமானது. அதுவும் அரசதேவியின் கால்களுக்கு அழகூட்டும் அணிகலன், எனவே அரண்மனைசென்று தேவிக்குப் பொருத்தமானதென விளக்கி வருகிறேன் - இங்கேயே இரும், இங்கேயே இரும்.*

**(கோவலனை மடத்தில் தங்கவைத்து விட்டு, பொற்கொல்லர் அரண்மனை புறப்படல்)**

பொற்கொல்லர் வசனம்

*நாடு விட்டு நாடு பிழைக்க வந்த இவனுக்கு, அரசியின் காற் சிலம்பு பற்றிய செய்தி தெரியுமுன், மன்னரிடம் சென்று களவு பற்றிய பழியை இந்த கோவலன் மீது சுமத்த வேண்டும்... ஆம் விரைவாக சென்று.*

பொற்கொல்லர் தரு

ராகம்: புல்லவராளி | தாளம்: அட

*ஏகிச்செல்வேனே ஏந்தலிடம் தீவிரமாக*

சிலம்பினை கோவலன் திருடி விற்றபோது
சிறந்த விதமாக அகப்பட்டதாய் மாற்றி
ஏற்றவிதமாக புனைந்தொரு கதை கூறி
என் தலை கொய்கிற பழிதனை மாற்றுவேன்

வசனம்

அங்கொன்றும், இங்கொன்றுமாய் கதை திரித்து

தரு

வஞ்சனை புரிந்திட நெஞ்சு துடிக்குது
அஞ்சிடில் நம்பாடு என்றுமே துன்பம்தான்
(அஞ்சிடில்)

வேண்டாத செயலொன்றால் வீழ்ந்திடும் என் தலை
ஆண்டாண்டு காலமாய் வறுமையில் வாழ்வதோ

வசனம்

கோவலனை சிலம்பு திருடியவனாக மாட்டிவைப்போம்.



## 11ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை
பாத்திரங்கள்- மன்னன், மந்திரி, தளபதி, பொற்கொல்லர்.

**சபையுரை: வினையானது வெளிப்படும் வேளையாய், பொய்மை கூற அரண்மனை சென்ற பொற்கொல்லர், அரசரிடம் சிலம்பு களவாடிய கோவலனை பிடித்து வைத்திருப்பதாக கூறல்.**

பொற்கொல்லர் வசனம்

*அரசே அடியேனை மன்னியுங்கள். (மண்டியிட்டு) திருடன் அகப்பட்டான், கன்னக் கோலின்றி மந்திரத்தால் துயில் படுத்தி, சிலம்பு களவாடிய கோவலனை பேரூரில் சிலம்புடன் தடுத்து வைத்திருக்கின்றேன்.*

அரசன் வசனம்

*பாருலகில் பாண்டியனின் வல்லமையை அறியாத அந்த புல்லுருவுவி யார்? புல் நுனியில் பூத்திருக்கும் பனியாய்க் கரைந்திட*

சந்தகம்

*அறநெறி தவறா ஆளுகை பூர்வீக*
*இயல் வள திருநாடு -*
*இசையுடன் நாடக இலக்கண செறிவுடன்*
*முத்தமிழ் ஓங்கிடவே -*
*புலியுறு மறவரை பூனையதாய் எண்ணி*
*புவியுள்ளோர் பதைக்க -*
*குடிமுதல் சுற்றமும் குற்றிளையோரும்*
*குறியீடறிந்திடவே*
*கோதை சிலம்பாடி கோலமது பூணும்*
*கொடியவன் தனை நீரும் -*
*கொற்றவன் ஆணையில் கொடிதாய் வதை செய்து*
*கொன்று வருவீரே*

வசனம்

*தளபதி, பொற்கொல்லர் அடையாளம் காட்டும் சிலம்பு வைத்திருக்கும் கள்வனை கொன்று வாருங்கள்.*

தளபதி உரை

*தங்கள் ஆணைபடியே செய்கிறேன்.*



## 12ம் காட்சி

காட்டசியமைப்பு: தங்கு மண்டபம்
பாத்திரங்கள்: பொற்கொல்லர், தளபதி, கோவலன், காவலர்

**சபையுரை: பொற்கொல்லரால் சிலம்பு திருடியவனென பொய்யுரைத்து, அடையாளம் காட்டப்பட்டு, கோவலன் கொலைக்களத்தில் மரணித்தல்...**

பொற்கொல்லர் வசனம்

*அதோ பாருங்கள் அங்கு உட்கார்ந்து இருப்பவன் தான் அரசியின் சிலம்பு திருடியவன்*

*(அருகில் சென்று) நன்றாகப் பார்த்து சொல், இது உன்னுடைய சிலம்புதானே?*

கோவலன் வசனம்

*ஆம் உங்களிடம் கொடுத்த சிலம்பு என்னுடையது தான்.*

பெற்கொல்லர் கவி

*மந்திர தந்திரத்தால் மயக்கியே*
*வியக்கும் வண்ணம் தோற்றத்தில்*
*பொருள் மிகுந்த கோத்திரனாக வந்து -*
*மாதேவி சிலம்பு தன்னை மர்மமாய் அபகரித்த*
*கோவலன் பாதகத்தை காவலா கண்டீர் மெய்யாய்.*

வசனம்

*பார்தீர்களா - உங்கள்முன் கூறி விட்டான், அரசியின் சிலம்பை தன் சிலம்பென.*

*இவன்தான் கள்வனென்பதற்கு வேறு சாட்சியம் வேண்டுமா?*

கேவலன் வசனம்

*நான் கள்வனா. என் மனைவி கண்ணகியின் சிலம்பைத்தானே உங்களிடம் தந்தேன். என் மீது ஏனிந்த கொடிய பழி.*

பொற்கொல்லர் வசனம்

*கண்ணகியின் சிலம்பென கள்வன் கதையளக்கிறான். பழியாம் பாதகமாம், பரிதாபப் படுகிறேன் கோவலா?*

தரு

ராகம்: ஆனந்தபைரவி | தாளம்: ஏகம்

*மண்டலத்தை ஆள் மகிபன்*
*மாதரசி சிலம்பு தன்னை*
*கோலமிட்டு அபகரித்த*
*கோவலனாம் கள்வன்*

கோவலன் வசனம்

*நான் தீவினையுடையோனோ, திருடனோ அல்ல, என்னை சுற்றி ஏதோ சதிவலை*

தரு

*கோவலன் நான் கள்வனல்ல*
*கோதை கண்ணகி சிலம்பு -*
*தர்ம நீதி தவறா தோங்க*
*மகிபன் முன் வாறேன்*

தளபதி வசனம்

*நல்லவனுக்குரிய இலக்கண முறையோடிருக்கிறாய், இழி மகனுக்குரிய குணம் உன்னிடம் தென்படவில்லை, ஆனாலும் தகுந்த சாட்சியங்களுடன் பொற்கொல்லர் நிரூபித்ததினால்.*

தரு

*பேரரசர் கோபமுற்று*
*பாவி உந்தன் சிரம் கொய்து*
*கொன்று வர ஆணை இட்டார்*
*கொடியவன் போல் காணோம்.*

பொற்கொல்லர் வசனம்

*நன்றாக நாடக மாடுகிறாய்*

தரு

மந்திர தந்திரமெனும்
மாமுறு மருந்து இட்டு
கள்ளமில்லா நல்லவன் போல்
பொய் முகம் கொண்டோனே

கோவலன் தரு

முடிவேந்தன் பாண்டியனும்
முறை நீதி தவறாதோன்
முகக்குறி தனை உணர்ந்து
முடிவுரைகள் சொல்வான்.

வசனம்

இமயத்தில் கயல் மீனை பொறித்து, வெண் கொற்றக் குடையின் கீழ் முரசறையும் பாண்டியன் ஆட்சியில் - நீதி முறைகேடு நடக்க நியாயமில்லை, என்னை மன்னன் முன் கொண்டு செல்லுங்கள்.

பொற்கொல்லர் வசனம்

மன்னரைத்தானே காண வேண்டும் வா, எங்களுடன்.

**(கோவலன் தொடர்ந்து செல்லல்)**

கோவலன் வசனம்

என்னை எங்கே அழைத்து செல்கிறீர்கள்.

பொற்கொல்லர் வசனம்

பைத்தியக்காரா! ஆண்டவனே வந்தாலும், இனிஉன் அழிவைத் தடுக்க முடியாது கொலைக் களத்தை நோக்கி.

கோவலன் வசனம்

பொற்கொல்லா வஞ்சகத் தனமாய் சதி செய்து, நினைத்ததை நிறைவேற்றத் துடிக்கிறாயே.

கண்ணகி, என் கண்ஷடல் நெருங்கும் இந்த வேளை

தரு

கண்ணகியே கற்பின் சக்தி வடிவே -
எனை கள்வனென காசினியோர் இகழ

திட்டமுற தீட்டினாரே சதியை - ஐயோ
தீயவனாய் தாயகத்தில் மரிக்க

காலமெல்லாம் கூடி வாழும் கனவை -
கண்ணே நீறுபட கேடு செய்தேன் நானே
அருவிமுல்லை அழகு மணி அணங்கே -
நெறி அகழளந்து தாழ்வு துயருற்றேன்

வசனம்

சோழப் பேரரசை விட்டு, என் சொந்தங்களை விட்டு, இந்தப் பழிச் சேற்றைப் பூசவா இங்கு வந்தோம்.

பெற்கொல்லர் வசனம்

சதிகாரா, உன் பித்தலாட்டம் போதும். நீ செய்த துரோகத் தனத்திற்காக மன்னர் கொலை செய்ய தீர்ப்பளித்து விட்டார்.

தளபதி வசனம்

ஆம். அரச ஆணைப்படி தண்டனையை நிறைவேற்ற வேண்டும் உன் கடைசி விண்ணப்பம்.

கோவலன் வசனம்

கடைசி எண்ணம் எதுவென கனிவுடன் கேட்கின்றீர், உங்கள் பாண்டிய மன்னன் மனித நேயமற்றவனா வழக்கெதுவுமின்றி என் வாழ்வை அழிக்க.

தரு

ராகம்: கனகப்பிரியா | தாளம்: அட்சரம்

தென்றலும் புயலாகி,
திசை மாறிய படகானேன்
பொய்மையும் உண்மையாகி
வந்து ஊழ்வினை சூழ்ந்ததுவே

பொற்கொல்லன் உரை

நீசத்தனம் புரிந்து விட்டு நீசனே நீலிக் கண்ணீர் வடிக்கிறாய், காலக் கணத்தில் களங்கம் புலப்படும்.

கோவலன் தரு

நீசனாய் பழியேற்க

*ஏன் நீதியே மௌனமானாய்*
*கண்ணகி உன் கணவன்*
*இங்கு கள்வனாய் களங்கமுறேன்.*

பொற்கொல்லர் வசனம்

*கோவலா உன் செயலை எண்ணி எனக்கே சினமாகிறது, கொற்றவருக்கு எப்படியிருக்கும். இது கண்ணீர் விடும் நேரமில்லை.*

கோவலன் தரு

*காரிருள் அவனியிலே,*
*கற்பின் அணிகலன் ஆனவளே*
*கலங்கரை விளங்கணைந்து*
*பாறை மோதிய படகானேன்*

வசனம்

*அன்புக்குரியவளே உன்னை வஞ்சித்த ஊழ்வினை என்னை சூழ்ந்தது. களங்கமாய் மறத்தழிழன் மடிகிறேன், சாவுக்கென சதி புரிந்த வல்லூறுகள் என்னைச் சுற்றி வட்டமிடுகின்றனவே ஐயஹோ...*

**(கோவலன் காவலரால் சிரம் கொய்து கொலை செய்விக்கப்படுகிறான்)**



## 13ம் காட்சி

காட்சியமைப்பு: வீடு
பாத்திரங்கள்: கண்ணகி, மாதரி, ஐயை

**சபையுரை: சிலம்பு விற்க சென்ற கணவனை எதிர்பார்த்து காத்திருந்த கண்ணகி துயரமுற்று வருந்தும் போது, குரவைக் கூத்து காணச் சென்ற ஐயை வந்து கோவலன் இறந்த செய்தி உரைத்தல்...**

கண்ணகி வசனம்

*என்றுமில்லாத வாறு துன்பப் பெருங் கடலில் ஓடமாய், நெஞ்சம் துடிப்பிழந்து துடிக்கிறதே, அழலின் வெம்மை பற்றி எரிகிறதே.*

தரு

ராகம்: புரவாளி | தாளம்: ஆதி

*தென் பொதிகை தென்றல் காற்றே - என்*
*தலைவனிடம் நிலையை சொல்வாயோ*
*கொடுங்கனவால் தூக்கமின்றி - கோர*
*நெருப்பாய் நெஞ்சு எரிகுதையோ*

வசனம்

*காலையில் கோலமிட்டு காத்திருந்தேன், கோலமிட்ட வாசலில் உங்கள் திருவடி இன்னும் பதியவில்லையே*

தரு

*உயிரே உம்மை காணாதேங்கி -*
*மழை காணா பயிராக ஆனேன்*
*பூச்சரங்கள் வாட லாச்சே - இன்று*
*இல்லையேனும் நாளை வருவாரோ*

மாதரி வசனம்

*குடத்திலிட்ட பால் உறையவில்லை, உறியில் வைத்த வெண்ணெய் உருகவில்லை, ஆட்டுக் குட்டிகள் அசையாமல் கிடக்கின்றனவே, இவைகளை நினைக்கும்போது...*

**(அப்போது மாதிரி மகள் ஐயை பதறியபடி வருதல்)**

மாதிரி வசனம்

*ஏன் மகளே பதறியபடி ஓடி வருகிறாய்?*

ஐயை வசனம்

*அம்மா, குரவைக் கூத்துக்கு சென்ற போது ஒரு செய்தி அறிந்தேன்.*

மாதிரி வசனம்

*அப்படி என்ன செய்தி?*

ஐயை வசனம்

*ஊரில் பேசிக் கொள்கிறார்கள், என்னால் சொல்லமுடியவில்லை, நினைக்கவே.*

கண்ணகி வசனம்

*அன்பான தோழி என் நெஞ்சம் பதறுகிறது, விரைவில் வருவதாக கூறிச் சென்ற என் கணவரும் வரவில்லை, என்ன பேசிக் கொள்கிறார்கள்.*

ஐயை வசனம்

*நான் எப்படி சொல்வேனம்மா (அழுகை) அரசியின் சிலம்பு திருடியதாக உங்கள் கணவனை*

கண்ணகி வசனம்

*என் சிலம்பைத்தானே விற்கச் சென்றார், அரசியின் சிலம்பென எப்படி! காத்திருந்து வாடிய என் முகத்தைப்பார், ஏதோ கூற நினைக்கிறாய், ஆனாலும் தயங்குகிறாய்.*

ஐயை வசனம்

*மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். அரசியின் சிலம்பை திருடியதாக குற்றஞ்சாட்டி அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பேசிக் கொள்கிறார்கள்.*

கண்ணகி வசனம்

*ஐயோ தெய்வமே, நமக்கு பொல்லாமை நேரவா இன்று பொழுது விடிந்தது. கோவேந்தன் பாண்டியன் உங்களுக்கு ஏனிந்த கொடும் வினை புரிந்தான்.*



## 14ம் காட்சி

**காட்சியமைப்பு: கொலைக் களம்**
**பாத்திரங்கள்: கண்ணகி**

***சபையுரை: கொலைக் களம் சென்ற கண்ணகி கணவன் கோவலன் நிலை கண்டு அலறித்துடித்தபடி, மதுரையின் தேவியாம் மதுராபதியை நோக்கி வேண்டுதல்.***

கண்ணகி வசனம்

*என் தெய்வமே! நான் என்ன செய்தேன், ஏனிந்தக் கொடுமை. பாடுபட்டுப் பிழைக்கலாமென நாடு விட்டு வந்தது, உங்கள் உயிர் கூடு விட்டுப் போகத்தானா?*

தரு

ராகம்: காம்போதி | தாளம்: ரூபகம்

*என் இதய ஒளிவிளக்கே -*
*என்ன கோர கோலமிது*
*நிலவு இல்லா வானுமில்லை -*
*நீங்களின்றி நானுமில்லை*

வசனம்

*என்னைத் தவிக்க விட்டு சென்றீர்களே*

தரு

*உற்ற சுற்றம் தனை இழந்தும் -*
*உயிர் இழக்க மதுரை வந்தீர்*
*உலகம் உமை தூற்றிடவே -*
*வினை விளையும் காலமிதோ*

வசனம்

*குற்றமற்ற உங்களை கள்வனாக்கி - என்*

தரு

*நினைவு எல்லாம் நெருப்பதாகி -*

நீண்ட துயில் நீங்கள் கொள்ள
அலைகடலுக் குறக்கம் உண்டோ -
அதர்மமும் நிமிர்ந்திடவோ

**(கண்ணகி புரண்டு அழுதல், மாதரி ஐயை வரல்)**

மாதரி வசனம்

*தாயே, விதியெனும் கொடியோன் சதியால், பூமியே வெறுமையாகி விட்டது. அறம் இழந்தமையால் நாட்டில் பெரும் துன்பமும் அவலமும் ஏற்படப் போகிறது.*

ஐயை வசனம்

*ஆமாம் அம்மா, பசுக்கள் எல்லாம் உடல் நடுங்கி கதறுகின்றன, அவைகளின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அறுந்து வீழ்கின்றன, இவை தீமையின் அறிகுறி தானே.*

**(கண்ணகி சினமுற்று வீறு கொண்டெழல்)**

கண்ணகி வசனம்

*மதுரையின் தேவியாம் மதுரா பதியெனும் நிலமடந்தையே, என் கணவன் கள்வனா?*

*அலைகடலே நீ அகிலத்தையும் சுற்றி வேலியாய் அரணமைத்த போதும், அண்டசராசரத்தையும் அவதானிக்கும் செங்கதிர் செல்வனாம் பகலவனே!*

*நீதான் அனைத்தையும் அறிந்தவன். உங்களைக் கேட்கிறேன், நீங்கள் அறிய என் கணவன் கள்வனா, சொல்லுங்கள் என் கணவன் கள்வனா...*

**(ஓர் ஒளிப்பிளம்பு தோன்றுதல்)**

அசரீரியாக ஒரு குரல்

*கருங்கயலாள் மாதரசியாம் கண்ணகியே! கோவலன் கள்வனல்ல, கோவலன் கள்வனல்ல, குற்றமற்ற உன் கணவனை கொன்ற இவ்வூரினை பெருந்தீ உண்ணப் போகிறது.*

கண்ணகி வசனம்

*அநியாய தீர்ப்பளித்த பாண்டியனை தலை குனிய வைக்கிறேன்.*

*என் உயிரே உங்களுக்காக இந்த உலகையே பேச வைக்கிறேன்.*



## 15ம் காட்சி

காட்சியமைப்பு: அரண்மனை.
பாத்திரங்கள்: வாயில் காவலர், கண்ணகி, பாண்டியமன்னன், கோப்பெருந்தேவி, மந்திரி, தளபதி, சான்றோர்.

**(வழக்குரை காதை)**

**சபையுரை: பாண்டியமன்னன் அவை சென்ற கண்ணகி வழக்குரைத்தல், தன் தவறினால் கோவலன் படுகொலை செய்யப்பட்டு இறந்ததை உணர்ந்த மன்னன், மனம் வருந்தி அவையிலே வீழ்ந்து உயிர் துறக்க, அரசி கோப்பெருந்தேவியும் அக்கணமே கணவனின் காலடியில் வீழ்ந்து இறக்கிறாள். வஞ்சினமுற்ற கண்ணகி தீவினையின் தகமையை அழிப்பேனெனக் கூறி தீக்கடவுளை வேண்டுதல்.**

1ம் காவலர் வசனம்

*யாரம்மா நீ! அரச சபை நடந்து கொண்டிருக்கிறது, அத்து மீறி நுழைகிறாய்.*

2ம் காவலன் வசனம்

*அனுமதியின்றி அவையினுள் செல்லமுடியாது.*

கண்ணகி வசனம்

*நெறியற்ற மன்னனின் முறையற்ற காவலரே, விடுங்கள் என்னை.*

**(கண்ணகி காவலரை கடந்து செல்லல்)**

பாண்டிய மன்னன் விருத்தம்

*அரண்மனைக் காவல்*
*அதனையும் மீறி,*

*ஆங்கார வடிவமே கொண்டு*
*விழிகளில் பெருநீர்*
*கையினிற் சிலம்பு*
*காரணம் ஏதென உரைப்பாய்...*

வசனம்

*கண்களில் கண்ணீர் மல்க, காவலரை மீறிவந்த காரிகையே நீதான் யாரோ?*

கண்ணகி அகவல்

*கொடு வதை செய்து, கொலையாணையிட்ட*
*கொற்றவா என்மொழி கேளாய் - அலறிய*
*ஆவின் அறமது காக்க மைந்தனை தேரினில் கொன்ற...*

*வெண்புறா காக்க - வெட்டியே தசையை*
*வேந்தனும் அளித்தொரு நீதி - புகன்றிடு சோழ*
*பூம்புகார் செல்வ பூவையான் கோவலன் மனைவி*

வசனம்

*கன்றை இழந்த பசுவொன்று கதறும் துயரால், தன்னுள்ளத்தை வருத்தி, தன்மைந்தனை அதே தேர்க்காலில் இட்டுக்கொன்ற சோழ மன்னனின், காவிரிப்பூம் பட்டினத்தின் வணிகப்பெருங் குடியோன் மசாத்துவானின் மகனே என் கணவன், என் சிலம்பை விற்க வந்த போது அநியாயத் தீர்ப்பினால் கொலையுண்ட கோவலன் மனைவி கண்ணகி யான் அறிவீராக.*

மன்னன் வசனம்

*ஓ! கோவலன் மனைவியா, திருடனைக் கொல்வது கொடுங்கோன்மையல்ல அது அரச நீதி.*

கண்ணகி வசனம்

*நியாயத்தை தெளிந்து செயலாற்ற தவறிய வேந்தனே! என் கணவன் கள்வனல்ல, உமது தீர்ப்புத்தான் நெறியற்றது.*

மன்னன் வசனம்

*உன் கணவன் களவாடிய சிலம்புடன் அகப்பட்டான், தண்டனையும் பெற்றான். கள்வனை குற்றமற்றவன் என்கிறாயா?*

கண்ணகி வசனம்

*நடந்தவற்றை ஆராயாது தீர்ப்பளித்த நீதான் கள்வன்.*

மந்திரி வசனம்

*பெண்ணே, அவையில் அடக்கம் வேண்டும். அரசி அணிந்திருப்பது உன் சிலம்பென நிரூபிக்க முடியுமா?*

கண்ணகி வசனம்

*நிரூபித்தால் அளித்த உயிரை மீட்டுத் தருவீர்களா! பேரவையின் சான்றோரே, திறை செலுத்தும் சிற்றரசே, நடுவமர்ந்த பெரியோரே, நல்ல தீர்ப்பை நீங்கள் கூறுங்கள்.*

தரு

ராகம்: சௌராட்டினம் | தாளம்: அடதளகாப்பு

*நீரோடையை கானல் நீராய் எண்ணி - நீதி*
*உண்மையை உணராது அவசர ஆணையேன்*
*சான்றோரவை கூடா தீர்ப்பு நெறியா!*

மந்திரி தரு

*மனமொடிந்து நீதி கேட்கும் அணங்கே - மன்னர்*
*தேவி சிலம்பினுள் தேனிழை முத்துக்கள்*
*துயரமின்றி சிலம்பு நிலை உரைப்பாய்*

கண்ணகி தரு

*மத்தளமும் முரசு ஒலி முழங்க - எங்கள்*
*மங்கல மணநாளில் மாணிக்க பரலிட்ட*
*காற்சிலம்பை கணவன் பரிசளித்தார்*

வசனம்

*கொடு வினையுறு கொற்றவனே. என் கணவன் கோவலன் வைத்திருந்தது கண்ணகி என் சிலம்பு, அதனுள் ஒலியிடும் பரல்கள் யாவும் மாணிக்கங்கள்.*

மன்னன் வசனம்

*பெண்ணே, உனது முறையீடை ஆராய்வோம். நமது சிலம்பு முத்துக்களால் நிறைந்தது, தேவி.*

அரசி வசனம்

*அரசே.*

மன்னன் வசனம்

*தேவி உமது பாதத்தில் அணிந்திருக்கும் சிலம்பை கழற்றிக் கொடு.*

**(அரசி சிலம்பைக் கழற்றி கொடுக்க, மன்னன் அச்சிலம்பை உடைக்க முத்துப் பரல்கள் சிதறுகின்றன)**

வசனம்

*பார்த்தாயா முத்துப் பரல்கள் சிதறுகின்றன*

ஆசரியம்

*கயலெழு இமயநெற்றி, அயல் கொள்ள புலி வில்லும்*
*ஆட்சிகொள் பொறியமைத்து -*
*தேமதுர தமிழோசை உலகமெல்லாம் போற்று*
*தமிழ்ச் சங்கம் அமைந்தமண்ணில் -*
*வேருக்கு இடமின்றி வீழ்த்திய எதிரியின்*
*ஓரத்தில் முளைத்த செடியாய் -*

வசனம்

*சதிகாரி*

தரு

ராகம்: பைரவி | தாளம்: ஆதி

*வேந்தன் நான் நீதி தவறியே*
*கோவலன் உயிரை அழித்தேனா -*
*சபை காண சிலம்பினை அறைந்தேன்*
*முத்துப்பரல் காண்பாய்*

கண்ணகி வசனம்

*முகவுரை அறிந்து முழக்கமிடும் மன்னவா, முடிவுரையை அறிவாயா!*

தரு

*சத்தியம் வாய்மை இழந்ததால்*
*சாதிக்க பெரிதாகத் துடிக்கிறாய் -*

*வினை கண்டு, சிலம்பது சிரிப்பது*
*உலகோர் உனைத் தூற்ற.*

வசனம்

*அரசனே, அதிகார மமதையில் ஆலவட்டம் போடாது, என் கணவனிடம் அபகரித்த அடுத்த சிலம்பை அடையாளப் படுத்துங்கள்.*

மன்னன் வசனம்

*எங்கே கள்வனிடம் கைப்பற்றிய சிலம்பை கொடுங்கள்.*

**(அரசன் அடுத்த சிலம்பை வாங்கியபடி)**

தரு

பாண்டிய மரபினில் இழுக்காக
மங்கையுன் மாங்கல்யம் பறித்தேனா -
மன்னவன் நீதி அறிந்திட
மறு சிலம் புடைத்தேன் பாராய்.

**(மன்னன் உடைத்த சிலம்பிலிருந்து மாணிக்கப் பரல்கள் சிதறுகின்றன, திகைத்த மன்னன் மண்டியிடுகிறான்)**

வசனம்

*ஆ. தெய்வமே! இது என்ன சோதனை, இவை மாணிக்க பரல்களா, மமதையில் மதியிழந்து தவறு செய்து விட்டேன்.*

கண்ணகி வசனம்

*அறம் காக்க முடியாதவனே, அன்று நீ ஆராய்ந்திருந்தால் இப்படி ஒரு தலை குனிவு ஏற்படுமா. இன்று இப்போது, உண்மைக்குத் போராடி உருகி ஓலமிட்டு மடிந்த, என் தெய்வத்தை தருவாயா?*

மன்னன் வசனம்

*இல்லை இல்லை, நானே கள்வன். குடிகளை அறமோங்க காத்துப் பேணும் பாண்டியராட்சி என்னால் பொய்த்து விட்டதே.*

கண்ணகி தரு

ராகம்: நீலாம்புரி | தாளம்: ரூபகம்

*மீன் கொடி மன்னவனே*

மேதினி இகழ்ந்திட பழியானாய் -
இங்கு உதிர்ந்தவை முத்து அல்ல
உயிராய்க் கலந்தவன் உதிரமே

வசனம்

*தென்னவர் குல சீர்மையும் செழுமையும் ஒளி இழக்க*

தரு

உயிரை அழித்தா யெந்தன்
உறவின் உணர்வினை அறிவாயோ
உந்தன் உயர்ந்த வெண் கொற் குடையும்
தமிழ் காத்த செங்கோலும் சரிந்ததே

வசனம்

*இன்னும் தெளிவு பெற, இதோ என் மறு சிலம்பின் பரல்களைப்பார்.*

**(அடுத்த சிலம்பை கண்ணகி உடைக்க, மாணிக்க பரல்கள் சிதறுதல்)**

மறு வசனம்

*முடி பொருந்திய மூவேந்தருள்ளும் படை விளங்கும் தடைக்கையுடைய பாண்டியனே!*

*பண்பிழந்த உனக்கொரு செங்கோல், சீருறும் சந்திர வட்டக் குடை, பெருமை இழந்த பின்பும் அரச இருக்கை.*

மன்னன் வசனம்

*நானே தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன், மதி இழந்த மன்னனுக்கு மணி மகுடமா, கொலை புரிந்த எனக்கு அறம் காக்கும் செங்கோலா, வேண்டாம்... நின்று கொல்லும் தெய்வமே.*

தரு

ராகம்: சங்கராபரணம் | தாளம்: ரூபகம்

கொற்றவன் நீதி தவறினேன் இந்த
கொலைப் பழி வந்து சூழ்ந்ததே
கொடி கொண்ட மூ வேந்தரும்
கோலோச்சிய அறம் அழிந்ததே

தாய் நாடே தமிழ் அன்னையே மிக
தாய்மையாய் பிழை மன்னிப்பாய்
பாவையாம் இப் பூவைக்கு
பாழ் புரிந்திட ஆணையிட்டேனே

தவறிய கொல்லன் பொய்யினால் எந்தன்
தலைமுறை நீதி பொய்த்ததே
கள்வனாய் இனி வாழ்திடேன் இந்தக்
கணத்தினில் ஆயுள் அழியவே

வசனம்

தாயே, பெண்மைத் தெய்வமாய் வடிவெடுத்து, சத்தியத்தை உலகிற்கு உணர்த்தினாய். நீதியை அதிகாரத்தால் வீழ்த்திய எனக்கு, உன் மூலம் காலம் கற்பித்த பாடம்.

தலை வணங்கி உன் தண்டனையை ஏற்கிறேன்.

**(பாண்டிய மன்னன் வீழ்ந்து மரணித்தல்)**

கோப்பெருந்தேவி வசனம்

ஐயோ அரசே, தென்னவர்குல பாண்டியராட்சி உங்கள் தவறு காரணமாக பொய்த்து விட்டதே என மனம் குமுறி உங்கள் ஆயுளை அழித்துக் கொண்டீர்களே.

தரு

ராகம்: காவியா | தாளம்: திரிவிடை

செய் தவறு தன்னை ஏற்று நீதி
தழைத்து ஓங்கி நிலைத்திடவே
அழித்த உயிர்க கீடதாக உங்கள்
உயிர் கொடுத்து ஈடு செய்தீர்

வளைந்த செங்கோல் நிமிர்திடவே பூவில்
தாழ்ந்த குடை உயர்ந்திடவே
அவமதிப்பு அகன்றிடவே மரித்து
மகிமையுற பெருமை கண்டீர்

வசனம்

பிரபு, நீதி காக்க குற்றத்தை ஏற்று சரித்திரமானீர்கள். உங்களோடு மரணத்தை ஏற்று நானும் வருகிறேன்.

**(பாண்டி மாதேவி மன்னனின் பாதங்களை வணங்கியபடி மரணித்தல்)**

கண்ணகி தரு

ராகம்: சங்கராபரணம் | தாளம்: ஏகம்

நான் மாடக் கூடல் நகரிலே -
நாதன் ஆருயிர் பிரிந்தது
அமங்கலி ஆகினேன்
ஆறுமோ மனம் தேறுமோ

கோனோடு கோப்பெருந் தேவியும் -
அறம் காத்திட மாண்டாலும்
பறித்தது களையல்ல
பாவையென் பயிர் வாழ்வைத்தான்


வசனம்

*நீதிக்கு முதல்வனென நெறி தவறாது ஆட்சி புரிந்த பாண்டிய மன்னனே, உன் கொடுமையால் ஏற்பட்ட காலத்தால் அழியாத கறையை, என் களங்கமற்ற கணவனின் உண்மையை உலகம் உணரும் வண்ணம், என் நெஞ்சிலே மூண்ட கனல் நெருப்பாகி, பொங்கும் கடலே பொருதி எழு*


*தீமைகளை அழிக்கும் தீயே! உனது கதிரொளியால் பாண்டிய மண்டலம் பற்றி எரியட்டும் - பரவி எங்கும் - எங்கும் எரியட்டும் - எரிந்து சாம்பலாகட்டும்.*

**(கற்பரசி கண்ணகியின் வேண்டுதலால் மதுரை மாநகர் தீப்பற்றி எரிதல்)**

*“வாழ்க தமிழ்”*



திரு. பழ. நெடுமாறன் அவர்களுடன் அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ்



கவிஞர் வைரமுத்து அவர்களுடன் அண்ணாவியார் சவிரிமுத்து மிக்கேல்தாஸ்